# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம்

வெள்ளி, ஆவணி (ஆகஸ்ட்) 10, 2018. இதழ் - 25


அரங்கம் செய்திகள் பத்திரிகையின் 25வது இதழ் இது. வாரப்பத்திரிகை ஒன்றைப் பொறுத்தவரை 25வது வாரம் என்பதை ஒரு அடையாளமாகக் கொள்ளலாமே தவிர, அது ஒரு சாதனை அல்ல.

ஆனால், போர் கடந்து, அதனால் அழிந்து போன கிழக்கு மண்ணில் பெருமளவு மக்களின் ஆதரவை குறுகிய காலத்தில் பெற்றதானது ஒரு மகிழ்வான அம்சம். பக்கம் - 03






## பண்டைய இலங்கையின் பாலியல் வழக்குகள்

பக்கம் - 09



## கரும்பு உடலுக்குள்ளா எல்.எம்.ஜி ரவைகள்?

உன் ஆயுளை எனக்குத் தந்துவிட்டு சின்ன வயதிலேயே நீங்கள் சீவியத்தை முடித்தது இன்னமும் முள்ளுக்குமேலேதான் படுப்பது மாதிரி இருக்கிறது..

பக்கம் - 16



## கருணாநிதி ஒரு சகாப்தம்

திராவிட இயக்கத்தலைவர்களில் முதன்மையாக இருந்த இன்னொருவரும் விடைபெற்று விட்டார். அரசியல், இலக்கியம், மொழி, தொலைக்காட்சித் செல்வாக்குச் செலுத்தியவர்

பக்கம் - 03



# ‘கிழக்கில் அனைத்து தமிழ் கட்சிகளும் இணைந்து போட்டியிடுவது பலன் தரும்’

சுரேஸ் பிரேமச்சந்திரன்

கிழக்கு மாகாணத்தை பொறுத்தவரை அனைத்து தமிழ் கட்சிகளும் ஒரேயணியில் இணைந்து போட்டியிடுவது அங்கு தமிழ் மக்களுக்கு அதிக ஆசனங்களை பெற்றுத்தர உதவும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ. பி. ஆர். எல். எ.்.ப் அமைப்பின் தலைவருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் கூறியுள்ளார்.

ஆனாலும், அப்படியான ஒரு கூட்டணியை ஏற்படுத்துவது சாத்தியமா? என்றும் அவர் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

கிழக்கில் உள்ள அரசியல் நிலைமைகள் வடக்கின் நிலைமைகளில் இருந்து வேறுபட்டவை என்று கூறும் சுரேஸ் பிரேமச்சந்திரன் அவர்கள், அங்குள்ள நிலைமைகளை பொறுத்தவரை தமிழ் மக்கள் தமது உறுப்புரிமைப் பலத்தை உறுதி செய்ய, அனைத்து தமிழ் கட்சிகளும் ஒரே அணியில் போட்டியிடுவது நல்லது என்று கூறுகிறார். வாக்குகள் பிரிபடாமல் தமிழ் மக்கள் அதிக உறுப்பினர்களை கிழக்கில் பெற்றிட அது உதவும் என்கிறார் அவர்.

ஆனால், தமிழ் தேசியக் கூட்டமைப்பு போன்ற கட்சிகள் அதற்கு ஆதரவு தராமல் போகும் பட்சத்தில், அது நல்ல பலன்களை தராமல், மாறாக, வாக்குகள் பெருமளவில் பிரிபட்டு பாதகத்தை ஏற்படுத்திவிடும் என்றும் அவர் எச்சரிக்கிறார். ஆகவே இந்த முயற்சியில் அனைத்து தமிழ் கட்சிகளும் இணைந்தால் மாத்திரமே சாதகம் உருவாகும் என்றார் சுரேஸ் பிரேமச்சந்திரன்.

தொடர்ச்சி... (பக்கம் -02)

## தமிழ் கட்சிகள் ஒரே இடத்தில் சந்திக்க ஏற்பாடு

அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளையும் இம்மாதம் 22 ஆம் திகதி ஒரேயிடத்தில் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை செய்வதாக கிழக்கு தமிழர் ஒன்றியம் அறிவித்துள்ளது.


கிழக்கில் தமிழ் கட்சிகள் இணைந்து வரும் மாகாணசபைத் தேர்தலில் ஒரே அணியில் போட்டியிடுவது குறித்து ஆராய்வதற்காகவே இந்தச் சந்திப்பை ஏற்பாடு செய்வதாகவும் கிழக்கு தமிழர் ஒன்றியம் தமது அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

எதிர்வரும் கிழக்கு மகாணசபைத் தேர்தலில் கிழக்குமாகாணத் தமிழர்களின் சார்பில் அதியுச்சபட்ச ஆசனங்களைப்

தொடர்ச்சி... (பக்கம் -02)

## ‘தனியார் முதலீட்டை ஈர்த்து, மட்டு.மாநகர சபையை விருத்தி செய்யத் திட்டம்’



மாநகர மேயர்
தியாகராஜா சரவணபவன்

தனியார் முதலீட்டை ஈர்ப்பதன் மூலம் மட்டக்களப்பு மாநகர சபை பகுதியை அபிவிருத்தி செய்வதற்கான திட்டம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளதாக மட்டக்களப்பு மாநகர சபையின் நகரபிதா தியாகராஜா சரவணபவன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில், குறிப்பாக நகரப் பகுதியில் இருக்கும் வளங்கள் இதுவரை எம்மவரால் முழுமையாக பயன்படுத்தப்படவில்லை என்று கூறிய சரவணபவன், அவற்றை முழுமையாக அடையாளம் கண்டு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தனியார் நிறுவனங்களின் முதலீட்டில் அவற்றை மக்களின் தேவைகளுக்கு பயன்படுத்த முயற்சிப்பதாக தெரிவித்துள்ளார்.

உதாரணமாக மட்டக்களப்பு வாவி(கடலேரி), இங்குள்ள சூரியசக்தி, கடற்கரை, நகரின் வரலாறு ஆகியவை மட்டக்களப்பின் முக்கிய வளங்களில் சில என்று கூறும் சரவணபவன், வாவியை மையப்படுத்தி அங்கு சுற்றுலாவை பலமடங்கு விருத்தி செய்யமுடியும் என்கிறார்.

சுற்றுலா முதலீட்டு நிறுவனங்களை ஈர்த்து, இந்தத் துறையில் முதலீடு செய்யச்செய்யும் பட்சத்தில், அதன் மூலம் நகருக்கும் நகரை அண்டி வாழும் மக்களுக்கும் அதிக வருமானத்தை பெறமுடியும் என்கிறார்.

அதேவேளை சூரிய சக்தியை பயன்படுத்தி நகரில் அடுக்கு மாடி வாகனத் தரிப்பிடம் ஒன்றை நிர்மாணிக்க திட்டமிடுவதாகவும் அவர் கூறுகிறார்.

இந்த விடயங்கள் தொடர்பில் மட்டுநகர் வந்த பாகிஸ்தான் மற்றும் ஜப்பான் நாட்டு பிரதிநிதிகளிடம் தான் சில ஆரம்பக்கட்டப் பேச்சுக்களை நடத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தத் திட்டத்தை விரைவில் ஆரம்பிக்கவுள்ளதாக கூறிய சரவணபவன், அதற்கான முன்னேற்பாடுகளில் மாநகரசபை தற்போது ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.




தொடர்ச்சி...


# ‘கிழக்கில் அனைத்து தமிழ் கட்சிகளும் இணைந்து போட்டியிடுவது பலன் தரும்



அப்படியான வாய்ப்பு இல்லாத சந்தர்ப்பத்தில் இந்த பிரச்சினையை கையாள வேறு இரு மாற்று வழிகள் இருப்பதாகவும் அவர் கூறுகிறார்.

ஒன்று, இதற்கு மாற்றாக வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைவது கிழக்கு தமிழர்களுக்கு நல்ல பலனைத் தரக்கூடும் என்றும் அவர் கூறுகிறார். அதேவேளை வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைய முடியாத ஒரு சூழ்நிலையில், கிழக்கில் இணையாத தமிழ் பிராந்தியங்களை உள்ளடக்கிய ஒரு தனி மாகாண அலகு உருவாக்கப்பட வேண்டும் என்றும் சுரேஸ் பிரேமச்சந்திரன் கூறினார்.

## வைத்திய நிபுணர்கள் இடமாற்றம்




கிழக்கில் புகழ்பூத்த கல்முனை ஆதாரவைத்தியசாலையில் அருஞ்சேவையாற்றிய இரு வைத்தியநிபுணர்கள் இடமாற்றத்தில் செல்ல பதிலுக்கு இரு வைத்திய நிபுணர்கள் வருகைதந்துள்ளனர்.

ஏலவே சேவையாற்றிய இருவரை வழியனுப்பும் வைபவமும் புதியவர்களை வரவேற்கும் நிகழ்வும் வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியகலாநிதி டாக்டர் இரா.முரளீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

சத்திரசிகிச்சை நிபுணராக கடந்த 4 ஆண்டுகாலம் கல்முனை ஆதாரவைத்தியசாலையில் சிறந்த சேவையாற்றிய வைத்தியகலாநிதி டாக்டர் த.நிமலரஞ்சன் இடமாற்றலாகி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குச் செல்கிறார். அவரது இடத்திற்கு முல்லைத்தீவு மாவட்ட பொதுவைத்தியசாலையில் சேவையாற்றிய சத்திரசிகிச்சை நிபுணர் வைத்தியகலாநிதி டாக்டர் எஸ்.சிறிநீதன் இடமாற்றலாகி கல்முனை ஆதாரவைத்தியசாலைக்கு வந்துள்ளார்.

அதேபோன்று சிறுபிள்ளைவைத்திய நிபுணராக கடந்த 2 ஆண்டுகாலம் கல்முனை ஆதாரவைத்தியசாலையில் சேவையாற்றிய வைத்தியகலாநிதி டாக்டர்.எம்.ஐ.றிபாயா இடமாற்றலாகி பொலன்னறுவை பொது வைத்தியசாலைக்குச் செல்கிறார். அவரது இடத்திற்கு நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் சேவையாற்றிய சிறுபிள்ளைவைத்திய நிபுணர் வைத்தியகலாநிதி டாக்டர் டி.எம்.பி. சமன்குமார கல்முனை ஆதாரவைத்தியசாலைக்கு வந்துள்ளார்.

(காரைதீவு நிருபர் சகா)

## நந்தவன சித்திவிநாயகரின் வேட்டைத்திருவிழா



காரைதீவு ஸ்ரீ நந்தவன சித்திவிநாயகர் தேவஸ்தானத்தின் வருடாந்த ஆடி மஹோற்சவப் பெருவிழாவையொட்டிய வேட்டடைத்திருவிழா நேற்று(8) மாலை காரைதீவு கொம்புச்சந்தியில் சிறப்பாக நடைபெற்றது. கடந்த 02ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய உற்சவம் 10 நாட்கள் திருவிழாக்கள் இடம்பெற்று நாளை 11ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையும். நேற்றுமாலை வேட்டைத்திருவிழாவின் போதான காட்சிகளைக்காணலாம்.

(படங்கள் காரைதீவு நிருபர் சகா)

## உதைபந்து சம்பியன் திருகோணமலை



திருகோணமலை வளர்ந்தோர் உதைபந்து கழகம் நடத்திய 14 வயதுக்கு உட்பட்ட மாணவர்களுக்கான போட்டியில் ஜமாலியா முஸ்லிம் மகா வித்தியாலயம் சம்பியனானது. ஏகாம்பரம் விளையாட்டு மைதானத்தில் சனிக்கிழமை 2018.08.04 இச்சுற்றுப்போட்டி நடைபெற்றது. உவர்மலை விவேகானந்தா கல்லூரி, வித்தியாலோக ராஜகீய வித்தியாலயம். ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, விபுலானந்தா கல்லூரி, ஜமாலியா முஸ்லிம் மகா வித்தியாலயம் என்பன இதில் பங்கு கொண்டன. லீக் அடிப்படையில் முதல் சுற்று நடத்தப்பெற்று அதில் தெரிவாகிய நான்கு பாடசாலைகளுக்கு இடையே விலகல் முறையில் போட்டி நடைபெற்றது.

முதலாவது அரையிறுதி போட்டி வித்தியாலோக ராஜகீய வித்தியாலயத்திற்கும் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்றது. இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறாத நிலையில் பெனால்டி உதைகள் வழங்கப்பட்டன. இதில் கோணேஸ்வரா இந்துக் கல்லூரி 3 கோல்களையும், ராஜகீய வித்தியாலோக வித்தியாலயம் கோல்கள் எதனையும் பெற்றுக் கொள்ளாத நிலையில் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி வெற்றி பெற்றது.

இரண்டாவது அரையிறுதி போட்டி ஜமாலியா முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கும் விபுலானந்தா கல்லூரிக்கும் இடையே நடைபெற்றது. இதில் ஜமாலியா முஸ்லிம் மகா வித்தியாலயம் 2 : 0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இறுதிப்போட்டி ஜமாலியா முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கும் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்றது. இதில் ஜமாலியா முஸ்லிம் மகா வித்தியாலயம் 2 : 0 என்ற கோல் கணக்கில் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியை வெற்றி கொண்டு சம்பியனாது.

(கதிரவன் திருகோணமலை)

## மனிதன் - யானை மோதல் = இழப்பு உச்சம்



இலங்கையில் யானைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான மோதலில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு கடந்த 5 வருடங்களில் 375 மனிதர்களும் 1100 யானைகளும் கொல்லப்பட்டதாக அமைச்சரவை பேச்சாளர் கயந்த கருணாதிலகவை ஆதாரம் காட்டி வெளிநாட்டு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மனிதர்களையும், காட்டு யானைகளையும் பாதுகாக்கும் நோக்கில், தேசிய பூங்காக்கள், பலவீனமான கிராமங்களின் ஓரமாக மின்சார வேலிகளை மேலும் விரிவு படுத்தவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஏற்கனவே உள்ள வேலிகளை நவீனப்படுத்துவதுடன், வேலைகளை மேலும் 50 வீதம் நீட்டிக்க உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

# ரஷ்யா மீது அமெரிக்கா புதிய தடைகள்



பிரிட்டனில் உள்ள முன்னாள் ரஷ்ய உளவாளி மீது நரம்பு மண்டலத்தை பாதிக்கும் நோவிசோக் எனும் நச்சுப்பொருளால் தாக்குதல் நடத்தப்பட்டதா என்பது தீர்மானிக்கப்பட்டபிறகு ரஷ்யா மீது தாங்கள் புதிய தடைகளை விதிக்கப் போவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

முன்னாள் ரஷ்ய உளவாளியான சேர்கெய் ஸ்கிரிபால் மற்றும் அவரது மகள் யூலியா கடந்த மார்ச் மாதத்தில் சாலிஸ்பர்ரி நகரில் நினைவிழந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டனர்.

இந்தத் தாக்குதலால் தீவிரமாக பாதிக்கப்பட்ட இருவரும் மருத்துவமனையில் பல வாரங்கள் அளிக்கப்பட்ட சிகிச்சைக்குப்பின் மீண்டனர்.

இந்த தாக்குதலுக்கு ரஷ்யாவே காரணமென்று ஒரு பிரிட்டன் புலனாய்வு அமைப்பு குற்றம் சாட்டியது. ஆனால், இந்த குற்றச்சாட்டுக்களை ரஷ்யா கடுமையாக மறுத்தது குறிப்பிடத்தக்கது.

புதன்கிழமையன்று வெளியிடப்பட்ட அறிக்கையொன்றில், இந்த சம்பவம் தொடர்பாக ரஷ்யா மீது தடைகள் விதிக்கும் நடவடிக்கையை அமெரிக்கா செயல்படுத்தவுள்ளதாக அந்நாட்டு அரசுத்துறை உறுதி செய்துள்ளது.

## இந்தோனேசியாவில் மீண்டும் பூகம்பம்



கடந்த ஞாயிற்றுக்கிழமை பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட இந்தோனேசியாவில் மீண்டும் நில அதிர்வுகள் தாக்கியுள்ளன. முன்னைய பூகம்பத்தில் பாதிக்கப்பட்டவர்களை, பலியானவர்களை தேடும் பணி தொடர்ந்த வேளையிலேயே அடுத்த அதிர்வும் தாக்கியமை அங்கு பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

6.2 அளவு கொண்ட புதிய பூகம்பத்தால் பல வீடுகள் வீழ்ந்துள்ளன.

முன்னைய பூகம்பத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளை கொண்டு சேர்ப்பதற்கான முயற்சியில் உதவிப் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

முன்னைய பூகம்பத்தில் 131 பேர்வரை இறந்ததாக செஞ்சிலுவைச் சங்கம் கூறியுள்ளது.

சில கிராமங்கள் முற்றாக அடைபட்டுள்ளதாக லொம்பொக்கில் உள்ள செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி...

## தமிழ் கட்சிகள் ஒரே இடத்தில் சந்திக்க ஏற்பாடு

பெற்றுக்கொள்ளும் வகையில் சகல தமிழ் அரசியல் கட்சிகளையும் ஒரு பொதுச்சின்னத்தின் கீழ் ஒன்றிணைத்து ஒரே அணியில் போட்டியிட வைப்பதற்கான முயற்சியின் முதற்கட்டமாக அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளுடனும் தனித்தனியே பேசி அக்கட்சிகளின் நிலைப்பாடுகளை அறிந்துள்ளோம்.

பல கட்சிகள் பொதுச்சின்னத்தின் கீழ் இணைந்து போட்டியிடச் சம்மதித்துள்ளன. சில கட்சிகள் பொதுச்சின்னத்தின் கீழ் இணையாவிட்டாலும் இம்முயற்சியை வரவேற்று ஆதரவளிக்க முன்வந்துள்ளன. ஒரிரு கட்சிகள் கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் வேண்டுகோளைப் பரிசீலிப்பதாகக் கூறியுள்ளன.

இந்த நிலையில் இம்முயற்சியின் அடுத்த கட்டமாக அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளுடனும் ஒரே இடத்தில் ஒன்றாக அமர்ந்து பேச கிழக்குத் தமிழர் ஒன்றியம் உத்தேசித்துள்ளது. இச்சந்திப்பு இம்மாதம் 22.08.2018 புதன்கிழமை மட்டக்களப்பில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பெற்றுள்ளன. இதற்கான அழைப்புக்கடிதங்கள் சில தினங்களில் அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் அனுப்பி வைக்கப்பெறவுள்ளன.

இவ்வாறு கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் மட்டக்களப்பு மாவட்ட செயற்குழுத் தலைவர் பேராசிரியர் மா.செல்வராசா அவர்கள் தெரிவித்தார்.

## அரங்கம் செய்திகள் 25



அரங்கம் செய்திகள் பத்திரிகையின் 25வது இதழ் இது. வாரப்பத்திரிகை ஒன்றைப் பொறுத்தவரை 25வது வாரம் என்பதை ஒரு அடையாளமாகக் கொள்ளலாமே தவிர, அது ஒரு சாதனை அல்ல.

ஆனால், போர் கடந்து, அதனால் அழிந்து போன கிழக்கு மண்ணில் பெருமளவு மக்களின் ஆதரவை குறுகிய காலத்தில் பெற்றதானது ஒரு மகிழ்வான அம்சம்.

சென்ற இடமெல்லாம் எமக்கு பெரு வரவேற்புக் கிடைத்துள்ளது. உள்நாட்டில் கிராமம் கிராமமாக மாத்திரமன்றி புலம்பெயர் நாடுகளிலும் நல்ல வரவேற்பை அரங்கம் சம்பாதித்துள்ளது.

அண்மையில் நான் லண்டனுக்கு சென்ற போதுகூட அங்கு வாழும் தமிழர்கள் (மட்டக்களப்பு மக்கள் மாத்திரமல்ல) மிகச் சிறந்த வரவேற்பை தந்திருந்தார்கள்.

இலவசமான எமது பத்திரிகை விநியோகத்துக்கு உதவ பல நண்பர்கள் முன்வந்திருக்கிறார்கள். அது எம்மை மிகவும் உற்சாகப்படுத்தியுள்ளது.

இந்த உற்சாகம், ஏற்கனவே கிழக்கு மாகாணத்திலும் கொழும்பிலும் கால்பதித்துள்ள எம்மை, வடக்கு மற்றும் மலையகப் பகுதிகளையும் நோக்கி ஈர்க்கிறது. விரைவில் யாழ்ப்பாணம் உட்பட வடக்கு நோக்கி வருவோம். அதனை தொடர்ந்து அரங்கம் மலையகக் காற்றை சுவாசிக்க மலையகத்திலும் கால்பதிக்கும்.

இந்த ஆரம்ப வெற்றிகளுக்கு எமக்கு உதவியவர்கள், எமது நண்பர்கள், எமது அலுவலக பணியாளர்கள் மற்றும் மிகவும் முக்கியமாக எமக்கு ஆக்கங்களை தருகின்ற உறவுகள். எமது வெற்றிகளுக்கு ஈடில்லா ஆதரவை தந்தவர்கள் எமது எழுத்தாளர்கள், செய்தியாளர்கள். அனைத்து துறைகள் சார்ந்த அவர்களது ஆக்கங்கள் மக்களை வெகுவாக கவர்ந்துள்ளன. பல்துறை சார்ந்து மிளிரும் பத்திரிக்கம் பேரெடுத்துள்ளது.
எமது மண்ணுக்கு தேவையான பல புதிய விடயங்களை பேசவிருக்கின்றோம். செல்ல வேண்டிய பாதையும் நெடியது. உங்கள் ஆதரவு எம்மை வழி நடத்தட்டும்.

**பூபாலரட்ணம் சீவகன்**

# கருணாநிதி ஒரு சகாப்தம்



**கருணாகரன்**

திராவிட இயக்கத்தலைவர்களில் முதன்மையாக இருந்த இன்னொருவரும் விடைபெற்று விட்டார். அரசியல், இலக்கியம், மொழி, பண்பாடு, சமூக மேம்பாடு, சினிமா, தொலைக்காட்சித் தொடர் எனப் பல துறைகளில் செயற்பட்டுத் தமிழ்ப் பரப்பில் பேராளுமையாகச் செல்வாக்குச் செலுத்தியவர் கலைஞர் என்றழைக்கப்படும் மு. கருணாநிதி.

திருக்குவளை என்ற சிறிய ஊரில் பிறந்த கருணாநிதி, 14 வயதிலேயே அரசியல் ஈடுபாட்டோடு பொது வெளியில் இயங்கியதாக அவருடைய வரலாற்றுப் பதிவான “நெஞ்சுக்கு நீதி” சொல்கிறது. ஆனாலும் 20 வயதுக்குப் பிறகே கருணாநிதியின் அரசியல் அடையாளம் துலக்கமடைந்திருக்கிறது. பெரியார் ஈ.வெ. ராமசாமியின் நீதிக்கட்சி பின்னாளில் திராவிட இயக்கமாகப் பெயர் மாற்றம் பெற்றுச் செயற்படத் தொடங்கிபோது, அதில் அண்ணாத்துரையோடு கருணாநிதியும் இணைந்து செயற்பட்டார். பெரியாருக்கும் அண்ணாத்துரைக்கும் இடையிலான கருத்து வேறுபாடுகள் திராவிட இயக்கத்திலிருந்து அண்ணாத்துரையை தனித்துச் செல்லும் நிலையை உருவாக்கின. அப்பொழுது அண்ணாத்துரையோடு கருணாநிதியும் கூடவே எம்.ஜி.ஆரும் பெரியாரை விட்டுப் பிரிந்து சென்றனர். தி.மு.க உருவானது. அதில் அண்ணாத்துரைக்கு கருணாநிதியும் எம்.ஜி.ஆரும் இரண்டு கரங்களாக இருந்தனர்.

**கருணாநிதியை, தமிழக யதார்த்தத்தை இலங்கைத் தமிழர் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை**

அண்ணாத்துரையின் மறைவுக்குப் பிறகு கருணாநிதியே தி.மு.கவின் தலைவரானார். கருணாநிதி இறக்கும் வரையில் அவரே தி.மு.கவின் தலைவர். ஏறக்குறைய 50 ஆண்டுகள் ஒரு பெருங்கட்சியின் தலைமைப் பொறுப்பிலிருந்திருக்கிறார் கருணாநிதி. இந்திய அளவில் மட்டுமல்ல, உலகிலேயே இந்தளவு காலம் ஒரு பெரிய கட்சியின் தலைமைப்பொறுப்பில் ஒருவர் இருந்திருப்பதென்பது அபூர்வமே. இது ஜனநாயகம் குறித்த கேள்விகளையும் புதிய அரசியல் சிந்தனை, புதிய தலைமுறையினருக்கு இடமளித்தல் பற்றிய விமர்சனங்களையும் உண்டாக்கினாலும் எந்தக் குழப்பங்களும் இல்லாமல் கருணாநிதியின் தலைமைத்துவத்தை அவருடைய மரணம் வரையில் தி.மு.க ஏற்றிருக்கிறது.

இடையில் கட்சியை விட்டு முக்கிய ஆளுமைகளான எம்.ஜீ.ஆர், வை.கோபால்சாமி போன்றவர்கள் வெவ்வேறு காலகட்டங்களில் வெளியேறியிருந்தாலும் தி.மு.க என்ற பெருங்கட்சி ஆடிப்போய் விடவில்லை. அதன் மூலம் கருணாநிதி ஐந்து தடவைகள் தமிழ் நாட்டின் முதலமைச்சராக இருந்திருக்கிறார். இந்திய மத்திய அரசோடு பல தடவைகள் வலுவான கூட்டு வைத்திருக்கிறார். இப்போது கூட தமிழ்நாடு சட்டசபையில் 100 வரையான சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட பலம் மிக்க எதிர்க்கட்சியாகவே தி.மு.க உள்ளது. 95 வயதில் கருணாநிதி இறக்கும்போது கூட அவர் சட்டமன்ற உறுப்பினராகவே இருந்தார். மட்டுமல்ல, சட்டமன்ற உறுப்பினராக அரசியலில் பதவி வகித்த காலத்திலிருந்து ஒரு தடவை கூட தோல்வியைச் சந்திக்காமலே தன் மரணத்தைச் சந்தித்திருக்கிறார்.

திராவிட இயக்கப்பாரம்பரியத்திலிருந்து வந்த கருணாநிதி, பெரியார், அண்ணாத்துரை ஆகியோரின் அரசியல் சித்தாந்தங்களையும் செயற்பாட்டுத்திட்டங்களையும் தொடர்ந்து கடைப்பிடித்தவர். தேர்தல் அரசியல் நிர்ப்பந்திக்கும் சமரசங்களை முடிந்தவரை ஒதுக்கி விட்டு திராவிடச் சிந்தனையை செயல்வடிவமாக்க முயன்றவர். கருணாநிதியின் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட – வலுவூட்டப்பட்ட திட்டங்களின் பட்டியலைப் பார்த்தால் இது சுலமாகப் புரியும். (பட்டியல் மிக நீண்டது. ஆச்சரியம் தருவது)

இதையெல்லாம் செய்வதற்கு அவர் அரசியல் ரீதியாக எதிர்கொண்ட நெருக்கடிகள் கொஞ்சமல்ல. அரசியலில் மட்டுமல்ல, கருணாநிதி செயற்பட்ட ஏனைய துறைகளிலும் அவருக்குச் சாதக நிலைகளும் பாதகங்களும் இருந்தன. அவற்றையெல்லாம் தன்னுடைய திறனால் வென்று சாதனையாளரானார்.

ஆகவே கருணாநிதி வலுவாகச் செயற்பட்ட 75 ஆண்டு கால அரசியல், கலை, இலக்கிய, மொழி சார்ந்த செயற்பாடுகள் என்பது சாதாரணமானதல்ல. தமிழக வரலாற்றோடும் உலக அளவில் தமிழ்ச்சமூகத்தின் கருத்துநிலை, வாழ்க்கை, அரசியல் போன்றவற்றோடும் பின்னிப் பிணைந்தது.

கருணாநிதியும் ஈழப்போராட்டமும்:

ஆனால், கருணாநிதியின் பிந்திய காலத்தில் அவர் பல்வேறு விமர்சனங்களுக்கும் உள்ளானார். குறிப்பாக ஈழப்போராட்டம் சார்ந்து அவர் மீது வைக்கப்படும் குற்றச்சாட்டுகளும் கண்டனங்களும் மிகக் கடினமானவையாக உள்ளன. கருணாநிதியின் இறப்புக்கு இரங்கல் தெரிவித்து வடமாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரன் வெளியிட்டுள்ள அறிக்கையிலும் கருணாநிதியின் ஈழப்போராட்டத்துக்கான ஆதரவு நிலைப்பாட்டைப் பற்றிய கவலைகளையும் உள் விமர்சனங்களையும் முன்வைத்ததைக் காணமுடிகிறது. இதை விட ஈழத்தமிழர்களில் ஒரு சாரார் கருணாநிதியை மிகக் கீழான முறையில் பழித்துரைத்துள்ளனர். இது தவறு. ஏற்றுக்கொள்ளவே முடியாதது.

இதற்கு வலுவான இரண்டு காரணங்களைச் சொல்ல முடியும். ஒன்று 1958 இல் இலங்கையில் தனிச்சிங்களச்சட்டம் கொண்டு வரப்பட்டபோது அதை எதிர்த்து தி.மு.கவின் சிதம்பரம் மாநாட்டில் தீர்மானம் கொண்டு வந்தவர் கருணாநிதி. பிறகு 1983 இல் இலங்கையில் நடந்த இன வன்முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, தன்னுடைய சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்தவர். 1986 இல் இந்தியத் தலைவர்களை ஒருங்கிணைத்து, ஈழவிடுதலைப்போராட்டத்துக்கு ஆதரவான ரெஸோ மாநாட்டை மதுரையில் நடத்தியவர். 1991 இல் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படுகிறார் என்று குற்றம் சுமத்தப்பட்டு ஆட்சிக் கலைப்பை எதிர்கொண்டவர். இப்படிப் பல பங்களிப்புகள் இதில் உண்டு.

இரண்டாவது, ஈழவிடுதலை இயக்கங்கள் தமிழ் நாட்டில் உண்டாக்கிய வன்முறை, நெருக்கடிகள் எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டு தொடர்ந்தும் இலங்கைத் தமிழர்களின் அரசியல் தீர்வைக் குறித்து அக்கறை கொண்டிருந்தவர். ஒரு போதுமே தி.மு.க இலங்கை அரசுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்ததில்லை. அந்தளவுக்கு தெளிவான அரசியல் புரிதலும் உச்ச சகிப்புத்தன்மையும் கொண்டிருந்தவர். கருணாநிதியின் அரசியல் பற்றிய விமர்சனங்கள் ஏராளமாக உண்டு. 75 ஆண்டுகாலம் பல துறைகளில் முதன்மையாளராக இருந்து செயற்பட்ட ஒருவரின் மீது பல விமர்சனங்கள் இருந்தே தீரும்.

ஆனால் அதற்காக அவரை எளிதில் அவரவர் தமது கணக்குப் பெட்டிக்குள் போட்டு விட முடியாது. குறிப்பாக ஈழத்தமிழர்களுடைய அரசியற் பாரம்பரியத்துக்கும் கருணாநிதி – தி.மு.கவின் அரசியல் பாரம்பரியத்திற்குமிடையில் பெரும் வேறுபாடுகள் உண்டு. இந்த வேறுபாடுகளில் உள்ள தவறே கருணாநிதியின் மீதான கடுமையான விமர்சனங்களுக்குக் காரணமாகின்றன. ஈழ விடுதலை அரசியலின் குறைபாடுகளை அல்லது அதன் மாற்றுச் சிந்தனையை புரிந்து கொண்டவர்கள் கருணாநிதியின் மீது மதிப்பையே கொண்டுள்ளனர். அவர்களித்திலும் விமர்சனங்கள் இருந்தாலும் கருணாநிதியை மறுப்பதோ நிராகரிப்பதோ அவர்களிடம் இல்லை.

**தவறான கணக்குகளை தொடர்ச்சியாகப் போட்டுவந்த ஈழத்தமிழர்**

ஈழத்தமிழர்களின் பெரும்போக்கு அரசியல் எப்போதும் சமூக அக்கறை கொண்டதாக இல்லை. சமூக மாற்றத்தைக் குறித்ததாக இருந்ததில்லை. இனவாதத்தைக்

தொடர்ச்சி... (பக்கம் -20 )

# அம்பாறை மாவட்டத் தமிழர்கள் : (ஓர் அரசியல் வெட்டுமுகம்) பகுதி 13



தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்

1989ல் நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தலே 1978 இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அரசாங்கத்தினால் புதிதாக நிறைவேற்றப்பெற்ற, நிறைவேற்று ஜனாதிபதி முறைமையிலான அரசியலமைப்பில் அறிமுகம் செய்யப்பெற்ற விகிதாசார தேர்தல் முறைமையின் கீழான முதலாவது பாராளுமன்றப் பொதுத்தேர்தல் ஆகும். “தேர்தல் மாவட்ட” ரீதியாக நடைபெற்ற இத்தேர்தலில் வடகிழக்கில் தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்), ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி (ஈ.என்.டி.எல்.எவ்), தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) என்பன ஒன்றிணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதய சூரியன் சின்னத்தில் ஓரணியில் போட்டியிட்டன. அம்பாறை மாவட்டத்திலும் (திகாமடுல்ல தேர்தல் மாவட்டம்) அவ்வாறு போட்டியிட்டன. வடக்கின் எல்லா தேர்தல் மாவட்டங்களிலும் தமிழர் விடுதலை கூட்டணியை எதிர்த்து தமிழீழ விடுதலைப் புலிகளின் பின்புலத்தில் ஈழவர் ஜனநாயக முன்னனி (ஈரோஸ்) சுயேற்சைக்குழுக்களை நிறுத்தியது. ஆனால் அம்பாறை மாவட்டத்தின் களநிலை கருதி இம்மாவட்டத்தில் ஈரோஸ் போட்டியிடவில்லை. ஈரோஸ் இத்தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடாமல் விட்டமை அறிவுபூர்வமானதும் அம்பாறை மாவட்டத் தமிழர்கள் மீது அக்கறை கொண்டதுமானதோர் அரசியல் செயற்பாடாகும். ஏனெனில் விகிதாசாரத் தேர்தல் முறையின் கீழும் அம்பாறை மாவட்டத்திலிருந்து ஒரேயொரு தமிழ்ப் பிரதிநிதித்துவமே கிடைக்க வாய்ப்பிருந்தது. பல தமிழ் கட்சிகள் போட்டியிட்டுத் தமிழர்களின் வாக்குகள் பல தமிழ் கட்சிகளுக்கும் பங்கிடப்படுமானால் அந்த ஒரேயொரு தமிழ்ப் பிரதிநிதித்துவமும் பறிபோய்விடக்கூடிய அரசியல் ஆபத்து இருந்தது. ஈரோஸ் இதனை உணர்ந்து செயற்பட்டமை பாராட்டுக்குரியதாகும்.

இத்தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பட்டியலில் இப்பத்தி எழுத்தாளரும் ஈ.பி.ஆர்.எல்.எவ் சார்பில் இடம்பெற்றிருந்தார். இத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பட்டியலில் ரெலோ சார்பில் வேட்பாளராக போட்டியிட்ட காலஞ்சென்ற ஜெ.திவ்யநாதன் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவானார். ஐக்கிய தேசியக் கட்சியின் பட்டியலில் போட்டியிட்ட முன்னால் பொத்துவில் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திருமதி ரங்கநாயகி பத்மநாதன் அவர்கள் போதிய விருப்பு வாக்குகளைப் பெறாததால் தெரிவாகவில்லை. இத்தேர்தலிலேயே ஸ்ரீலங்கா முஸ்லிம் கட்சியின் தலைவர் எம்.எச்.எம்.அஸ்ரப் அவர்கள் முதன் முறையாகப் பாராமுமன்ற உறுப்பினராகத் தெரிவானார்.

1980 இல் உருவாகி 1987 இல் இலங்கையின் அங்கீகரிக்கப்பெற்ற அரசியல் கட்சியாகத் தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்து கொண்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்ரஸ் ஏற்கனவே 1988 இல் நடைபெற்ற வடகிழக்கு தற்காலிகமாக இணைந்த முதலாவது மாகாணசபைத் தேர்தலிலும் போட்டியிட்டு அச்சபையில் எதிர்க்கட்சியாகவும் இருந்தது. எதிர்க்கட்சித் தலைவராக அக்கரைப்பற்றை சேர்ந்த சேகு இஸ்ஸடீன் விளங்கினார். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்ரஸ் முதன்முறையாக எதிர்கொண்ட பாராளுமன்றத்தேர்தல் இதுவாகும்.

தொகுதித் தேர்தல் முறை நடைமுறையிலிருந்த காலத்தில் அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில், கல்முனை, சம்மாந்துறைத் தொகுதியிலிருந்து 3 முஸ்லிம் உறுப்பினர்கள் பாராளுமன்றத்திற்குத் தெரிவானார்கள். ஆனால் 1989 இல் நடைபெற்ற விகிதாசாரத் தேர்தல் முறையின் கீழ் ஒரேயொரு முஸ்லிம் உறுப்பினரே (ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்ரஸ் கட்சியின் தலைவர் எம்.எச்.எம்.அஸ்ரப்) அம்பாறை மாவட்டத்திலிருந்து பாராளுமன்றத்திற்குத் தெரிவானார். முன்பு பொத்துவில் தொகுதியின் இரண்டாவது பாராளுமன்ற உறுப்பினர் மூலம் அம்பாறை மாவட்டத்தமிழர்களுக்கிருந்த ஒரேயொரு தமிழ்ப் பிரதிநிதித்துவம் விகிதாசாரத் தேர்தல் முறையின் கீழ் தக்க வைக்கப்பெற்றது.

முன்பு அம்பாறை மாவட்டத்திலிருந்து ஒரேயொரு சிங்களப் பாராளுமன்ற உறுப்பினரே தெரிவாகும் நிலை மாறி, 1989 இல் நடைபெற்ற விகிதாசாரத் தேர்தல் முறையின் கீழ் ஐ.தே.க இலும் ஸ்ரீ.ல.சு.க இலும் போட்டியிட்ட வேட்பாளர்கள் பெற்றுக்கொண்ட விருப்பு வாக்குகளின் அடிப்படையில் அது நான்காக அதிகரித்தது. ஆனாலும் இதனைச் சீர் செய்யும் - ஈடு செய்யும் - வகையில் ஜனாதிபதி ஆர்.பிரேமதாச தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி தனது தேசியப் பட்டியல் ஆசனங்களில் இரண்டை முறையே கல்முனைத் தொகுதியைச் சேர்ந்த ஏ.ஆர். மன்சூர் அவர்களுக்கும் சம்மாந்துறைத் தொகுதியைச் சேர்ந்த எம்.ஏ.அப்துல் மஜீத் அவர்களுக்கும் வழங்கி அவர்கள் இருவருக்குமே அமைச்சுப் பதவிகளும் வழங்கப்பெற்றன. இதனால் அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் அடைந்த சமூக பொருளாதார அரசியல் அனுகூலங்கள் ஏராளம். முஸ்லிம்களின் அறிவு பூர்வமான இந்த இணக்க அரசியலை அம்பாறை மாவட்டத் தமிழர்கள் காலந்தாழ்த்தியாவது கற்றுக்கொள்ள வேண்டும். எம்.எச்.எம்.அஸ்ரப் அவர்கள் 1989 இலிருந்து 1994 வரையிலான காலப்பகுதியில் எதிர்க்கட்சியிலேயே இருந்தார். ஆனாலும் ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா அவர்களுடன் திரைமறைவில் நல்ல உறவைக் கொண்டிருந்ததன் மூலம் அவரும் முஸ்லிம் சமூகத்திற்குக் குறிப்பாக அம்பாறை மாவட்ட முஸ்லிம்களுக்கு நன்மையளிக்கக்கூடிய பல விடையங்களை வென்று கொடுத்தார். அதைத் தவறென்று கூறமுடியாது. அதுவே அஸ்ரப்பின் மக்கள் நலன் சார்ந்த அரசியல் சாதுரியம் ஆகும். அதேவேளை அஸ்ரப் அவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் தந்திரோபாய ரீதியிலும் நல்ல உறவையும் வைத்திருந்தார். அதுவும் அவரது அரசியல் சணக்கியமே. சட்டத்தரணிகள் (அம்புக்கர்த்துக்கள்) மலிந்த தமிழர்களின் அரசியல் தலைமை அது தமிழரசுக்கட்சியாக இருந்தாலும் சரிதான் அல்லது தமிழர் விடுதலைக் கூட்டணியாக இருந்தாலும் சரிதான் அல்லது தற்போதைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இருந்தாலும் சரி அஸ்ரப் அவர்களின் அரசியலிலிருந்து அவர்கள் படித்துக்கொள்ள வேண்டிய பாடங்கள் பல.

1989 ம் ஆண்டின் பாராளுமன்றப் பொதுத்தேர்தலைத் தொடர்ந்து அம்பாறை மாவட்டத் தமிழர் மகாசங்கத்தின் உபதலைவர் காலஞ்சென்ற கே.கணபதிப்பிள்ளை (அதிபர் - கவிஞர் பாண்டியூரன் - இவர் பின்னர் 1990 கலவரத்தில் காணாமல் ஆக்கப்பட்டார்) தலைமையில் கல்முனைத் தமிழர்களுக்கென தனியான நிருவாக அலகை – உதவி அரசாங்க அதிபர் பிரிவை – ஏற்படுத்தித் தரவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து கல்முனை உதவி அரசாங்க அதிபர் அலுவலக வாயிலை மறித்துக் கல்முனைத் தமிழர்கள் சாத்வீகப் போராட்டத்தை மேற்கொண்டார்கள். இப்போராட்டத்திற்குப் பின்புலத்தில் அப்போது இருந்த முதலமைச்சர் அ.வரதராஜப்பெருமாள் தலைமையிலான வடக்கு கிழக்கு மாகாணங்கள் தற்காலிகமாக இணைக்கப்பெற்ற வடக்கு மாகாண அரசும் செயற்பட்டது. ஈ.பி.ஆர்.எல்.எவ் மற்றும் ஈ.என்.டி.எல்.எவ் மற்றும் ரெலோ உறுப்பினர்களும் பொதுமக்களுடன் இப்போராட்டத்தில் பங்கேற்றார்கள். போராட்டத்தில் பங்கேற்றிய பொதுமக்களுக்கு அப்போது வடக்கு கிழக்கு பிரசன்னமாகியிருந்த இந்திய சமாதானப்படையினர் பாதுகாப்பை வழங்கியிருந்தனர். அது மட்டுமல்லாமல் அம்பாறை மாவட்டத் தமிழர்களுக்குப் பல சமூக பொருளாதார நன்மைகளையும் உருவாக்கியிருந்தது என்பதை ஒப்புக்கொள்ளுதலே காய்தல் உவர்தலற்ற அரசியல் அறம் ஆகும்.

கல்முனைத் தமிழ் மக்களால் அம்பாறை மாவட்டத் தமிழர் மகாசங்கத்தின் ஏற்பாட்டில் அதன் உப தலைவர் கவிஞர் பாண்டியூரன் தலைமையில் மேற்கொள்ளப்பெற்ற மறியல் போராட்டத்தின் விளைவாக கல்முனை உதவி அரசாங்க அதிபர் பிரிவு மூடப்பட்டது. இவ்விடயம் மத்தியில் உள்நாட்டுஅலுவல்கள் அமைச்சின் கவனத்திற்குக் கொண்டுவரப்பெற்ற போது அப்போது பொது நிர்வாக, மாகாணசபைகள், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சராயிருந்த யூ.பி.விஜயகோன் தலைமையில் பின்வரும் உறுப்பினர்கள் கலந்துகொண்ட கலந்துரையாடல் நடைபெற்றது.

அமரா.பியசீலி ரத்நாயக்கா (உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்)

பி.தயாரட்ண பா.உ அம்பாறை மாவட்டம் (காணி நீர்ப்பாசன மகாவலி அபிவிருத்தி அமைச்சர்)

ஏ.ஆர்.மன்சூர் பா.உ (வர்த்தக கப்பல் துறை அமைச்சர்)

அ.அமிர்தலிங்கம் பா.உ (தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம்)

எம்.எச்.எம்.அஸ்ரப் பா.உ (அம்பாறை மாவட்டம்)

சந்திரதாச கலப்பதி பா.உ (அம்பாறை மாவட்டம்)

நிகால் வக்மீவெள பா.உ (அம்பாறை மாவட்டம்)

ஜெ.திவ்வியநாதன் பா.உ (அம்பாறை மாவட்டம்)

இக்கலந்துரையாடலின் முடிவில் கல்முனை, சம்மாந்துறை ஆகிய இரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் வாழும் தமிழ்ச் சமூகத்தின் தேவைகளைத் திருப்திப்படுத்துவதற்காகவென்று இவ்விரு பிரிவுகளிலும் இரு சுற்றுலா உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள் ஏற்படுத்தப்பெற வேண்டுமெனத் தீர்மானிக்கப்பெற்றது. இது உண்மையில் ஓர் கண்துடைப்பு நடவடிக்கையாகும். தமிழர்களைத் தந்திரமாக ஏமாற்றிய செயற்பாடாகும். இதற்கு அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஜெ.திவ்வியநாதனும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமையும் துணைபோயினர். அம்பாறை மாவட்டத் தமிழர்களை பொறுத்தவரை ஜெ.திவ்வியநாதன் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலம் (1989-1994) ஓர் “இருண்ட“ காலமாகும்.

எது எப்படியிருப்பினும் மேற்கூறப்பெற்ற சாத்வீக மறியல் போராட்டம் ஏற்படுத்திய அழுத்தங்கள் காரணமாக கல்முனைத் தமிழ்ப் பிரிவுக்கென தனியான உதவி அரசாங்க அதிபர் பிரிவு அலுவலகம் ஒன்று 12.04.1989 இல் திறக்கப்பெற்று மேலதிக உதவி அரசாங்க அதிபராகத் தமிழர் ஒருவரும் நியமிக்கப்பெற்றார். ஆனால் இவ் அலுவலகப் பிரிவு எல்லைகள் வகுக்கப்பெற்றதாகவோ □ வர்த்தகமானியில் பிரசுரிக்கப்பெற்றதாகவோ □ முழுமையான அதிகாரங்களும், நிதி ஒதுக்கீடுகளும் வழங்கப்பெற்றதாகவோ அமையாமல் கல்முனைத் தமிழ்ப்பிரிவு எனும் பெயர்ப் பலகையுடன் பெயரளவிலேயே இயங்கிவந்தது. ஆனால் அம்பாறை மாவட்டத் தமிழர் மகாசங்கத்தினர் தொடர்ந்து எடுத்துக்கொண்ட பெருமுயற்சிகள் காரணமாக 28.07.1993 அமைச்சரவைத் தீர்மானத்தின் படி கல்முனைத் தமிழ்ப் பிரிவு பிரதேச செயலகமாகத் தரமுயர்த்தப்பெற்றது. ஆனால் இத்தீர்மானம் வழமைபோல் அம்பாறை மாவட்ட முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் அரசியல் தலையீடு காரணமாக அமுல் செய்யப்பெறாமல் இழுத்தடிக்கப்பட்டது. இங்கே சுட்டிக்காட்டப்பட வேண்டிய துரதிஸ்டமான விடயம் என்னவெனில் இக்காலத்தில் அம்பாறைமாவட்டத் தமிழர் மகாசங்கத்தின் தீவிர செயற்பாட்டாளர்களான து.இராமகிருஸ்ணன், அம்பலவானர் மற்றும் இப்பத்தி எழுத்தாளர் ஆகியோர் மேற்கொண்ட முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடுபவராகவே அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் காலஞ்சென்ற ஜெ.திவ்வியநாதன் செயற்பட்டார். கல்முனைத் தமிழ்ப் பிரிவுக்கு எதிரான எண்ணம் கொண்ட பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான கல்முனையைச் சேர்ந்த காலஞ்சென்ற ஏ.ஆர். மன்சூர் அவர்களுக்கு அனுசரணையாகவே திவ்வியநாதன் நடந்து கொண்டார். இதனால் அம்பாறை மாவட்டத் தமிழர் மகாசங்கம் மேற்கொண்ட முயற்சிகள் திருப்தியான பலன் அளிக்கவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினரான திவ்வியநாதன் மீது தமிழர் விடுதலைக் கூட்டணியின் அப்போதைய தலைமைப் பீடம் எவ்வித கட்டுப்பாடும் அற்றிருந்தது.

-- தொடரும் --

# தமிழ் மக்களை ஏமாற்றி, தமிழ் தேசியக் கூட்டமைப்பை காப்பாற்ற முனையும் சர்வதேச சமூகம்!




"புதிய அரசியல் யாப்பு உருவாக்கத்திற்கு பொதுநலவாய நாடுகள் அமைப்புப் பணியகம் தொடர்ந்து உதவும்" என்று அதனுடைய செயலாளர் பற்றீஸியா ஸ்கொட்லண்ட் (Patricia Scotland) எதிர்க்கட்சித்தலைவர் சம்மந்தனிடம் கூறிருக்கிறார்.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் சம்மந்தனைச் சந்தித்துப் பேசியபோதே பற்றீஸியா இவ்வாறு சொல்லியிருக்கிறார்.

இதற்குப் பிறகு சுவிற்சர்லாந்தின் முன்னாள் அரச தலைவரும் அந்த நாட்டின் சமஷ்டிப் பேரவையின் உறுப்பினருமான சிமோனேட்டாவும் சம்மந்தனைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

இந்தச் செய்திகளை அறியும்போது எனக்குச் சிரிப்பே வந்தது. இந்த மாதிரிச் செய்திகளுக்கு இன்னும் சில இடங்களில்



முக்கியத்துவமும் முன்பக்கமும் ஒதுக்குகிறார்களே என. உங்களில் சிலருக்கும் அப்படிச் சிரிப்பு வந்திருக்கலாம்.

சிலருக்கு நிச்சயமாகக் கோபம் வந்திருக்கும். "இவர்கள் எல்லாம் எங்களைப் பற்றி (தமிழர்களைப் பற்றி) என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்" என்று.

சம்மந்தனும் அவருடைய அணியினரும் இந்த மாதிரி ஆட்களிடம் (வெளிநாட்டுத் தலைவர்களிடத்திலும் பிரதானிகளிடமும்) எத்தனையோ தடவைகள் "தமிழர்களின் அபிலாஷைகள்" என்றும் "தீர்க்கப்பட வேண்டிய தமிழர்களுடைய பிரச்சினைகள்" என்றும் அழாக் குறையாகப் பலதையும் பட்டியலிட்டுச் சொல்லிருக்கிறார்கள்.

எல்லாவற்றையும் கேட்கும் இவர்கள் "பார்க்கிறோம். கவனித்துக் கொள்கிறோம். இதைப் பற்றி நிச்சயமாகச் சம்மந்தப்பட்ட தரப்புகளிடம் பேசுவோம். இலங்கை அரசை வலியுறுத்துவோம்" என்றெல்லாம் சொல்லி விட்டுப் போவார்கள்.

நடைமுறையில் ஒன்றுமே நடக்காது. (இவர்கள் வாக்குறுதி அளித்தபடி ஏதாவது நடந்திருக்குமாக இருந்தால் இப்பொழுது தமிழீழம் மலர்ந்திருக்க வேணும். ஆகக் குறைந்தது தமிழ் மக்களுடைய குறைகள் எல்லாம் தீர்ந்திருக்க வேண்டும்).

ஆகவே இதெல்லாம் சுத்தமான பம்மாத்து, புலுடாவே தவிர வேறொன்றுமில்லை.

இருந்தாலும் இப்போது கூடப் பலர் பற்றீஸியாவின் வார்த்தைகளையும் சிமோனேட்டாவின் வாக்குறுதிகளையும் "அருள் வாக்கு" என்றே நம்பியிருப்பார்கள்.

"ஓ... பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளரே வந்து சம்மந்தனைச் சந்தித்துக் குறைகளையும் கவலைகளையும் கேட்கிறாரே!" என்று வாயைப் பிளப்பார்கள்.

அவர்களை விட்டு விடுவோம். ஏனென்றால் சிலரைக் கடவுளும் காப்பாற்ற முடியாது. சாத்தானும் காப்பாற்ற இயலாது.

**சர்வதேசக் குடும்பி சும்மா ஆடாது. பூனைக்கும் நண்பன், பாலுக்கும் காவல்**

அப்படியென்றால் எதற்காகப் பற்றீஸியா போன்றவர்கள் தேடி வந்து சம்மந்தனையும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பையும் சந்திக்கிறார்கள்? என்ற கேள்வி உங்களுக்கு எழலாம்.

இது ஒன்றும் புதிரும் அல்ல. புதினமும் அல்ல.

இலங்கை அரசாங்கத்தை (கொழும்பை) தமக்கிசைவாக வைத்துக் கொள்ள வேண்டுமாக இருந்தால் அதற்குத் தமிழர்களையும் அவர்களுடைய பிரச்சினைகளையும் கருவியாகப் பயன்படுத்த வேணும் என்பதே வெளிச் சக்திகளின் இலங்கை தொடர்பான வெளியுறவுக் கொள்கையாக உள்ளது.

இதில் முன்பு பிராந்திய சக்தியாகிய இந்தியா மும்முரமாகச் செயற்பட்டது. இப்பொழுது இந்தியாவோடு சீனா, அமெரிக்கா, பாகிஸ்தான், பிரிட்டன், பிரான்ஸ் எனச் சகல நாடுகளும் சகல தரப்புகளும் போட்டிபோட்டுச் செயற்படுகின்றன.

தற்போது அதிகாரத்தில் உள்ள மைத்திரி – ரணில் அரசாங்கம் வஞ்சகமில்லாமல் எல்லாத்தரப்புகளுக்கும் இடமளிக்கும் வகையில் மடியைத் திறந்து மடையைப் பரவியுள்ளது.

பொருளாதார நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு வெளி முதலீடுகளை ஊக்குவிக்கிறோம் என்ற பேரில் அம்பாந்தோட்டையிலிருந்து பலாலி வரையில் பிறநாடுகளுக்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஏராளம் சுதேச நிறுவனங்கள் விற்கப்படும் நிலையில் உள்ளன.


இதனால்தான் இலங்கை இன்று விபச்சாரியின் வீட்டைப் போலாகி விட்டது" என்று காட்டமாக விமர்சிக்கப்படுகிறது.

இதற்குக் காரணம் போரே. போரினால் உண்டான அழிவும் போருக்குக் காரணமான முரண்பாடுகளும் நாட்டை படு மோசமான நிலைக்குக் கீழிறக்கியுள்ளன.

இனமுரண்பாட்டை ஊக்குவித்து, அதைப் போரை நோக்கி நகர்த்தியது இந்தத் தரப்புகளே. பிறகு போரைத் தூண்டி, அதில் ஈடுபட வைத்து, அதாவது அதில் மூழ்கடித்து, இலங்கையின் அத்தனை வளர்ச்சிகளையும் இல்லாதாக்கி விட்டது சர்வதேச சமூகம்.

இதில் இந்தியாவும் ஒன்றுதான். சீனாவும் ஒன்றுதான். அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், பாகிஸ்தான் எல்லாமும் ஒன்றுதான். போர்க்காலத்தில் இவை போரில் ஈடுபட்ட இரண்டு தரப்புகளுக்கும் நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவியதை ஆராய்ந்தால் ஏராளம் உண்மைகள் எளிதாகத் தெரியும்.

அதைப்போல இரண்டு தரப்புகளின் போர்க்குற்றங்களுக்கும் இவை பொறுப்பாளிகள்.



அதைப்போலவே இன்று இலங்கையில் எந்தப் பிரச்சினையும் தீர்க்கப்படாமல் நீடிப்பதற்கும் இவர்கள் சூத்திரதாரிகள்.

சமாதான விரும்பிகளைப் போலப் பாவனை செய்து கொண்டு தங்களுடைய நலனுக்குரிய அரசியலை வெற்றிகரமாகச் செய்து கொண்டிருக்கின்றன.

இதற்காக இவை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைப் பயன்படுத்துகின்றன. சோழியன் குடுமி சும்மா ஆடாது என்று சொல்வது இதைத்தான்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்பது இன்று அரசாங்கத்தின் ஒரு அங்கம். ஆகவே இந்த அரசாங்கத்தைப் பலமாக வைத்திருக்க வேண்டுமாக இருந்தால் நிச்சயமாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பையும் பலமாக வைத்திருக்க வேணும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைப் பலமாக வைத்திருக்க வேண்டுமாக இருந்தால் அதற்கு ஏற்படும் நெருக்கடிகளில் இருந்து அதைப் பாதுகாக்க வேண்டும்.

தற்போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கான நெருக்கடி தமிழ்த்தரப்பிலிருந்தே வந்துள்ளது. முன்பு அரசாங்கம் உள்பட உள்ளும் வெளியுமாகப் பல தரப்புகளின் நெருக்கடி இருந்தது.

**கருணாகரன்**

இன்று தமிழ்த்தரப்பிடமிருந்தே கூட்டமைப்புக்கு அதிக நெருக்கடிகள்.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி, அதற்குச் சார்பாகச் செயற்படும் சகோதர அமைப்பான தமிழ் மக்கள் பேரவை, ஊடகங்கள், ஆய்வாளர்கள் புலமை சார்ந்தோர் உள்ளிட்ட பொது மக்கள் வரையில் பல தரப்புகளுக்கும் கூட்டமைப்பின் மீது அதிருப்தி உண்டு.

இதைத் தணித்து கூட்டமைப்பைப் பலப்படுத்துவதற்கு இந்தத் தரப்புகள் முயற்சிக்கின்றன. இதற்காக தமது தொடர்புகளும் ஆதரவும் கூட்டமைப்புக்கு உண்டு என்று காட்டுவதே இவற்றின் நோக்கம்.

இவ்வாறு காட்டுவதன் மூலம் சர்வதேச சமூகத்தின் ஆதரவும் தொடர்பும் கூட்டமைப்புக்கு உள்ளது என தமிழ் மக்களை நம்ப வைப்பது. இதன் மூலம் கூட்டமைப்பிற்குப் பக்கத்திலேயே தொடர்ந்தும் தமிழ்ச்சனங்களை நிற்க வைப்பது. இது தேர்தல் வெற்றிகளைக் கூட்டமைப்புக்குப் பெற்றுக் கொடுக்கும் என்பது இவற்றின் கணிப்பு.

ஆகவே கூட்டமைப்பைப் பலப்படுத்தி, அதன் மூலம் அரசாங்கத்தைக் காப்பாற்றி, அதன் மூலம் தங்களை வளப்படுத்திக் கொள்வதே நோக்கம்.

அடுத்து வரப்போவது மாகாணசபைத் தேர்தல் அல்லவா!

ஒவ்வொரு தேர்தல் வரும்போதும் இந்த நாடகம் நடப்பது வழமை.

## ஓர் அஞ்சலிக் குறிப்பு

# இலையில் மறைந்த காயாக வாழ்ந்த மட்டக்களப்பின் ஓர் மைந்தன்

## உதைபந்தாட்ட வீரன் + இசைக்கலைஞன் = எட்வேட் அவுட்ஸ்கோன் (எட்வேட் வாச்சான்)

து.கௌரீஸ்வரன்,
நிருவாகச் செயலாளர்,
மட்டக்களப்பு மாவட்ட கால்பந்தாட்டச் சங்கம்



மட்டக்களப்பு என்றுவந்தால் அதன் தவிர்க்க முடியாத ஒரு பாகம் இங்குள்ள பறங்கியின உறவுகள். அந்த இனம் தந்த ஆளுமைகள் பலர் மட்டக்களப்புக்கு பெருமை சேர்த்திருக்கிறார்கள். அப்படியான ஒரு உறவு இன்று மறைந்து போனது.

இலங்கையில் மட்டக்களப்பு மாவட்டம் பறங்கியர் சமூகத்தினரின் பாரம்பரிய நிகழ்த்து கலையான க.ஃப்றிங்கா ஆற்றுகை பயிலப்பட்டு வரும் இடமாகச் சிறப்புப் பெறுகின்றது.

அத்துடன் கிழக்கு மாகாணத்தின் கால்பந்தாட்ட வரலாற்றில் எழுபது ஆண்டுகளைக் கடந்த பாரம்பரியத்தைக் கொண்ட மாவட்டமாகவும் மட்டக்களப்பு விளங்கி வருகின்றது. இன்றைக்கு எழுபது வருடங்களுக்கு முன்னர் இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தினால் அங்கீகரிக்கப்படும் நியம முறையிலான கால்பந்தாட்டம் மட்டுநகரில் இடம்பெற்று வந்துள்ளது. இதன் காரணத்தினால் தான் இற்றைக்கு ஏழு தசாப்தங்களுக்கு முன்னர் கிழக்கின் கால்பந்தாட்டச் சங்கமாக மட்டக்களப்பு மாவட்ட கால்பந்தாட்டச் சங்கம் அங்கீகரிக்கப்பட்டது.

இவ்வாறு மட்டக்களப்பில் சிறப்புப் பெறும் க.ஃப்றிங்கா ஆற்றுகையிலும், கால்பந்தாட்ட விளையாட்டிலும் தனது ஆற்றல்களை வெளிப்படுத்திய மூத்த தலைமுறையினைச் சேர்ந்த ஒருவராக அமரர் எட்வேட் அவுட்ஸ்கோன் அவர்கள் விளங்கினார். அன்னார் கடந்த 04.08.2018 ஆம் திகதியன்று மாரடைப்பினால் மரணமடைந்து விட்டார்.

மட்டு நகரின் கால்பந்தாட்ட வரலாற்றில் முத்திரை குத்திய ஆரம்பகால கால்பந்தாட்டக் கழகங்களுள் வி.ஆர்.சி, பாடுமீன் கழகங்கள் குறிப்பிடத்தக்கன. இந்த இரு கழகங்களிலும் கால்பந்தாட்ட வீரனாக தனது இளமைக் காலத்தில் எட்வேட் அவுட்ஸ்கோன் அவர்கள் பிரகாசித்துள்ளார். விசேடமாக இவர் ஒரு சிறந்த கோல் காப்பாளராகத் தனது தடங்களைப் பதித்துள்ளார்.

இவருடைய இளமைக் காலத்தில் மட்டுநகரில் கால்பந்தாட்டத்தை ஆர்வத்துடன் பார்த்து வந்த, இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் மூத்த இரசிகர்களால் பெருமையுடன் சிலாகித்துப் பேசப்படும் கால்பந்தாட்ட வீரர்களுள் ஒருவராக எட்வேட் அவுட்ஸ்கோன் அவர்கள் விளங்குகிறார்.

விசேடமாக அந்நாட்களில் ஐரோப்பாவிலிருந்து இலங்கைக்கு சுற்றுப் பயணங்களை மேற்கொண்ட சர்வதேச கால்பந்தாட்ட அணிகள் மட்டக்களப்பு அணியுடன் விளையாடிய போட்டிகள் பற்றிய உரையாடல்களின் போது எட்வேட் அவுட்ஸ்கோனின் கால்பந்தாட்டத் திறன்கள் பற்றிப் பேசப்படுவதனை அவதானிக்க முடியும். இத்தகைய சம்பாசனையின் போது ஒரு இரசிகர் பின்வருமாறு கூறினார் “வெளிநாட்டு அணி ஒன்றுடன் வெபர் மைதானத்தில் நடைபெற்ற போட்டி ஒன்றில் எட்வேட் தனது திறமையால் பல கோல்களைத் தடுத்து நிறுத்தினார். அதில் ஒரு புகைப்படம் அக்காலத்தில் தேசிய ஆங்கிலப் பத்திரிகையில் வெளிவந்தது. எட்வேட் அந்தரத்தில் கிடையாக பந்தைப் பிடிக்கும் அபூர்வக் காட்சியாக அது இருந்தது.“

இவ்வாறு தனது இளமைக் காலத்தில் மட்டுநகரின் முன்னணி கால்பந்தாட்ட வீரனாகத் திகழ்ந்த எட்வேட் அவுட்ஸ்கோன், அடுத்த தலைமுறைகள் கால்பந்தாட்டத்தினுள் நுழைந்ததும் முழுமையாக கால்பந்தாட்டத்திற்கு விடைகொடுத்து ஒதுங்கி விடவில்லை. மாறாக தனது அனுபவங்களையும் திறன்களையும் புதிய தலைமுறையினருக்கு வழங்கும் ஒரு ஆக்கபூர்வமான கால்பந்தாட்ட பயிற்றுனராகப் பணியாற்றத் தொடங்கினார்.

குறிப்பாக மட்டுநகரின் கால்பந்தாட்ட வரலாற்றில் புதிய புதிய கழகங்கள் பல அரும்பிய கால கட்டத்தில் (1990 களுக்குப் பின்னர்) அத்தகைய கழகங்களுக்கு ஒரு வழிகாட்டியாக, சிறந்த கால்பந்தாட்டத்தை விளையாடுவதற்கான பயிற்றுனராக அவர் இயங்கினார். குறிப்பாக இன்று மட்டக்களப்பு மாவட்ட கால்பந்தாட்டச் சங்கத்தில் ஏ பிரிவு கழகங்களுள் ஒன்றாக விளங்கிவரும் கூளாவடி டிஸ்கோ விளையாட்டுக் கழகத்தின் பயிற்றுனராக சில காலம் இயங்கிய இவர், அக்காலத்தில் டிஸ்கோ கழகம் முன்னணிக் கழகங்களுள் ஒன்றாக தடம் பதிப்பதற்கான அடிப்படை கால்பந்தாட்ட நுட்பங்களைக் கற்றுக் கொடுத்தார்.

இதேபோல் வேறு முன்னணிக் கால்பந்தாட்டக் கழகங்களின் பயிற்றுனராகவும் இவர் இயங்கியுள்ளார். விசேடமாக மட்டக்களப்பு மாவட்ட கால்பந்தாட்ட அணியின் பயிற்றுனராக இவர் செயற்பட்ட காலத்தில் புதிதாக அறிமுகமான கழகங்களிலிருந்து புதிய, திறன்மிக்க இளம் வீரர்களை இனங்கண்டு அவர்களுக்கான வாய்ப்புக்களை வழங்குவதில் மிகவும் அக்கறையாக இருந்தார்.

இவ்வாறு இரு தசாப்தங்களுக்கு முன்னர் அவர் புதிதாக அரும்பிய கழகங்களின் புதிய வீரர்களை மாவட்டத் தெரிவு அணிக்குள் உள்வாங்கி கால்பந்தாட்ட நுட்பங்களைப் பயிற்றுவித்ததன் விளைவாகவே அன்று அரும்பிய கழகங்கள் கால்பந்தாட்டத்தில் தொடர்ந்து பயணிக்கவும் சிறந்த கால்பந்தாட்ட வெளிப்பாட்டை பேணக்கூடியதுமான ஏது நிலைகள் வாய்க்கப்பெற்றன.





1990 இனை அடுத்து வந்த காலம் மட்டக்களப்பின் வரலாற்றில் எல்லாத் துறைகளிலும் தேக்க நிலைகளை உண்டுபண்ணிய அசாதாரண காலமாக விளங்கியது. இந்த இக்கட்டான காலத்தில் கால்பந்தாட்டம் மங்கி விடாமல் அதன் உயிர்ப்பைப் பாதுகாக்கும் பணியில் அந்நாட்களில் எட்வேட் அவுட்ஸ்கோன் அவர்கள் தீவிரமாக இயங்கினார். இக்காலத்தில் அணிக்கு ஏழு வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டப் போட்டிகள் மட்டுநகரின் புறநகர்ச் சூழலில் நடைபெற்றன.

போர் மேகம் சூழ்ந்த இக்காலத்தில் எதிலும் அக்கறையற்று, உயிரை மட்டும் பாதுகாக்கும் நோக்குடன் வீடுகளுக்குள் முடக்கப்பட்டிருந்த தலைமுறையினருள் ஒரு பகுதியினருக்கான வாய்ப்புக்களை உருவாக்கி அவர்களை வாழ்க்கைக்குத் தயார்படுத்தும் காரியத்தை இக்கால்பந்தாட்டப் போட்டிகள் வழங்கியிருந்தன. உதாரணமாக மனிதர்கள் பலர் கூடுவதற்கான வெளிகள் அற்றிருந்த அந்நாட்களில் மனிதர்கள் கூடுவதற்கான வெளியாக அணிக்கு 7 பேர் ஆடும் போட்டிகள் உருப்பெற்றன.

இவ்வாறு ஒரு காலத்தில் முக்கியம் பெற்ற உள்ளூர் கால்பந்தாட்டப் போட்டிகளின் இயக்கு சக்திகளுள் ஒருவராக எட்வேட் அவுட்ஸ்கோன் இயங்கினார். அதாவது விளையாடும் கழகங்கள் மற்றும் வீரர்கள் மதிக்கும், நம்பிக்கை கொள்ளும் ஒரு சிறந்த நடுவராக எட்வேட் அவுட்ஸ்கோன் விளங்கினார். மிக முக்கியமான, சிக்கல்கள் நிறைந்த, இக்கட்டான போட்டிகளுக்கு எட்வேட் அவுட்ஸ்கோனின் மத்தியஸ்தத்தையே பலரும் விரும்பி எதிர்பார்க்கும் நிலைமை இருந்தது. மைதானத்தினுள் அவர் நடுவராக இயங்கும் போது அவர் தனது உரத்த தொனியில் தனது தீர்ப்புக்களை வழங்கும் போது பெரும்பாலும் அனைவரும் அதனை ஏற்கும் நிலைமை காணப்படும்.

கால்பந்தாட்டம் ஓர் உணர்ச்சி வயப்படுத்தும் விளையாட்டு, வீரர்களும் பார்வையாளர்களும் உணர்ச்சிக்கு முதன்மை கொடுப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உருவாகும் விளையாட்டு. இத்தகைய விளையாட்டில் அதுவும் செவணசைட் போட்டிகளில் சிறந்த நடுவராக இயங்கி சுமுகமாகப் போட்டிகளை நிறைவுக்குக் கொண்டு வந்த ஆளுமையாக இவர் அந்நாட்களில் காரியமாற்றியதை பின்னோக்கிப் பார்க்கும் போது இவருடைய பெறுமதியை விளங்க முடிகின்றது.

மட்டுநகரின் கால்பந்தாட்டத்தில் ஒரு பெரிய அண்ணனாகவே (எட்வேட் வாச்சான்) இவர் மதிக்கப்பட்டார், இந்தப் பெரிய அண்ணன் எட்வேட் அவர்கள் இனங்கண்டு வலுவூட்டிய வீரர்களால் வளம்பெற்ற கழகங்களின் பயணம் இவரை ஞாபகப்படுத்திக் கொண்டேயிருக்கும்.

எட்வேட் அவுட்ஸ்கோன் அவர்கள் அண்மைக் காலங்களில் கால்பந்தாட்டத்தைப் பார்க்கிலும் பறங்கியரின் ஆற்றுகைக் கலையான க.ஃப்றிங்காவில் ஆர்வத்துடன் ஈடுபடுவதை அதிகம் காண முடிந்தது. மட்டுநகரில் நடைபெற்ற பல்வேறு பண்பாட்டு விழாக்களில் முக்கியம் பெற்ற க.ஃப்றிங்கா ஆற்றுகையில் இவர் வாத்தியம் இசைக்கும் கலைஞராகத் தனது ஆற்றுகையினை வெளிப்படுத்தினார். இவ்வாற்றுகையில் வரும் பாடலில் இவர்; உச்சரிக்கும் வார்த்தைகள் இக்கலையாற்றுகை மீதான ஆர்வத்தை மேலும் தூண்டுவதாக இருக்கும்.

இவ்வாறு மட்டுநகரின் கால்பந்தாட்ட வீரனாகவும் கலைஞனாகவும் வாழ்ந்து மறைந்த அமரர் எட்வேட் அவுட்ஸ்கோன் அவர்களின் பங்களிப்பை மனதிற் கொண்டு அன்னாருக்கு நமது அஞ்சலிகளைக் காணிக்கை செய்வோம்.




காலம் தோறும் தமிழ் மாறி வந்திருக்கிறது எழுத்துருப் பெற்ற ஆதி மொழிகளில் தமிழ் மொழியும் முதன்மை பெறுகிறது. வாய் மொழி இலக்கியங்கள் முதல் இன்றைய நவீன இலக்கியங்கள் வரை அதன் வரலாறு நெடியது. சங்கப் புலவர்கள் முதல் இன்றைய புதுக் கவிஞன் வரை மொழிக்கு வளம் சேர்த்தோர் பல்லாயிரம் பேர். அந்த வரிசையில் கலைஞருக்கு ஒரு தனியிடம் உண்டு.

பழந்தமிழ் மரபை எல்லோருக்குமான வாசிப்பாய் மாற்றிய நூல்கள்
சங்கத் தமிழ்
குறளோவியம்
தொல்காப்பியப் பூங்கா
திருக்குறளுக்கான புத்துரை
சிலப்பதிகாரம் நாடகம்

கலைஞர் தமிழ் என நாம் கொண்டாட கலை இலக்கிய உலகில். அவர் தனக்கான ஒரு தனி நடையயை உருவாக்கியவர்.
நவீன இலக்கியம் என்று பேசுகிறபோது நாவல், சிறுகதை, கவிதை, நாடகம் என எல்லா தளங்களிலும் தன் முத்திரை பதித்தவர் அவர். அவரது நாவல்கள்;

ரோமாபுரிப் பாண்டியன்
பொன்னர் சங்கர்
பாயும் புலி பண்டார வன்னியன்
தென் பாண்டிச் சிங்கம்
வெள்ளிகிழமை
ஒரே இரத்தம்
ஒரு மரம் பூத்தது
சுருளி மலை

என வரலாறும் நவீனமுமாய்.
““ பதினொரு சமூக நாவல்கள் .
ஐந்து வரலாற்று நாவல்கள் எழுதியிருக்கிறார்.
முப்பத்தி நாலு நாடகங்கள் எழுதியிருக்கிறார்.
பதினான்கு தொகுப்புகளாக அவருடைய சிறுகதைகள் வெளி வந்திருக்கின்றன.
எழுபது திரைப் படங்களுக்கு வசனம் எழுதியிருக்கிறார்.
திருக்குறளுக்கு உரை எழுதியிருக்கிறார்.
சங்கத்தமிழிற்கும் தொல்காப்பியத்திற்கும் கவிதையில் உரை வடித்திருக்கிறார்
அவர் எழுதிய கட்டுரைகள் பதினாறு கட்டுரைத் தொகுதிகளாக வெளி வந்திருக்கின்றன.
முரசொலியில் தொடர்ந்து உடன்பிறப்பிற்கு கடிதம் எழுதினார். அவை பனிரெண்டு மிகப்பெரிய தொகுப்புகளாக வெளி வந்திருக்கின்றன.
அவர் எழுதிய கவிதைகள் ஏழு தொகுப்புகளாக வெளி வந்திருக்கின்றன.
கவியரங்கக் கவிதைகளாக அவர் எழுதிய பக்கங்கள் தொகுக்கப்படாமல் இருக்கின்றன.
அவர் எழுதிய பல்வேறு உரைநடைப் படைப்புகள் முப்பத்தியிரண்டு தொகுப்புகளாக வெளி வந்திருக்கின்றன.
லட்சம் மேடைகளில் உரையாற்றியிருக்கிறார்.
அவருடை தலைசிறந்த உரைகள் 102 புத்தகங்களாக வெளிவந்திருக்கின்றன““.

கலைஞர் தமிழ் என நாம் கொண்டாடும் அளவுக்கு அவர்
சினிமா
நாவல்
சிறுகதை
நாடகம்
கட்டுரை
மேடைப் பேச்சு
என எல்லாவற்றிலும் தனக்கான நடையை உருவாக்கி, நாம் கலைஞர் தமிழ் என கொண்டாடி மகிழச் செய்திருகிறார்.
அவரது மொழிநடையானது, இலக்கிய, மரபு, கால, தேச வர்த்தமானங்களுக்கு ஏற்ப மாற்றங்களை உள் வாங்கிக் கொண்டு நவீன யுகத்துக்கான மொழியாகவும் வடிவம் கண்டுள்ளது. ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு வகையான நடை முக்கியப்பட்டு நிற்பதை தமிழ் இலக்கிய வரலாறு நமக்குணர்த்துகிறது.

இறையனார் களவியல் உரை முக்கியமான நடை மாற்றம். அதன் பின் திராவிட அடுக்கு மொழி நடை.

சங்க இலக்கியம் முதல் பல்வேறு வடிவ மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. அவற்றின் வழி மாற்றங்கள் கவிதை உரைநடை என இரு பெரும் வகையினூடு நுண் வடிவங்களாக பிரிந்து தமிழ் மரபு பயணிக்கிறது.

உரையாசிரியர்கள் மூலம் அறிமுகமான உரைநடை மரபு இன்று புதிய பரிணாமங்களின் வழி பயணிக்கிறது. 19ம் நூற்றாண்டில் மணிப்பிரவாள நடை முக்கியப்பட்டு தமிழ் தன் தனித்துவத்தை இழக்கும் நிலை ஏற்பட்டது.

தனித் தமிழ் இயக்கமும் திராவிட இயக்கமும் இதனை தடுத்து நிறுத்தும் முயற்சியில் பெரும் வெற்றி கண்டன. இன்று திராவிடத்துக்கு எதிராக குரல் எழுப்புவோர் இதனை மறந்து விடுகின்றனர். இந்த இயக்கங்களின் முயற்சிகள் இருந்திருக்காவிட்டால் இன்று சமஸ்கிருதம் கலந்த வேறொரு வடிவத்தை தமிழ் பெற்றிருக்கும்.

பேரறிஞர் அண்ணா உருவாக்கிய அடுக்குத் தமிழின் சிறப்பான வாரிசாக கலைஞரே முதன்மை பெறுகிறார்.

கலைஞர் தமிழ் நடை தனித்துவமானது. மேடைப் பேச்சு ,எழுத்து என இரண்டிலும் கலைஞரின் வீச்சு முக்கியப்படுகிறது. அறுபதுகளில் அவர் எழுத்து அன்றய இளைஞர்களை வெகுவாக கவர்ந்தது. பல நூறு இளைஞர்கள் அவர் எழுத்தில் மயங்கினர் என்று சொல்லலாம். கலைஞரைப் போல் எழுத்தால் பேச்சால் ஈர்த்தவர் வேறு யாரும் இல்லையென்றெ சொல்லலாம்.

கலைஞர் தமிழ் என நாம் பிரித்து பார்பதற்கு அதனை நியாயப் படுத்துவதற்க்கான காரணங்கள் நிறையவே உள்ளன. தனக்கான தமிழ் நடையை கவிதை, கட்டுரை, சிறுகதை,நாவல், சினிமா, மேடைப் பேச்சு என எல்லா தளத்திலும் அவர் முத்திரை பதித்தவர்

கையெழுத்து பத்திரிகையாக தொடங்கப் பட்ட முரசொலி, கலைஞரின் எழுத்தை தாங்கி இன்றுவரை தொடர்கிறது. கிட்டத்தட்ட எண்பது வருடங்கள். இது ஒரு உலக சாதனையே. உடன்பிறப்புக்கான கடிதங்கள் தமிழ் நாட்டின் அரசியல் வரலாற்றை கூறும் ஆவணம். உலகில் வேறு எந்த அரசியல் தலைவருக்கும் இல்லாத சிறப்பு இங்கு வெளிப்படுகிறது.

19 வயதில் அவர் எழுதிய முதல் நாடகமான “நச்சுக் கோப்பை”யில் இப்படி கூறுவார்.

““உபயோகமற்ற சமூகமே! உழுத்துப் போன

**பாலசுகுமார்**

பிசாசே! கொன்று விட்டாயா பழனியப்பனை? அவன் என்ன தவறு செய்தான்? ஏன் இந்தப் பழிகார வேலை? பள்ளந்தனில் வீழும் பழமைச் சமூகமே! சாகப் போகும் சாதிக் கட்டுப்பாடே! பொட்டுப் பூச்சியே! புன்னைத் தேரையே! அழு, இளி, அஞ்சு! குனி பிதற்று!..இது ஒரு உலகம்! இது ஒரு வாழ்வு! இதற்கொரு சமுதாயம்! கட்டியாள ஒரு கடவுள்! தூ..வெட்கமில்லை! நின்று தடை புரிந்த சமூகமே! நீ..நிச்சயம் தோல்வி கொள்வாய்““

இன்றைக்கும் இது எவ்வளவு பொருத்தமாக உள்ளது.

கலைஞரின் நாடக மொழி மக்களிடம் பெரும் பாதிப்பை உண்டாக்கியது. திராவிடர்கழக மகாநாடுகள் , தி.மு.க மகாநாடுகள், கூட்டங்கள் எல்லாவற்றிலும் சமூக பிரச்சினைகளை , சமூக சீர்திருத்த கருத்துக்களை, பகுத்தறிவு சிந்தனைகளை கொண்டு சேர்த்தன. பழந்தமிழ் நினைவுகளை மீட்டுத் தந்தன.

கலைஞர் தமிழ் என வகைப்படுத்துவதற்கான சான்றாதாரங்கள் அவர் நாடகங்களில் மிகுதியாகவே வெளிப்படுகின்றன. தமிழ் நாடக வரலாற்றில் கலைஞரின் தமிழ் முக்கிய பங்கு வகிக்கிறது.

இலங்கை கிழக்குப் பல்கலைகழக நுண்கலைத் துறை கலைஞரின் ““தூக்கு மேடை““ நாடகத்தை பாடப் புத்தகங்களில் ஒன்றாக வைத்திருந்தமை இங்கு குறிப்பிடத் தக்கது.

கலைஞரின் எழுத்து நடை பற்றி எழுத்தாளர் முருகேச பாண்டியன் ““திராவிட இயக்க வளர்ச்சியில் கலைஞரின் நாடகங்கள் ““எனும் நூலில் இப்படி குறிப்பிடுவார்.

““கலைஞரின் நடையானது தீவிரமான கருத்தினை கூர்மையான சொற்கள் மூலம் வெளிப்படுத்துகிறது. எனவே அவர் ,சொற்களின் பயன்பாடு மூலம் கேட்பவரின் மனதை சிந்திக்கத் தூண்டுகின்றனவாக உரையாடலை அமைப்பதில் அக்கறையெடுத்துக் கொண்டுள்ளார். உரையாடல்களில் எண்ணற்ற உவமைகளைப் பயன்படுத்துதல் போகிற போக்கில் புராண இதிகாச கதைகளை கேலி செய்தல், மூடநம்பிக்கைகளை கிண்டல் செய்தல்...... புராண இதிகாச அலங்கார நடை குடும்ப கதைகளின் வறண்ட நடை போன்றவற்றிலிருந்து கலைஞரின் நடை முற்றிலும் மாறு பட்டது... செயலூக்கம் மிக்கதாக மொழியை மாற்றியமைத்த பெருமை கலைஞரையே சாரும்““

இதனால்தான் கலைஞர் தமிழ் என நான் குறிப்பிடுகிறேன். பின்னால் தமிழில் எழுந்த தமிழ் உரை நடை மாற்றங்கள் கலைஞர் எழுத்தின் நீட்சியாகவும் கொள்ள முடியும்.

பல நூறு கவி பாடியிருப்பார் கலைஞர். எல்லோராலும் விதந்துரைக்கப் படும் ஒரு கவிதை அண்ணா இறந்த போது அவர் பாடியது

““கவியினில் பொருளெனக் கரும்பினில் சுவையெனக்
கதிரினில் ஒளியெனக் காவினில் மலரென
நிலவினில் குளிரென நிலமிசை வளமென
குலவிடும் அருவி குழறிடும் மொழியென
உலவிடும் காற்றில் ஏறிடும் இசையென
அலையெழுங் கடலில் ஆடிடும் நுரையென
கலைமணங் கமழக் கூடிய கவிஞர்
தலைமகன் அண்ணா திருப்புகழ் பாடிட
நிலமகள் வடிக்கும் கண்ணீர் அந்தோ!
வெள்ளம்! வெள்ளம்! மாபெரும் வெள்ளம்!““
என தொடரும் அது.

தமிழ் திரைப்படங்களின் போக்கையே திசை திருப்பியது கலைஞரின் தமிழ் பராசக்தி திரைப்படம். அந்த மாய வித்தையயை நிகழ்த்தி காட்டியது சிவாஜி எனும் அற்புத கலைஞனின் குரல் வழியான உடல் மொழி மூலம். இன்று வரை நடிக்க வரும் எல்லோருக்கும் வேதமாகிப் போனவை பராசக்தி வசனங்கள். தமிழின் மீட்சியாய் அமைந்த அவர் எழுத்துகள் சங்கத் தமிழ், தொல்காப்பிய பூங்கா, திருக்குறளுக்கான புதிய உரை சிலப்பதிகாரத்தை முதன்மைப் படுத்திய அவர் இலக்கிய செயல் பாடுகள் நவீன தமிழுக்கான புதிய முகத்தை தந்தன.

கம்ப ராமாயணத்தையும், புராணங்களையும் கொண்டாடிய காலத்தில் சிலப்பதிகாரத்தை முதன்மைப்படுத்தினார் கலைஞர்.

ரோமபுரிப் பாண்டியன் , பொன்னர் சங்கர், பாயும் புலிபண்டார வன்னியன், தன் எதுகை மோனை எழுத்தால் நவீன தமிழ் இலக்கியத்துக்கு மெருகு கூட்டிய எதுகை மோனைத் தமிழ். மாக்சிம் கோர்க்கியின் உலகப் புகழ் பெற்ற நாவலை தன் தமிழ் நடையில் சொன்ன திறன் கலைஞர் தமிழாய் விரிகிறது.

கலைஞரின் சிறுகதைகள் சமூக நீதியை பேசின, சமூக அவலங்களை வெளிப்படுத்தின. பகுத்தறிவை பறை சாற்றின. கலைஞரின் நளாயினி சிறு கதை பற்றி பேரசிரியர் அ.ராமசாமி இப்படி கூறுவார்;

““1950 முன்வைக்கும் முன்மாதிரியல்ல

தொடர்ச்சி... (பக்கம் -08 )

# என் மாய உலகைக் குழப்பியவர் (என் பிள்ளைப் பராயக் காதலன்)

மௌனகுரு சின்னையா

அப்போது எனக்கு பத்து வயது,,
சடங்குகள், விரதங்கள்
சம்பிரதாயங்கள்.
கிராம நடைமுறைகள்

பல மூடப்பழக்க வழக்கங்கள்,
புகழேந்திப்புலவரின் பெரிய எழுத்துப்பாரதக் கிளைக்கதைகள்.

அம்மா அப்பா, தாத்தா, பாட்டி ஊர்ப் பெரியவர்கள். ஊரில் நடைபெற்ற கூத்துக்கள் ஊடாகச் சில புராணக் கதைகள்,

அவற்றில் வரும் கடவுளர்கள் அவர்கள் திருவிளையாடல்கள் எனப் பல எனக்குள் புகுந்திருந்தன.

இவற்றுடனேயே வாழ்ந்து வந்தேன் என் உலமே வேறு.

அது ஓர் மாய உலகு. அற்புத உலகு
அந்த மாய உலகைக் குழப்பியவர் இந்தக் கருணாநிதி

அக்காலத்தில்தான் 10 சதத்திற்கு (ஒரு அணா) சிறிய சிறிய பகுத்தறிவுப் புத்தகங்கள் மட்டக்களப்பு வெலிங்டன் புத்தக சாலையில் அடுக்கி வைக்கப்படிருந்தன.

அவற்றை என் தந்தையார் எனக்கு அறிமுகம் செய்தார்.
மிட்டாய் வாங்கத் தந்த காசை அவற்றை வாங்கச் செலவு செய்தேன்.
ஈ.வே,ரா, அண்ணாதுரை, கருணாநிதி.
சி.பி சிற்றரசு அன்பழகன் என்பார் அவற்றை எழுதியிருந்தனர்.

அவர்கள் எனக்குப் புது உலகைக் காட்டினர். பின்னர் பகுத்தறிவு எழுத்துக்களில் நாட்டம் சென்றது.

தேடித் தேடி அவற்றை வாசிக்கலானேன்

பின்னர் கருணாநிதியின் எழுத்துக்கள் என்னை ஆட்கொண்டன முக்கியமாகத் தூக்கு மேடை நாடகம்.

சூனாமானக்காரர்கள் என இவர்கள் அன்று அழைக்கப்பட்டனர்
"நீ என்ன பெரிய சூனாமானாவா?"

என்று எங்கள் ஊர்ப் பெரியவர் ஒரு நாள் என்னிடம் கேட்டார்.
சூனாமானா அவருக்குப்பிடிக்காத சொல்
எனக்கு அதன் அர்த்தம் அப்போது விளங்கவில்லை.

சுயமரியாதை என்பது அதன் அர்த்தம் என்பது பின்னர்தான் தெரிந்தது.

நான் கருணநிதியின் எழுத்துக்களால் கவரப்பட்டேன்.

அவரது நாடகமொன்றில், தூக்குமேடை என நினைக்கிறேன் ஒரு இடம் வருகிறது

ஒரு ஆசிரியர், அவர் சமய பாட ஆசிரியர் "சந்திரகிரகணம் எப்படி வருகிறது? தெரியுமா?"
என்று கேட்டு மாணாக்கருக்கு அதனை விளக்குவார்

"ராகு கேது என்ற இரண்டு பாம்புகள் விழுங்குவதால் அது ஏற்படுகிறது"
என்பார்.

மாணவனோ

"சார் சார் சயன்ஸ் வாத்தியார் பூமியும் சூரியனும் சந்திரனும் நேர்கோட்டில் வரும்போது அது வருகிறது என்றாரே எது சார் சரி? குழப்பமாக இருக்கிறதே?"

எனக் குழப்பதுடன் வினவுவான்

"இதில் ஒரு குழப்பமும் இல்லை சமய பாடத்துக்கு என் விளக்கத்தை எழுது விஞ்ஞான பாடத்துக்கு அவர் விளக்கத்தை



எழுது"

என்பார் சமய வாத்தியார்

மாணவன் குழம்பிப்போய் நிற்பான்

எனக்கு அது இன்றும் மனதில் ஆழமாகப் பதிந்து விட்ட எழுத்துப்பகுதி

இன்று வரை தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் பாடசாலைகளில் இதே நிலைதான்.

ஆயிரம் கருணாநிதிகள் வந்தாலும் இந்நிலையை மாற்ற முடியாது போலும்

எங்கள் ஊரில் விரல் விட்டு எண்னக்கூடிய ஒரிரு சுனாமானாக் காரர்கள் இருந்தனர்.

நானும் என் சிறு வயதில் அவர்களில் ஒருவனானேன்

மூடநம்பிக்கைகளுக்கு எதிரான அவர்கள் கருத்துகள் என்னைப்பற்றிப் பிடித்துக்கொண்டன.

என் சிந்தனைபோக்கை அவை திசை திருப்பின.

உலகை இன்னொரு வகையில் புரிய வைத்தன

அந்தச் சிந்தனைப் போக்கில் நான் என் பிள்ளைப் பராயத்தில் காதலானேன்

என் பிள்ளைப் பராயத்துக்காதல் அது.

1950 களின் முற்பகுதி அது

பாடசாலைக் காலங்களில் என் வாசிப்பில் அநேகமானவை திராவிட,

திராவிட முனேற்றக்கழக எழுத்துக்கள்தான்.

தமிழுணர்வையும்
பகுத்தறிவுச் சிந்தனைகளையும்
அடுக்கு மொழியையும்
எனக்கு ஊட்டிய எழுத்துக்கள் அவை

பின்னால் நான் வேறு சிந்தனைகளுக்கு அறிமுகமாமானேன்

அவறின் மீது காதலானேன்

எத்தனை காதல் வந்தும் என்ன?

பிள்ளைப்பருவத்துக் காதலை மறக்க முடியுமா?
பின்னாளில் நான் பெற்ற கற்ற புதிய சிந்தனைகளின் ஒளியில் கருணாநிதியையும் பகுத்தறிவுவாதத்தையும்
தமிழ் உணர்வையும்
அடுக்குமொழியையும்
புரிந்து கொண்டது இன்னொரு கதை

என் உலக நோக்கை என் சிந்தனைபோக்கை இன்னொரு திசைக்கு என் சிறு வயதில் எடுத்துச் சென்ற அந்த இளைஞர் கருணாநிதி என் மனதில் பதிந்த பேருரு

இறுதிவரை அவர் கோவிலுக்குச் சென்றதில்லை என அறிகிறேன்

அவர் மஞ்சள் துண்டு போட்டபோது அவரைப்பற்றிப் பலகதைகள் வந்தன

அவர் பற்றிய விமர்சனக் கருத்துக்கள் பின்னாளில் எனக்கு வந்தன.

இன்றும் அவை உண்டு

அவர் சிந்தனைகளை,
எழுத்துக்களை
அவர் கூறிய இலக்கியக் கொள்கைகளை
என் பார்வையில் புரிந்துகொள்ளும் பருவமும் அனுபவமும் வந்தது

எனினும்

அப்பிள்ளைப் பருவத்துக் காதலை

இன்னும் நான் மறக்கவில்லை

பிள்ளைப் பராயத்துக் காதலை மறக்க முடியுமா?
கருணாநிதியை மறக்க முடியுமா?

தொடர்ச்சி...




மு.கருணாநிதி முன்னிறுத்தும் நளாயினி. தனது தோழிகளோடு நடத்தும் இந்த உரையாடலே அவள் எப்படிப்பட்டவள் என்பதைக் காட்டக்கூடியது.

" இதயா! உண்மையாகச் சொல்! நான் பத்தினியா! எப்படி?

"ஆமாம்! குஷ்டரோகம் பிடித்த கணவனைத் தாசி வீட்டுக்கு அனுப்பியிருக்கிறாயே"

"கிண்டல் செய்யாதே.. இதயா! குஷ்டரோகம் பிடித்தவனோடு கூடிக்கிடக்க எனக்கு விருப்பமில்லை. அவனோ என்னை ஆசையோடு அழைக்கிறான். அணைக்கவோ என் கை நடுங்குகிறது. ஆகவேதான் அவனைத் தாசி வீட்டுக்கு அனுப்பினேன். என் அழகுக்கு ஆபத்து வராமல் அவன் ஆவல் தீர்ந்தால் சரியென்று எண்ணினேன். இந்தத் தந்திரம் உனக்குத் தெரியாதா.. இதயா!"

"நானறியாதது ஒன்றுண்டா நளாயினி! ஆனாலும் உலகா நம்பியிருக்கிறாள். உன் பதிபக்தியை! குஷ்டரோகியைத் தாசிவீட்டுக்குத் தலையிலே தூக்கிக் கொண்டு போனதைப் பெரிய பதிபக்தி" என உலகா எண்ணுகிறாள்.

" தலையில் தூக்கிக்கொண்டு போனேன் என்கிறாயே நீயும். திருத்திக்கொள்.! கூடையில் வைத்துத் தலையில் தூக்கிக்கொண்டு போனேன். குஷ்டரோகியைக் கையால் தொட்டுத் தலையில் தூக்கிப்போக எனக்கென்ன பைத்தியமா? அதெல்லாம் ஜாக்கிரதையாகக் கூடையில் வைத்துத்தான் கொண்டுபோனேன்"

(மு.கருணாநிதி, நளாயினி - இரா.பிரேமா. பெண் மையச் சிறுகதைகள், சாகித்திய அகாதெமி)

மு.கருணாநிதியின் நளாயினி தன்னை உணர்ந்தவள். "தான் அறியாமல், ஒரு ஆடவனிடம் மாட்டிக் கொண்டேன்; அதிலிருந்து தப்பிக்க வேண்டும்" அந்தத் தப்பித்தலைத் தனது புத்திசாலித்தனத்தாலேயே வென்றெடுக்க நினைப்பவள்" தன்னை உணர்ந்த ஒரு பாத்திரமாகப் புராண காலத்து நளாயினியை முன்வைக்கத் தூண்டுவது வெறும் எழுத்து மனநிலை என்று சொல்லமுடியாது. எழுத்து, கலை போன்றவற்றின் சமூகப்பாத்திரத்தை நன்கு உணர்ந்த ஒருவரின் சிந்தனைதான் இப்படியான முன்வைப்பை - கட்டுடைப்பைச் செய்யும். திராவிட இயக்க எழுத்தாளர்கள் தங்களின் அரசியல் பார்வையோடு புராணக் கதாபாத்திரங்கள் பலவற்றைக் கட்டுடைத்துக் காட்டினார்கள். அந்த நோக்கம் முதன்மையாக அமைந்ததால், அவர்களின் கதைகளும் கவிதைகளும் புத்திசாலித்தனமான வெளிப்பாடுகளாக மட்டுமே இருந்தன. அந்தப் புத்திசாலித்தனம், சமூகமாற்றத்தை முன்வைக்கும் புத்திசாலித்தனம்."

கலைஞரின் நவீன எழுத்துகள் எல்லாவற்றிற்கும் பேராசிரியர் அ.ராமசாமியின் கருத்துக்கள் பொருந்தும்



# பட்டறிவு

# பண்டைய இலங்கையின் பாலியல் வழக்குகள்


“இலங்கையில் பேயோட்டுதலும் குணப்படுத்துவதற்குமான கலை” (Exorcism And The Art Of Healing In Ceylon) என்கிற பெயரில் போல் விஸ் (PAUL WIRZ) என்கிற மானுடவியலாளர் எழுதிய ஒரு நூல் 1954 ஆம் ஆண்டு நெதர்லாந்தில் (ஒல்லாந்தில்) வெளியிடப்பட்டது.

“இலங்கை” பற்றிய ஆய்வு என்கிற போதும் குறிப்பாக சிங்கள சமூகத்தைப் பற்றியே இந்த ஆய்வு நூல் பல விபரங்களை வெளிப்படுத்துகிறது. சிங்கள பாரம்பரிய பேயாட்டு சடங்குகள் குறித்த ஆய்வுகளுக்கு அடிப்படை விபரங்களை தரும் நூலாக அது திகழ்கிறது. இந்திய உதாரணங்களையும் அவர் பல இடங்களில் கையாள்கிறார்.

பில்லி, சூனியம், வேண்டுதல்கள், செய்வினை, கொடிவினை, நோய் தீர்த்தல், சாமத்தியச் சடங்கு, முதலிரவுச் சடங்கு, சிறுதெய்வ வழிபாடுகள் என பல்வேறு சடங்குகளைப் பற்றிய குறிப்புகளையும் அவை சார்ந்த தனது பார்வையையும் பதிவு செய்திருக்கிறார் போல் விஸ் .

இதில் ஒரு அத்தியாயம் “சிங்கள சமூகத்தில் பாலியல் வாழ்க்கை” என்பது பற்றியது. அதில் ருதுவாதல், திருமணம், முதலிரவு, கருவுறல், பிறப்பு, குழந்தை வளர்ப்பு, வசீகரப்படுத்தும் சடங்கு, நிர்வாணக் கலை, ரொடியோ சாதியினரின் மீது திணிக்கப்பட்ட “கச்சையணிவதன் தடை” என நீள்கிறது அதன் உள்ளடக்கம்.

ஒரு இடத்தில் “பத்வலங் கஹுனவா” ("bat valan gahanava") என்கிற ஒரு பதம் பிரயோகிக்கப்படுகிறது. அதாவது அந்தக் காலத்திலேயே பெண்கள் “ஓரினச்சேர்க்கை”யில் (Lesbianism) ஈடுபடுவதைக் குறிக்க சிங்கள சமூகத்தில் புழக்கத்தில் இருந்த ஒரு பதம் பற்றிய குறிப்பு. அதை நேரடியாக மொழிபெயர்த்தால் “சோற்றுச்சட்டியை வழித்தல்” (அல்லது தேய்த்தல் என்றும் பொருள் கொள்ளலாம்). இது எப்படி “பெண் ஓரினச் சேர்க்கை”க்கு குறியீடாக பொருள்கொள்ளப்பட்டது என்பது புரியவில்லை. அந்த நூலில் அதற்கான விளக்கமுமில்லை.




ஆணாதிக்க சமூகத்தால் சோறு சமைத்தல் உள்ளிட்ட சமையல், வீட்டுப்பணிகள் போன்ற பொறுப்புகள் சுமத்தப்பட்டுள்ள பெண்களுக்கு சோறு சமைக்கும் பாத்திரங்களும் ஒரு வகையில் பெண்களின் குறியீடாகவே பார்க்கப்படுகிறது.

ஆரம்பத்தில் அதிகமாக கரையோரப் பிரதேசங்களிலேயே இந்தப் பதம் புழக்கத்தில் இருந்திருக்கிற போதும் இப்போது அப்படியொரு சொல் பயன்படுத்தப்பட்டதற்கான தடமே இல்லை. சோற்றுச்சட்டியை வழிப்பது என்பது சாதாரண வழக்கம். சமூகத்தில் ஒருபாலுறவு குறித்த புரிதல் காரணமாக காலப்போக்கில் இந்த பதம் சாதாரண சமூகப் புழக்கத்திலிருந்து கூட இல்லாமல் போயிருக்கிறது. இது



குறித்து பரவலாக சிங்கள ஆய்வாளர்கள் மத்தியில் பேசப்படுவதையும் காண முடிகிறது.

அந்த நூலில் இந்தப் பதத்தைப் பற்றி குறிப்பிடும் 250வது பக்கத்தில் இன்னொரு கதையையும் குறிப்பிடுகிறார் போல் விஸ். ஒரு நடுத்தர வயதைச் சேர்ந்த ஆணொருவர் பசுவொன்றுடன் பாலுறவு கொண்டது ஊரில் பகிரங்கப் பட்டுப்போய்விடுகிறது. அவமானம் தாங்காமல் அந்த ஊரை விட்டு இன்னொரு ஊருக்குத் தப்பிச் சென்று விடுகிறார். பலராலும் அது ஓரளவு மறக்கப்பட்டதன் பின்னர் ஐந்து வருடங்களுக்குப் பின் மீண்டும் ஊரை வந்தடைகிறார்.

சுய கைமைதூனம் என்று அழைக்கப்படும் சுய பாலுறவின்பம் அந்தக் காலத்திலேயே “அத்த கஹுனவா” என்று அழைக்கப்பட்டிருக்கிறது.

பாலியல் வசியம் செய்வதற்காக அன்றைய நாட்டுமருத்துவத்தில் “வயச குறுகம” என்று பிரசித்தமாக அழைக்கப்பட்டிருக்கிறது. அதற்கான மருத்துவ பதார்த்தம் (“பெஹெத் படு”) செய்வதற்காக பயன்படுத்தப்பட்ட மூலிகைகள் பற்றிய விபரங்களையும் விளக்கியிருக்கிறார் போல் விஸ் .

ராபர்ட் நொக்ஸ் எழுதிய “இலங்கைத் தீவின் வரலாற்றுத் தொடர்பு” ( An Historical Relation of the Island of Ceylon by Robert Knox - 1681) நூலானது அன்றைய இலங்கையை அறிய பலராலும் பயன்படுத்தப்படும் முக்கிய நூல். அந்த நூலில் “வீட்டுக்கு வரும் விருந்தினர்களை உபசரிக்கவென தமது மனைவியரை அன்றைய இரவு பகிர்வது விருந்தோம்பலின் அங்கமாக சிங்களவர்கள் மத்தியில் இருந்ததைக் குறிப்பிட்டிருக்கிறார். அதை போல் விஸ் தனது நூலில் எடுத்துக் காட்டியதுடன். ஆண்கள் தமது மனைவியரை ஒரு சொத்தாகக் கையாண்டு தமது சகோதர்களுடன் பகிர்ந்துகொள்ளும் வழக்கம் இருந்ததையும் தெரிவிக்கிறார். (அந்த மரபைப் பற்றி தனியான ஒரு கட்டுரையில் பின்னர் பார்க்கலாம்.)

இரு நபர்களுக்கிடையிலான பாலுறவை அசாத்தியப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் சூனியத்துக்கு “கலவ பந்திம” என்கிற சொல் இருந்திருக்கிறது.

அந்த நூலில் அதனை “கலவ பந்திம” என்கிற சொல்லால் அழைக்கிற போதும் இன்றைய சிங்கள ஆய்வுகளில் “கலவ பந்தனய” என்றே அழைக்கப்படுவதைக் கவனிக்க முடிகிறது. பாலுறுப்புகளில் ஏற்படும் நோய்கள், அல்லது பாலியல் சார் பீதியுணர்வு என்பவற்றை சரிசெய்வதற்கான உளவியல் சடங்காகவே “கலவ பந்தனய” என்கிற இந்தச் சடங்கைச் செய்ததாக இன்றைய ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பௌத்த விகாரைகளில் பிக்குமாரின் பாலியல் தேவைக்காக இளம் பிக்குமாரும், அங்கு பணிபுரிபவர்களும் துஸ்பிரயோகம் செய்யப்படும் போக்கைப் பற்றி குறிப்பிடும் போது “பௌத்த விகாரைகளில் இப்படி நிகழ்வதைப் பலரும் அறிவார்கள் என்றும் அந்தச் செயலை “பன்சல சூதுவ” ("temple diversions") என்று அழைக்கப்படுவதையும் விபரிக்கிறார்.

**என்.சரவணன்**

இந்த நூலில் காலத்தால் அழிக்கப்பட்ட பல பதங்களின் குறிப்புகளைக் காண முடிகிறது. குறிப்பாக இந்த அத்தியாயத்தில் பாலியல் சார்ந்த கலைச்சொற்கள் பற்றிய ஒரு பட்டியலே இருக்கிறது.

இலங்கையில் சிங்கள சமூகத்தில் இருந்த ரொடியோ சாதிப் பெண்கள் மார்பை மறைப்பதில்லை. சிங்கள அரசாட்சி காலத்திலேயே ரொடியோ பெண்கள் மார்பை மறைக்க அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. அதேவேளை தேயிலை, இறப்பர் தோட்டங்களில் பணிபுரியும் மலையகப் பெண் தோட்டத் தொழிலாளர்களும் மேலே வேறெதுவும் அணிவதில்லை அவர்கள் தாம் அணிந்துள்ள சேலையினால் மார்பை மறைத்துக் கொள்வார்கள் என்று விளக்குகிறார்.

இந்த நூலை எழுதியவர் ஈ.எல்.பிரில் (E. I. Brill) என்று சிங்கள கட்டுரைகளில் காணக்கிடைக்கிறது. ஆனால் பிரில் அந்த நூலை வெளியிட்டவர் மாத்திரம் தான். அந்த நூலின் அட்டையில் இருவரின் பெயரும் மேலும் கீழும் காணக்கிடைப்பதைப் பார்த்து பிரில் என்று நம்பியிருக்கக் கூடும்.

இந்த நூலை எழுதுவதற்கு அவர் கள ஆய்வுகள் செய்தது போல அவருக்கு முன் இவை சார்ந்து எழுதிய பல நூல்களையும் மேற்கோள் காட்டியிருக்கிறார். அதற்காக அவர் பயன்படுத்திய முக்கிய இரு நூல்களில் ஒன்று 1928இல் ஆனந்த குமாரசுவாமியால் எழுதப்பட்ட “யக்சாஸ்” (Yakshas) என்கிற நூல். அந்த நூல் இரு தொகுதிகளாக வெளியிடப்பட்டிருக்கிறது. அடுத்தது “இலங்கையில் பேயியலும் சூனியமும்” (On Demonology and Witchcraft in Ceylon – 1865) என்கிற நூல். அது முதலியார் தந்திரிஸ் டீ சில்வா குணரத்ன என்பவரால் எழுதப்பட்டது அது. இந்த ஆய்வுகளின் பின்னைய நீட்சியையும், மேலதிகமாக ஆராய்ந்து போல் விஸ் தனது நூலை வெளியிட்டிருந்தார். பின் வந்த ஆய்வுகளுக்குக் களமமைத்த முக்கிய நூல் என்கிற சிறப்பை இந்த நூல் பெறுகிறது.

## சிறுகதை, சித்திரப்போட்டி- 2018

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி (F)பைன் ஆட்ஸ் கலைக் கழகத்தினால் நடாத்தப்படுகின்றது.

நிபந்தனைகள்:

வயது எல்லை: 7-11 (கீழ் பிரிவு)
12-18 (மேற் பிரிவு)
போட்டிக்கான கருப்பொருள்: தற்கால சிறுவர் செயற்பாடுகள்

சிறுகதை – 175-200 சொற்கள். (A4தாளில் அமைய வேண்டும்)

சித்திரம் - A4 தாளில் அமைய வேண்டும்.
வர்ண ஊடகம் எதுவாகவும் அமையலாம்.

ஒவ்வொரு பிரிவிற்கும் முதல் மூன்று இடங்களுக்கான பெறுமதியான பரிசுகளும், சான்றிதழும் வழங்கப்படும்.

ஆக்கங்கள் கிடைக்க வேண்டிய இறுதித் திகதி: 30.08.2018
தங்கள் ஆக்கத்துடன் விண்ணப்பத்தினையும் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
---- விண்ணப்பதாரியின் பெயர்.
---- ஆக்கத்தின் பெயர்.
---- வயதுப்பிரிவு.
---- முகவரி.
---- தொலைபேசி இலக்கம்.

அனுப்ப வேண்டிய முகவரி:
சிறுகதை சித்திரப்போட்டி- 2018
(கு)பைன் ஆட்ஸ் கலைக் கழகம்.
07,பயனியர் வீதி,
மட்டக்களப்பு.
ஆக்கங்கள் சொந்தப் படைப்பாக இருப்பதோடு இருவரையில் வெளிவராதவையாக இருத்தல் வேண்டும்.

மேலதிக தொடர்புகள்: 0776404202, 0772351780, 0776159685

# நடந்தாய் வாழி களனி கங்கை ..... அங்கம் 13

## ஆமர் வீதியில் மேதினமன்று கொல்லப்பட்ட ரணசிங்க பிரேமதாச


### ஏழைபங்காளன் வாழ்வு வீதியில் முடிவுற்ற சோகத்தை சுமக்கும் நினைவுத்தூபி

கிராண்ட்பாஸ் வீதி நெருங்கும் ஆமர்வீதிச் சந்தி இலங்கை அரசியல் வரலாற்றிலும் உலக அரசியல் வரலாற்றிலும் தவிர்க்க முடியாத ஒரு அத்தியாயத்தை எழுதி வைத்துள்ளது.

1993 ஆம் ஆண்டு மே மாதம் 1 ஆம் திகதி உலகத்தொழிலாளர்களுக்கான மேதினம். அன்றைய தினம் ஊர்வலத்திற்கு தலைமைதாங்கி வந்துகொண்டிருந்த அன்றைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச ஒரு தற்கொலை குண்டுதாரியின் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

இச்சம்பவம் குறிப்பிட்ட கிராண்ட் பாஸ் வீதியும் ஆமர் வீதியும் சந்திக்கும் நாற்சந்தியில் நடந்தது.

"விதி வலியது" என்பார்கள். அவர் கொல்லப்படுவதற்கு சுமார் ஏழு நாட்களுக்கு முன்னர் தலைநகரின் புறநகரான கிருலப்பனை என்ற இடத்தில் நடந்த தேர்தல் பிரசாரக்கூட்டம் ஒன்றில் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி சுட்டுக்கொல்லப்பட்டார்.



ஒருவயதில் பிரேமதாச

அவரைச் சுட்டவர் யார்..? என்பது இதுவரையில் ஊர்ஜிதப்படுத்த முடியாத செய்தி...! எனினும் அக்காலப்பகுதியில் லலித்தும் காமினி திஸாநாயக்காவும் பிரேமதாசவுக்கு எதிராக இயங்கினார்கள். அதனால் லலித்தின் கொலைச்சம்பவத்தில் பிரேமதாசவுக்கும் பங்கிருக்கலாம், அல்லது அவ்வாறு ஒரு சம்பவம் கிருலப்பனையில் நடக்கும் என்று பிரேமதாசவுக்கு முற்கூட்டியே தெரிந்திருக்கலாம் என்ற வதந்தி தலைநகரில் பரவியிருந்தது.

இந்த வதந்தி பிரேமதாசவையும் எட்டியிருந்தது. அத்தகைய வதந்தி விஷம்போல் பரவிவருவதை தனக்கு நம்பிக்கையான புலனாய்வாளர்கள் ஊடாக தெரிந்துகொண்ட பிரேமதாச, தன்னை சுத்தமான தலைவராக நிருபிக்கவேண்டிய தேவையும் வந்திருக்கவேண்டும்.

லலித் கொல்லப்பட்ட இடத்திலேயே சில தினங்களில் மற்றும் ஒரு கூட்டத்தில் கலந்துகொண்ட பிரேமதாச, சில நிமிடங்களே பேசிய வார்த்தைகளும் அக்காலப்பகுதியில் வெளியான ஊடகங்களில் பதிவாகியிருக்கின்றன.

" என்னைக்கொல்லுங்கள். ஆனால், என் வாழ்நாள் முழுவதும் நான் பேணிப்பாதுகாத்திருக்கும் எனது பெயருக்கு களங்கம் கற்பித்துவிடாதீர்கள்" இதுவே அவரது இறுதி மேடைப்பேச்சு.

அத்துடன் நின்றுவிடாமல், தான் எப்பொழுதும் மக்களின் தொண்டன், மக்களுடன்தான் நிற்பேன் என்ற மன வைராக்கியத்துடன், பாதுகாப்பு தேவைகளையும் கவனத்தில் எடுக்காமல் மே 1 ஆம் திகதி மக்களோடு இணைந்து ஊர்வலத்தில் வந்தார்.

ஆமர் வீதியும் கிராண்ட் பாஸ்வீதியும் சந்திக்கும் இடத்தில் ஒரு பொலிஸ்நிலையமும் இருப்பதை நெடுங்காலமாக அவதானித்திருப்பீர்கள். அத்தகைய பாதுகாப்பான பிரதேசத்தில்தான் காலன் அவரைத்தேடி வந்து அவர் உடலை சிதைத்து உயிர் குடித்தான்.

பிரேமதாச.

அவருடைய கடும் உழைப்பும் மக்களிடம் அவர் பெற்றிருந்த செல்வாக்கும் அவரை 1977 இல் பதவிக்கு வந்த அரசில் பிரதமராக்கியது.

சுறுசுறுப்பும் திட்டமிடலும், சாமர்த்தியமும் அவரது இயல்புகள். அவைதான் அவரால் தேசத்தின் ஜனாதிபதியாவதற்கும் வழிகோலியது.

நம்பிக்கையானவர்களை எப்பொழுதும் தன்வசம் வைத்துக்கொண்டிருந்த அவர், தனது முக்கிய பொறுப்புகளை கவனிக்கும் பணிகளை ஐந்து தமிழ் லிங்கங்களிடம் வழங்கியிருந்தார்.



அவ்விடம் அவர் நீண்டகாலமாக நாடாளுமன்றத்திற்கு தெரிவான கொழும்பு மத்திய பிரதேசமாகும். அந்தப்பகுதியில் வாழைத்தோட்டம் என்ற பிரதேசத்தில் ஒரு சாதாரண ஏழைக்குடும்பத்தில் ரிச்சர்ட் ரணசிங்க - என்சினிஹாமி தம்பதியரின் மூத்த புதல்வனாக 23-06-1924 இல் பிறந்திருக்கும் பிரேமதாச இளமைக்காலத்தில் ஏழ்மையில் வாடியிருந்தவர்.

தாயார் தயாரித்துத்தரும் லெவரியா என்ற சிற்றுண்டியை விற்றுவந்து, குடும்பத்தின் பசிபோக்கிய சிறுவன், படிப்படியாக கற்று, அநகாரிக தர்மபாலவின் போதனைகளினால் பெரிதும் கவரப்பட்டு, தனது வயது இளைஞர்களுடன் இணைந்து வாழைத்தோட்டம் பிரதேசத்தில் சுச்சரித்த இயக்கம் என்ற சமூகசேவை அமைப்பை உருவாக்கினார். சிரமதானம், மக்கள் சேவை என்று இளம் வயதிலேயே மக்கள் மத்தியில் பிரபலமாகத்தொடங்கி, தனது 26 வயதில் கொழும்பு மாநகர சபைத்தேர்தலில் 1950 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் போட்டியிட்டு வென்றார். அன்றுமுதல் அவர் மரணித்த 1993 ஆம் ஆண்டுவரையில் அவரது வாழ்க்கை ஏறுமுகம்தான்.

மெத்தப்படித்தவர்களும் சமூக அந்தஸ்தும் செல்வச்செழிப்பும் உள்ளவர்கள்தான் அரசியலுக்கு வரமுடியும் என்றிருந்த பொது விதியை மாற்றி, ஒரு கீழ்மட்ட சாதாரண பிரஜையும் தேசத்தை ஆளமுடியும் என்று நிருபித்துக்காண்பித்த ஒரு சாதனையாளர்தான் ரணசிங்க பிரேமதாச.

கொழும்பு மாநகர சபைக்குத் தெரிவாகி, ஐந்து ஆண்டுகளில் பிரதி மேயராகவும் அதன் பின்னர் மேயராகவும் தெரிவாகி, 1960 இல் கொழும்பு மத்திய தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராகி, 1965 இல் டட்லி சேனாநாயக்கா தலைமையில் உருவான கூட்டரசாங்கத்தில் நியமன எம்.பி.யாக தெரிவான மு. திருச்செல்வம் உள்ளூராட்சி அமைச்சரானபோது அவருக்கு துணை அமைச்சரானார்.

திருச்செல்வம் பதவி விலகியதும் சுமார் மூன்று ஆண்டுகள் உள்ளூராட்சி அமைச்சரானார். இரவில் நேரம் கடந்து உறக்கத்திற்குச்சென்று, அதிகாலையே துயில் எழுந்து, பொதுமக்களின் தேவைகளை தனது வாசஸ்தலத்திலிருந்தே கவனித்து மக்கள் தலைவராக வளர்ந்தவர்தான்



பாஸ்கரலிங்கம், சுந்தரலிங்கம் உட்பட மேலும் மூன்று லிங்கங்கள் அவரது அதிகாரிகளாக விளங்கினர். நாடெங்கும் ஆயிரக்கணக்கான வீடமைப்புத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி, கிராமோதயம் என்ற பதம் நாடெங்கும் ஒலிக்கச்செய்தவர்.

உதாகம (கிராம எழுச்சி) - கம்உதாவ (கிராமோதயம்) ஆதரவற்ற குழந்தைகளுக்கான செவன சரண திட்டம், ஜனசவிய என்ற வறுமை ஒழிப்புத்திட்டம், பாடசாலை மாணவருக்கு இலவசச் சீருடை, சத்துணவு, இலவச பாடப்புத்தகங்கள் விநியோகம் என்பன அவரால் அறிமுகப்படுத்தப்பட்ட ஏழைமக்களுக்கான



ஆறுவயதில் பிரேமதாச

மறுமலர்ச்சித்திட்டங்களாகும்.

அவர் அரசியல்வாதியாக மாத்திரம் இயங்கவில்லை. அவரும் ஒரு எழுத்தாளர் என்பதை பலரும் அறியமாட்டார்கள். கதைகள், கட்டுரைகள், சிறுவர் இலக்கியம் முதலான துறைகளிலும் நூல்கள் எழுதியுள்ளார்.

அவை அவரது தாய் மொழியான சிங்களத்தில் மட்டுமல்லாது ஆங்கிலத்திலும் வெளியாகியுள்ளன.

இளம்வயது முதல் மச்சம், மாமிசம் உண்ணாமல், வேறு தீய பழக்கங்களும் அற்று, காந்தியத்திலும் நம்பிக்கை கொண்டிருந்த அவர், இந்தியாவின் உறவை அண்டை நாட்டுக்கான நல்லெண்ணத்தில் மாத்திரமே வைத்திருக்கவிரும்பியவர்.

வடமராட்சியில் லலித் அத்துலத் முதலியின் உத்தரவினால் நடந்த ஒப்பரேஷன் லிபரேஷன் தாக்குதலையடுத்து, இந்தியாவின் தலையீடு இலங்கையில் வந்ததை அவர் அடியோடு விரும்பவில்லை. வரலாற்று முக்கியத்துவம் மிக்க ராஜீவ்

ரஸஞானி

- ஜே. ஆர். செய்துகொண்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கைச்சாத்திடல் நிகழ்வையும் அவர் புறக்கணித்தார்.

இந்திய அமைதிப்படை(?) இலங்கையில் நிலைகொண்டிருந்த வேளையிலேயே புலிகள் இயக்கத்தினரை "My Boys" என விளித்து அழைத்து தலைநகரத்தில் தங்கவைத்து, உபசரித்து சமாதான பேச்சுவார்த்தையை நடத்தி, புலிகளுக்குத் தேவையானவற்றையும் வழங்கி உதவினார்.

இறுதியில் அவரது சுச்சரித்த இல்லத்திற்கு அருகில் சாண்டர் பிளேஸில் ஒரு சிறிய பலசரக்கு கடையில் வேலைசெய்துகொண்டு, அடிக்கடி அந்த இல்லத்திற்கும் சென்றுவந்த, யாழ்ப்பாணம் குருநகர் பகுதியைச்சேர்ந்த பாபு என அழைக்கப்பட்ட குமாரகுலசிங்கம் வீரகுமார் என்ற இளைஞன் துவிச்சக்கரவண்டியில் வந்து பிரேமதாச நடந்துவந்துகொண்டிருந்த ஊர்வலத்தின் நடுவே குறுக்கிட்டு தன்னையும் மாய்த்து,

தொடர்ச்சி... (பக்கம் -23 )

# படுவான் திசையில்

## நீருக்கு போராடும் படுவான்கரை!

'குடிநீருக்காக வரிசையில் நிற்கும், குளிப்பதற்காக வாய்க்கால்களை தேடி அலையும் மாதம் தொடங்கிவிட்டது. ஆடி பிறந்தாலே படுவான்கரை மக்களுக்கு தண்ணீர்ப்பிரச்சினை உருவெடுத்துவிடும்' என மாவடிமுன்மாரி சந்தியில் நின்றுகொண்டு வடிவேலும் சந்திரனும் பேசிக்கொண்டனர்.

வீட்டில் இருப்பதை அள்ளிக்கொடுத்துவிட்டு, பட்டினியாய் கிடக்கிற சமூகமாக அன்றுதொட்டு இன்றுவரை படுவான்கரை மக்கள் வளர்ந்துவிட்டனர். தமக்கு உண்பதற்கு உணவில்லாவிட்டாலும், வீட்டுக்கு வரும் விருந்தாளிக்கு



உணவளிக்காமல் அனுப்புகின்ற பண்பு படுவான்கரை மக்களிடையே இல்லை. இன்றும் பலர் சொல்லுவர், படுவான்கரை மக்கள் கொடுத்த உணவையும், உபசரிப்பையும்.

அதுபோலதான் தம்பகுதியில் அமைந்துள்ள உன்னிச்சை குளத்தில் உள்ள நீரை எழுவான்கரையில் உள்ளோர் அருந்துகின்றனர். ஆனால் படுவான்கரையில் உள்ள மக்கள் குடிநீருக்காக வரிசையில் நிற்கும் காலம் இன்னமும் மாறவில்லை.

ஆடி மாதம் பிறந்தாலே படுவான்கரைப்பகுதியில் உள்ள கிணறுகளில் நீர் வற்றிவிடும். கிணறு என்று குறிப்பிட்டாலும், நிறைவான கிணறில்லை. குறைவான கிணறுகளே உள்ளன. ஒரு கிணற்று நீரை பல குடும்பங்கள் பயன்படுத்துவதே வழமை. அவ்வாறான சூழலோடு இணைந்ததாகத்தான், மண்முனை தென்மேற்கு பிரதேசத்தில் உள்ள மாவடிமுன்மாரி கிராமம் அமைந்துள்ளது. இங்குள்ள மக்கள், நீர் கிடைக்கக்கூடிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள கிணறுகளில் உள்ள நீரினை குடிப்பதற்கும், குளிப்பதற்கும் பயன்படுத்தி வருகின்றனர். ஆனாலும் அந்நீரானது ஆடி மாதத்தின் அதிக வெப்பத்தினால் வற்றி, வெறும் கிணறுகள் மட்டுமே காணப்படும். அக்கிணறுகளும் வீடுகளுக்கு அண்மையில் இருக்காது, சிறிது தூரம் நடந்து சென்றே, அன்றாடம் குடிநீரைப் பெற்றுக்கொள்ள வேண்டியேற்படும்.

இவ்வாறான சூழலில் ஆடி பிறந்தால், பிரதேசசபையும் அப்பகுதி மக்களுக்கான குடிநீரை வழங்குவதற்கு தயங்காமல், வருடாந்தம் பொதுவான இடங்களில் நீர்த்தாங்கிகளை வைத்து குடிநீரினை வழங்குவர். அந்நீர் போதாதென்ற கருத்தும் மக்களிடத்தில் இருக்கத்தான் செய்கின்றது. இவ்வாறான மக்களின் இல்லங்களுக்கு குடிநீரினை குழாய்மூலமாக வழங்கினால், எவ்வளவு மகிழ்ச்சியடைவர் என்பதனை, அவர்கள் ஒவ்வொரு நாளும் முட்டிகளிலும், ஏனைய பாத்திரங்களிலும் சுமக்கும் சுமையின் வலிமையான முகங்கள் காட்டிக்கொடுக்கின்றன. அவ்வாறான நீரினை எதிர்பார்த்தும், பலரிடம் குறிப்பிட்டுக்கொண்டும் இருக்கின்றனர் என்றான் வடிவேல்.



குடிப்பதற்கான நீரினை பிரதேசசபையினர் வழங்கிவிடுகின்றனர். குளிப்பதற்கு நீருக்கு என்ன செய்கின்றனர் என்ற வினாவும் சந்திரனுக்கேற்படாமல் இல்லை. வடிவேலும் தொடர்ந்தான், மாவடிமுன்மாரி மக்களின் அவலத்தினை; மாவடிமுன்மாரியில் 10 பொதுக்கிணறுகள் இருக்கின்றன. இவற்றில் ஒரு சில குடிப்பதற்கு பயன்படுத்த முடியாத கிணறாக இருந்தாலும் குளிப்பதற்கான நீராக பயன்படுத்தக்கூடிய வகையில் உள்ளது. குறிப்பாக ஓரிரு அடி உயரத்தில் நீர் காணப்படும். இதனை ஒருசிலர் பயன்படுத்த, பலர் ஆறுகளை அண்டிய பகுதியில் உள்ள வாய்க்கால்களில் குழிகளைத் தோண்டியே குளிப்பதற்கான நீரினை பெற்றுக்கொள்கின்றனர். வாய்க்கால்கள் என்றால், வீட்டுக்கு பக்கத்தில் இல்லை.

**படுவான்கரையின் உன்னிச்சைக்குளத் தண்ணீரை மட்டக்களப்பு நகர மக்கள் அருந்த, படுவான்கரை மக்களுக்கோ குடிநீர் கிடையாது.**

இரண்டு, மூன்று கிலோமீற்றர் தூரத்திற்கு செல்ல வேண்டிய நிலையும் உள்ளது. இவ்வாறான நிலையின்பால் எத்தனை மாணவர்கள் காலை பாடசாலை செல்வதற்கு அவதியுறுவர் என்பதனை கற்பனைபண்ணிப்பார் என்றான் வடிவேல்.



ஆடி தொடங்கினால் குடிநீர், குளிநீர் எனப் போராடும் மக்களுக்கு ஐப்பசி மாதத்தில் நிறைவான நீர் கிடைத்துவிடும். ஆனால், பாதூகாப்பென்ற வலையில் இங்குள்ள மக்கள் சிக்கியவர்களாத்தான் இருக்கின்றனர். அமைக்கப்பட்டுள்ள பொதுக்கிணறுகள் மக்கள் குடியிருப்புக்களுக்கு அண்மையில் இல்லாமல் வீதியோரங்களிலும், வயல்நடுவிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதனால், நீரை அள்ளும் நேரங்கள் மட்டுமே குடிநீருக்கான பாதுகாப்பினை அங்குள்ள மக்கள் வழங்குகின்றனர். அவ்விடத்தில் நீரினை அள்ளிச்சென்றுவிட்டாலும் குடிநீருக்கான பாதுகாப்பென்பது இல்லாமலாகிவிடுகின்றது. கிணற்றினை மூடிவிடுவதற்கான வசதியும் அங்கில்லை. அதேவேளை பொதுக்கிணறுகளைச்சுற்றி, சுற்றுவேலிகளோ, எவ்வித மறைப்புகளோ இல்லை. நகரத்தில் வாழ்கின்ற மக்கள் தமது குடும்பத்திற்கென வீட்டிலே நீர் இருக்கின்ற போதிலும், அந்நீரினை தாங்கள் மட்டுமே பயன்படுத்துகின்ற போதிலும், வீட்டினைச்சுற்றி மதில்களும்,


**படுவான் பாலகன்**

மறைப்புக்களும் கட்டியுள்ள நிலையிலும், நான்கு சுவர்களை கட்டி குளிப்பதற்கென ஒரு அறையினை உருவாக்கியிருக்கின்றனர். ஆனால் மாவடிமுன்மாரி போன்ற கிராமங்களில் உள்ள கிணற்றிச் சுற்றி எவ்வித மறைப்புக்களுமே அமைக்கப்படாமை வேதனையானதே என்றான் சந்திரன்.

குடிநீருக்கான போராட்டம், உலகில் மிகத்தீவிரமாக உருவெடுக்குமென பலரும் குறிப்பிடுகின்ற அதேவேளை, குடிநீரினை சிக்கனமாக பயன்படுத்தவேண்டுமென்பதனையும் வலியுறுத்துகின்ற சூழலில், குடிநீரை மக்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கான வழிவகைகளையும் தேடி, குடிநீரினை பெற்றுக்கொடுத்துவருகின்ற நிலையில் குடிநீருக்காகவும், குளிநீருக்காகவும் ஏங்கும் மாவடிமுன்மாரி போன்ற பல கிராமங்கள் படுவான்கரையில் உள்ளன. அவற்றினையும் பார்வையிட்டு மக்களின் தேவைகளுக்கு முன்னுரிமையளிக்க வேண்டுமென்பது வடிவேலினதும், சந்திரனும் வார்த்தையாக இருந்ததுடன். குடிநீரை துவிச்சக்கரவண்டியிலே சுமந்துகொண்டு வந்த பழனிச்சாமியினை நிறுத்தி, குடிநீரினை அருந்திவிட்டு, அவ்விடத்திலிருந்து இருவரும் அகன்றனர்.

பக்கத்துக்கான அனுசரணையாளர்
-------------------------------
அலையப்போடியார் நல்லரத்தினம்
ஸ்தாபகர் : அறிவாலயம் கல்வி மையம்
வாழ்நாள் நன்கொடையாளர்:
சக்தி மகளிர் இல்லம்


# நுளம்பால் நுளம்பை அழித்தல்!



டெங்கு காய்ச்சல் பரவலுக்கு நுளம்புகள் காரணமாக உள்ள நிலையில், நுளம்புகள் மூலமாகவே ஒரு நகரம் முழுதும் டெங்குக் காய்ச்சலைக் கட்டுப்படுத்தியுள்ளனர் அவுதிரேலியாவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள்.

இயற்கையாகவே தொற்றும் பாக்டீரியாக்களை உடைய, ஆய்வகங்களில் வளர்க்கப்பட்ட நுளம்புகள் டௌன்ஸ்வைல் நகரத்தில் வெளியிடப்பட்டன. அந்தக் நுளம்புகள் அந்நகரின் பொது வெளியில் உள்ள நுளம்புகளுடன் உறவு கொண்டன.

இதன் மூலம் டெங்கு காய்ச்சல் தொற்றாமல் தடுக்கும் வோல்பாசியா (Wolbachia) எனும் பேக்டீரியா அந்நகரில் பரவியது. இதனால் 2014ஆம் ஆண்டு முதல் டௌன்ஸ்வைல் நகரத்தில் டெங்கு தொற்று யாருக்கும் இல்லை. நுளம்புகள் மூலம் பரவும் ஜிகா மற்றும் மலேரியா போன்ற நோய்களையும் இதே வழிமுறை மூலம் கட்டுப்படுத்த முடியும் என்று மோனாஷ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.



"நம்மிடம் ஏற்கனவே இருக்கும் வழிமுறைகள் எதுவும் இந்த நோய்களை கட்டுப்படுத்தவில்லை," என்று கூறியுள்ள உலக நுளம்புகள் திட்டத்தின் இயக்குநர் ஸ்காட் ஓ"நீல், "இந்த வழிமுறை நுளம்புகளால் பரவும் நோய்கள் மீது பெரிய தாக்கத்தை உண்டாக்கப்போகிறது. மிகவும் நம்பிக்கை தருவதற்கான முதல் அறிகுறியாக இந்த ஆய்வு உள்ளது," என கார்டியன் இதழிடம் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து நான்கு மழைக் காலங்களில் வோல்பாசியா பாக்டீரியாக்களைக் கொண்டுள்ள நுளம்புகளை, சுமார் 1,87,000 மக்கள் வசிக்கும் 66 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள, குயின்ஸ்லாந்து மாகாணத்தில் உள்ள அந்த நகரில் ஆய்வாளர்கள் வெளியிட்டுள்ளனர். இந்தத் திட்டத்துக்கு அங்குள்ள மக்கள் பெரும் ஆதரவளித்தனர். இந்த சிறப்பு வாய்ந்த நுளம்புகளை, உள்ளூர் நுளம்புகள் இருக்கும் பகுதிகளில் பள்ளி மாணவர்களும் வெளியிட்டனர்.


"ஒரு நபருக்கு 15 ஆஸ்திரேலிய டாலர் செலவாகும் இந்தத் திட்டம் மூலம், மிகவும் வேகமாகவும், குறைந்த செலவிலும், திறன் மிக்க வகையில் நுளம்புகளால் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்த முடியும் என்று டௌன்ஸ்வைல் நகரில் நிகழ்த்தப்பட்ட சோதனையில் தெரியவந்துள்ளது," என்று பேராசிரியர் ஓ"நீல் கூறியுள்ளார்.



இந்தத் திட்டம் தற்போது 11 நாடுகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வோல்பாசியா பாக்டீரியாக்களை உலகின் மிகவும் ஏழ்மை நிலவும் பகுதிகளில், நபர் ஒருவருக்கு தலா ஒரு அமெரிக்க டாலர் எனும் குறைந்த செலவில் பரப்பி நோய்க் கட்டுப்பாட்டில் ஈடுபட இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுமார் 3,90,000 பேர் வசிக்கும் இந்தோனீசியாவின் யோக்யகர்தா நகரில் இப்போது இந்த சோதனை செய்யப்பட்டு வருகிறது.

--- நன்றி பிபிசி









கல்லடி - உப்போடை, நொச்சிமுனை

# அருள்மிகு ஸ்ரீ பேச்சி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் - 2018

| ஆரம்பம் | நிறைவு |
| --- | --- |
| 12.08.2018 | 20.08.2018 |
| ஞாயிற்றுக்கிழமை | திங்கட்கிழமை |

"பேச்சியம்மா" என்றழைப்போர்க்கு
பேசுகின்ற தெய்வமாய்
ஆட்சி புரிகின்ற அன்னையவள் பாதமலர்
போற்றிப் பணிந்து நின்று
பொங்குமருள் பெற்றிடுவோம்!

ஓலைக் குடிசையினுள் ஒய்யாரமாய் வீற்றிருந்து
நாடி வருவோர்க்கு நல்லருள் புரிகின்ற
ஆயிரம் கண்ணுடையாள் அழகு சொரூபியவள்
பாதம் பணிந்து நின்று நம்
பாவவினை அகற்றிடுவோம்!

தேத்தா மரத்தின் கீழ் அமர்ந்து
தெய்வீக அருள் சொரியும்
பெண்ணரசி நாரணனின் தங்கை புகழரசி
மின்னும் நவரத்தினம் போல்
மேனி அழகுடையாள்
அன்னையவள் பாதம் பணிந்து - நம்
அவனிதனைக் காத்திடுவோம்

**சைவ அடியார்களே,**

கிழக்கிலங்கையில் மீன்பாடும் தேன்நாடாம் மட்டுமா நகரின் தென்பால் நீர்வளமும், நிலவளமும், நிறையப்பெற்று, தென்றல் தாலாட்ட, தெம்மாங்கு இசைபாட, செல்வம் தழைத்தோங்கும் கல்லடி - உப்போடை, நொச்சிமுனை பழம்பதியின் கண்ணே கோயில் கொண்டு எழுந்தருளி, கேட்பவர்க்கு கேட்டபடி வரமளித்து அருள்பாலிக்கின்ற ஆயிரம் கண்ணுடையாள் அருள்மிகு ஆதிபராசக்தி பேச்சியம்மன் ஆலய வருடாந்த உற்சவம் நிகழும் விளம்பி வருடம் ஆடித் திங்கள் 27th நாள் (12.08.2018) ஞாயிற்றுக்கிழமை திருக்கும்பம் வைத்தலுடன் ஆரம்பமாகி, ஆவணி திங்கள் 4th நாள் (20.08.2018) திங்கட்கிழமை திருக்கும்பம் சொரிதலுடன் நிறைவுபெறும்.

**தலைமைப் பூசகர் : திரு. நா. வை. பொன்னையா அவர்கள்**

**உதவிப் பூசகர் : திரு. கு. கிருஷ்ணகுமார் அவர்கள்**

## திருச்சடங்கு விபரம்

| | | |
| --- | --- | --- |
| 12.08.2018 | ஞாயிற்றுக்கிழமை | திருக்கதவு திறத்தல், திருக்கும்பம் வைத்தல், ஆலய பரிபாலன சபையினர் |
| 13.08.2018 | திங்கட்கிழமை | பகல் சடங்கு : டாக்டர் பூபாலரட்ணம் குடும்பம்,<br>இரவுச்சடங்கு : ஊர் குடிமகன் திரு. மா. சுந்தரலிங்கம் |
| 14.08.2018 | செவ்வாய்க்கிழமை | 5th குறிச்சி பொதுமக்கள் (கண்ணகி தாயாரிடம் செல்லல்) |
| 15.08.2018 | புதன்கிழமை | 1st குறிச்சி பொதுமக்கள் |
| 16.08.2018 | வியாழக்கிழமை | 2nd குறிச்சி பொதுமக்கள் |
| 17.08.2018 | வெள்ளிக்கிழமை | 3rd குறிச்சி பொதுமக்கள் (பலிச்சடங்கு) |
| 18.08.2018 | சனிக்கிழமை | 4th குறிச்சி பொதுமக்கள் |
| 19.08.2018 | ஞாயிற்றுக்கிழமை | பொதுச்சடங்கு (மடிப்பிச்சை எடுத்தல், நெல் குற்றல்) |
| 20.08.2018 | திங்கட்கிழமை | பொதுச்சடங்கு (பள்ளயம், திருக்கும்பம் சொரிதல்) |

குறிப்பு 19.08.2018 ஞாயிற்றுக்கிழமை, 22.08.2018 புதன்கிழமை ஆகிய இரு தினங்களில் இரவு 07.00 மணிக்கு நேர் கடனாக வந்த பொருட்கள் ஏலத்தில் விற்கப்படும்.

**22.08.2018 புதன்கிழமை வைரவர் பூசை**

**அம்பாளின் ஆலயம் வருக! அம்பாளின் அருள் பெறுக!!**




**விளம்பர அனுசரணை**
**லண்டன் வாழ் பேச்சியம்மன் பிள்ளைகள்**

## தரணிபோற்றத் தமிழ் வளர்ப்போம்!

# திருக்குறள் இன்பம் - 3

*(உலகப் பொதுமறையாக விளங்குகின்ற ஒப்பற்ற அறிவு நூலும், தனித்துவம்மிக்க காதல் இலக்கியமுமான திருக்குறள் இலக்கணமிட்டுள்ள காமத்துப்பாலின் இனிய காட்சிகளின் இன்பத்தைப் பகிர்ந்துகொள்ளும் கட்டுரைத்தொடர்.)*

திருக்குறளின் 111 ஆவது அத்தியாயம் புணர்ச்சி மகிழ்தல் என்பதாகும்.

அது காமத்துப்பாலின் மூன்றாவது அத்தியாயமாக உள்ளது. தலைவனும் தலைவியும் சேர்ந்து ஈடுபடும் உடலுறவினால் உண்டாகும் இன்பம் எப்படிப்பட்டது என்பதைத் தலைவனின் கூற்றாக அமைத்துள்ளார் வள்ளுவர். இந்தவிடயங்களை எடுத்தியம்புவதும், வெளிப்படுத்துவதும் பெண்களுக்கு அழகல்ல, அது வழமையும் அல்ல, பண்பாடுமல்ல. இரண்டாயிரம் வருடத்திற்கு முன்னைய சமுதாயத்தில் மட்டுமல்ல இன்றைக்கும் மனித குலத்தில் பொதுவாகப் பெண்களின் நிலைமை அதுதான். அதனால்தான் ஆணும் பெண்ணும் அனுபவித்த சிற்றின்பத்தின் சிறப்புக்களைப்பற்றிப் பெண்ணின் கூற்றாகவோ, இருவர் கூற்றாகவோ இல்லாமல் ஆணின் தனிக்கூற்றாகத் திருக்குறள் படம்பிடித்துக்காட்டுகிறது.



எல்லாம் அவளிடம் உள்ளனவே!

---

இருமனம் கலந்த காதலில் வீழ்ந்திருக்கும் தலைவனுக்கு தன்னவளோடு தனிமையில் தங்கியிருக்கும் வாய்ப்பு முன்னர் எப்போதும் கிடைக்கவில்லை. பார்வையால் கதைபேசி, வார்த்தைகளால் காதலைப் பரிமாறி, தள்ளியிருந்து மட்டுமே இதுவரை அவளோடு உறவாடி மகிழ்ந்திருந்தான். அன்று முதன்முதலாக, நாள் முழுவதும் அவளோடு தங்கியிருக்கும் வாய்ப்பு அவனுக்குக் கிடைக்கிறது. தவற விடுவானா? அன்று, அதற்காக, ஒளி மங்கிய மாலை வேளைப் பொழுதில் காதலியைத் தேடிச் செல்கிறான். அவளும் அவனை ஆசையுடன் வரவேற்று உபசரிக்கிறாள். இருவரும் நெடுநேரம் இன்பக் கதைகள் பேசி மகிழ்ந்திருந்தார்கள். அச்சமும், நாணமும் தடை சொன்னாலும் ஆசையும் காதலும் ஒன்றுடனொன்று கலந்து, உணர்வுகளை தூண்டின. அச்சமும் நாணமும் நழுவிக்கொண்டன. இருவரும் தழுவிக்கொண்டார்கள்.

மறுநாள், புலர்ந்தும் புலராத அதிகாலை வேளையில் அவனுடைய மனம் இப்படிச் சொல்கிறது.

”ஐம்பொறிகளால் எத்தனையோ வகையான இன்பங்களை நாம் அனுபவித்து மகிழ்கின்றோம். இந்த உலகத்தை, அழகிய காட்சிகளை, இயற்கை அற்புதங்களை, உலகின் தோற்றப்பாடுகளை எல்லாம் கண்களால் பார்த்து இன்புறுகின்றோம். செவிகளால் கேட்டு நாம் பெறுகின்ற இன்பத்திற்கும் அளவில்லை. சுவையான உணவுகளை விரும்பி உண்ண நமது வாய் பயன்படுகின்றது. முகர்ச்சியினால் நாம் அடையும் இன்ப நுகர்ச்சிக்கு எதுவுமே ஈடில்லை. கைகளும், உடலின் ஏனைய பகுதிகளும் மெய்தீண்டும் இன்ப உணர்வைத் தருகின்றன. ஆனாலும், இவ்வாறு ஐம்பொறிகளின் மூலமாக, சுவை. ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்கின்ற ஐம்புலங்களின் வழியாக, நாம் அடையும் இன்பங்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில், தனித்தனியாகவே நமக்குக் கிடைக்கின்றன.

ஆனால், என் காதலியிடமோ இவை எல்லாமே உள்ளனவே.

அவளின் அழகு என் கண்களுக்கும், அவளின் இனிமையான சொற்கள் என் செவிகளுக்கும், அவளின் இனிமைதரும் இதழ்கள் என் வாய்க்கும், அவளின் சுகந்த நறுமணம் என் மூக்கிற்கும், அவளின் அழகிய உடல் என் உடலுக்கும் எல்லையில்லா மகிழ்ச்சியைத் தருகின்றனவே! ஒரே நேரத்தில் உலகின் அத்தனை இன்பங்களையும் அவளால் மட்டுமே தர முடியும், அவளிடம் மட்டுமே பெற முடியும்.”

அடிக்கடி இதையே நினைத்து, நினைத்து நெஞ்சம் மகிழ்கிறான் தலைவன்.

கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்

ஒண்டொடி கண்ணே உள (1101)

கண்டும், கேட்டும், உண்டும், முகர்ந்தும், உடல் தீண்டியும் அனுபவிக்கின்ற ஐம்புலங்களின் இன்பங்கள் அனைத்தும் ஒளிவீசும் தொடி என்னும் ஆபரணத்தை அணிந்துள்ள இவளிடம் மட்டுமே கிடைக்கும் என்பது இந்தக்குறளின் நேரடிக்கருத்து.

நோயும் அவளே! மருந்தும் அவளே!

---

ஒவ்வொரு நோய்க்கும் ஒவ்வொரு மருந்து உண்டு.

சில நோய்களுக்குச் சில வேளைகளில் பல மருந்துகள் பயன் தரும். அதேபோலச் சில மருந்துகள் பல நோய்களுக்குக் குணம் தரும்.

அவனுக்கு ஒரு நோய். முதன்முதல் தன் காதலியுடன் களித்திருந்து அவளைப் பிரிந்த நேரம் முதல் அவனுக்கு வந்த வந்த நோய். அது காதலி தந்த நோய். அது வரவர முற்றிக்கொண்டே வந்தது. அதுதான் காம நோய்!

அது அவனை என்ன செய்யும்? எப்போதும் அவளோடு கூடியிருக்கவே மனம் தவிக்கும். எங்கு சென்றாலும் ஒரு கணம்கூட அவனால் தரித்திருக்க முடியவில்லை. எந்த வேலையையும் செய்ய முடியவில்லை. எதிலும் கவனம் செலுத்த முடியவில்லை. அவளிடமே திரும்பி வரவேண்டும்போல இருக்கிறது. எதைப் பார்த்தாலும் அவளது உருவமே தெரிகிறது. எதைக் கேட்டாலும் அவளின் குரலே கேட்கிறது. உண்ண முடியவில்லை, உறங்க முடியவில்லை. எண்ணமெல்லாம் அவளைப் பற்றியே வந்துகொண்டிருக்கிறது. எல்லோரும் அவனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்று பரிகசிக்கின்றார்கள். இந்த நோய்க்கு என்ன மருந்து? அவளேதான் மருந்து. இந்தப் பைத்தியத்திற்கான வைத்தியம் அவளிடம்தான் உள்ளது. அவளது அணைப்புத்தான் ஒரே மருந்து.

பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை

தன்நோய்க்குத் தானே மருந்து (1102)

நோய்களுக்கு பல்வேரு மருந்துகள் உள்ளன. ஆனால், (அணிகலங்களை அணிந்திருக்கும் ) காதலியால் உண்டாகிய காம நோய்க்கு, அவளே மருந்தாவாள் என்பது குறளின் நேரடிக்கருத்து.

இதுவல்லவோ பேரின்பம்!

---

திருமாலின் உலகமான வைகுந்தம் என்பது சொர்க்கலோகம் என்று சொல்லப்படுகிறது. நாம் இறந்தபின்னர் நமது ஆன்மா அந்த வைகுந்தத்தினை அடையவேண்டும் என்றுதான் எல்லோரும் விரும்புகின்றோம். அதனை நோக்கமாகக்கொண்டுதான், ஒருவர் இறந்து அவரது உடலை எரித்த பின்னர் அல்லது அடக்கம் செய்தபின்னர் அவரது வீட்டில் உறவினர்கள் வைகுந்த அம்மானை படிக்கும் வழக்கம் ஏற்பட்டது. ஒருவர் படிக்க, மற்றவர்கள் கேட்டுக்கொண்டிருப்பார்கள். இந்த வழக்கம் நமது மண்ணில் நீண்டகாலமாக இருந்துவருகிறது. அத்தகைய உயர்ந்த இடம் வைகுந்தம். இந்தப் பூவுலகில் நாம் பெறுகின்ற இல்லறச் சுகம் சிற்றின்பம் என்றே சொல்லப்படுகிறது. ஆனால் வைகுந்தத்தில் கிடைப்பதோ பேரின்பம். திருமாலின் உலகினை அடைந்தால் அங்கே கிடைக்கக்கூடிய பிறப்பிறப்பற்ற பேரின்பமானது, இந்த உலகில் பெறக்கூடிய இல்லற இன்பத்தைவிட எவ்வளவோ இனிமையானது, உயர்ந்தது என்று சொல்கிறார்கள்.

இவற்றை யெல்லாம் தலைவன் நன்றாக அறிந்து வைத்திருக்கிறான். பலர் சொல்லக் கேட்டும் இருக்கிறான். அதனால் சிற்றின்பம், பேரின்பம் என்பதில் எல்லாம் அவனுக்கு இதுவரை குழப்பம் இருந்ததில்லை. எதுவரை? நேற்றுவரை. நேற்று என்ன நடந்தது? அவனுக்கும் அவனது காதலிக்கும் திருமணம் நடந்தது. திருமணம் முடிந்ததும் இருவரும் தங்கள் இல்லற வாழ்வை இனிமையாகத் தொடங்கினார்கள். பள்ளியறையில் சொல்லிமுடியாத அளவுக்கு இருவரும் இன்பத்தில் மூழ்கினார்கள். காலைவரை களித்துயிலில் கிடந்தார்கள். அப்போது அவனுக்கு ஒரு சந்தேகம் வருகிறது. அது கேள்வியாக எழுகிறது. அவனது உள்ளம் பதிலையும் தருகிறது. ”ஆஹா! இவளின் தோளை அணைத்துக்கொண்டு உறங்கும்போது எவ்வளவு சுகமாக, இனிமையாக இருக்கிறது! இதைப்போய் சிற்றின்பம் என்று சொல்கிறார்களே. திருமாலின் உலகம் இதைவிட இனிமையானதா? இல்லையில்லை. அப்படி இருக்கவே முடியாது” என்று தனக்குத்தானே சொல்லிக்கொள்கின்றான்.

சட்டத்தரணி, பாடும்மீன்
சு.ஸ்ரீகந்தராசா

தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்

தாமரைக்கண்ணான் உலகு (1103)

தான் உளமாரக் காதலிக்கும் பெண்ணின் தோளினை அணைத்துக்கொண்டு உறங்குவதைவிடத் திருமாலின் வைகுண்ட உலகத்தின் இன்பம் ஒருவனுக்கு இனிமை



தருமா? (இல்லையே!) என்பதுதான் இந்தக் குறளின் கருத்து.

நெருங்கினால் குளிர்கிறாள், நீங்கினால் சுடுகிறாள்!

---

ஊரில் அவள் நல்ல அழகி. அவளை மணம்முடிக்க விரும்பும் இளைஞர்கள் எப்படியாவது அவளின் காதலைப் பெற்றுவிடத் துடிக்கிறார்கள். அவனும் அப்படித்தான். அவளை முதன்முதலாகக் கண்ட நாள் முதல் அவனின் உள்ளத்தில் அவள் மலர்ப் பந்தல் போட்டு ஒய்யாரமாக அமர்ந்துகொண்டாள். அவளின் மனதைக் கவர அவன் என்னவெல்லாமோ செய்தான்.

தொடர்ச்சி... (பக்கம் -23 )

தமிழ் இலக்கிய ஆர்வலர்களுக்காக மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தின் சார்பில், அதன் தலைவர், புரவலர் விநாயமூர்த்தி ரஞ்சிதமூர்த்தியின் சமர்ப்பணம் இந்தப் பக்கம்.

# மலைகளைப் பேசவிடுங்கள்

## அந்தோனி அகதியல்ல ; பிரஜை



தமிழ் நாட்டு அகதி மக்களில் ஒருவர்தான் எஸ்.ஆர்.அந்தனி. இலங்கையில், கொட்டகலை, பத்தன மவுன்ட்வேர்னன் தோட்டத்தில் கணக்குப்பிள்ளை வேலை செய்த அந்தனி, ஓய்வுக்குப்பின் கொழும்பில் தனியார் நிறுவனத்தில் வேலைசெய்து கொண்டிருக்கையில் 1983ல் இன வன்முறையில் அகப்பட்டு, குடும்பத்தோடு வன்னிக்கு குடிபெயர்ந்தவர். வன்னியில் இடம்பெற்ற கோரயுத்தத்தில் தனது உடமைகளை இழந்து, 1990 களில் பிற்பகுதியில் படகுமூலம் தமிழ் நாட்டுக்கு தப்பியோடியவர். (இவரது ஒரு மகன் இப்போதும் இலங்கை மலையகத்தில் வாழ்ந்துவருகிறார்). தமிழ்நாட்டில், சிவகாசி நகரில் இருந்து சற்று தொலைவில் உள்ள வெம்பக்கோட்டை அகதி முகாமில் வாழ்ந்து வந்த "நாடற்ற" இந்திய வம்சாவளி மலையகத் தமிழன்" எஸ். ஆர். அந்தனி. இதுபோல 28489 பேர் (அன்றைய அறிக்கையின்படி) இந்தியாவில் நாடற்றவராக வாழ்ந்து வந்தனர்.

எஸ்.ஆர். அந்தனி, எண்பது வயது கடந்தபோதும் தன் லட்சியத்தை விடவில்லை "இலங்கை அகதிகள் ஐக்கிய முன்னணி" எனும் அமைப்பை தனது தலைமையில் உருவாக்கி, தன்னோடு அகதியாக வாழ்ந்த பாலகிருஷ்ணன் எனும் தன் நண்பரை செயலாளராகக் கொண்டு செயற்பட ஆரம்பித்தார். இவ்வாறு அகதி அமைப்புகளை உருவாக்கி தொண்டு நிறுவனங்களிடம் பணம் பெற்று அவலத்தை விற்றுபிழைக்கும் பல அமைப்புகள் அங்கு உண்டு. ஆனால், அந்தனி அய்யாவின் லட்சியம் ஒன்றே ஒன்றுதான். தான் மரணிப்பதற்கிடையில் ஒரு நாட்டின் பிரசையாக வாழ்ந்துவிடவேண்டும் என்பதுதான் அந்த லட்சியம். போராடினார். தனிமனிதனாக தன் குழுவோடு தமிழ்நாட்டின் பல தலைவர்களை சந்தித்தார். அவர்கள் கரைக்கு அப்பால் நடக்கும் யுத்தத்திற்கு தூபம் போட்டுக்கொண்டு இருந்தார்களே தவிர, தன் முன்னே வந்து நிற்கும் "நாடற்ற இந்திய தமிழனை" கண்டுகொள்ள தயாராக இருக்கவில்லை.

அந்தனி ஐயா மனம் தளரவில்லை. "நான் நாடற்றவன். ஆனால் எனக்கு இரண்டு நாட்டு அடையாளம் உண்டு. இந்தியாவில் எனது நாடற்றவர் நிலைபோக்க யாருமில்லை. நான் இலங்கை போய், இலங்கை பிரசையாகவேனும் அந்தஸ்து பெற்று வாழ்ந்து மடிகிறேன் என இலங்கை வந்தார்.

2008 ஆம் ஆண்டு இலங்கை வந்த அந்தனி ஐயா பத்திரிகை காரியாலயங்களுக்கும் சென்று தன்னுடைய நிலைமையை விளக்கினார். பத்திரிகைகளில் அவரது நேர்காணல்கள் வந்தன. அந்தனி ஐயா பல்வேறு அரசியல் தலைவர்களையும் சந்தித்தார். அந்த வகையில் கட்டுரையாளரான என்னையும் சந்தித்தார். அந்த நாட்களில் இலங்கைப் பாராளுமன்றத்தில் 11 மலையகத் தமிழ் பிரதிநிதிகள் இருந்தனர்.

கட்டுரையாளரின் ஆலோசனையின் பேரில் மக்கள் விடுதலை முன்னணியில் அங்கம் வகித்த இராமலிங்கம் சந்திரசேகரிடம் சென்றார். ஏனைய மலையக அரசியல்வாதிகளிடம் சென்று அந்தனி ஐயா அரசியல் பகடைக் காயாக ஆகிவிடக்கூடாது என்பதற்காகதான் இந்த எற்பாடு. திட்டமிடப்பட்டது போலவே காரியம் கை கூடியது. மக்கள் விடுதலை முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் தலைமையில் பாராளுமன்ற குழு நியமனமானது.

ஏற்கனவே 2003 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்கச் சட்டம் ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் இந்தியாவுக்கு விண்ணப்பித்தும், இந்தியா செல்லாமல் தங்கியிருந்த 84000 பேருக்கு பிரசாவுரிமை வழங்கியிருந்தது. இராமலிங்கம் சந்திரசேகரன் தலைமையில்

**மல்லியப்புசந்தி திலகர்**

தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழு மேற்படி சட்டத்தை திருத்தி அந்தனி ஐயா உள்ளிட்ட அகதி மக்கள் 28,489 பேருக்கும் (இப்போது 31000) இலங்கை பிரசாவுரிமை வழங்க ஏற்பாடு ஆனது.

"தமிழ் நாட்டில் இலங்கையர்களுக்கான அகதி முகாம்களில் உள்ள இந்திய வம்சாவளியினரான ஆட்களுக்கு இலங்கைப்பிரசாவுரிமை வழங்கும் பொருட்டு 2003 ஆம் அண்டின் 35 ம் இலக்க சட்டத்தைத் திருத்துவதற்கும் எனைய வசதிகளுக்கு ஏற்பாடு செய்வதற்குமான பாராளுமன்ற தெரிவுக்குழு" தனது பணிகளை முன்னெடுத்தது.

இராமலிங்கம் சந்திரசேகரன் தலைமையிலான தெரிவுக்குழு பல்வேறு தரப்பினரிடம் சாட்சியங்களைப் பதிவு செய்தது. அந்தப்பட்டியல் இங்கே:

1. பி.எம். அம்சா (சென்னையிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகர்)
2. டபிள்யு.வீ.நிசங்க (இந்திய வம்சாவளி ஆட்களைப் பதிவு செய்வதற்கான பிரதி ஆணையாளர் - குடிவரவு குடியகல்வு திணைக்களம் )
3. ஏ.சி.எம் ராசிக் - (செயலாளர், மீள்குடியமர்த்துகை அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சு)
4. ஐ.எ.ஹமீட் (தவிசாளர் - ஆட்களையும் ஆதனங்களையும் கைத்தொழில்களையும் பதிவு செய்யும் அதிகார சபை
5. திருமதி.திரிஸ் பெரேரா – (சட்டவரைஞர்)
6. ஏ.ஜி.தர்மதாச, (ஆணையாளர் நாயகம், ஆட்பதிவுத் திணைக்களம்)
7. ஈ.எம்.குணசேகர (பதிவாளர் நாயகம், பதிவாளர் திணைக்களம்)
8. திருமதி. எலிசபேத் ரென் (சிரேஷ்ட பாதுகாப்பு அலுவலர்- அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்தானிகர் ஆலயம்
9. செல்வி. சூரியகுமாரி (தலைவர் - அகதிகளுக்கான புனர்வாழவளிப்பு நிறுவனம்)
10. திரு.எஸ்.ஆர்.அந்தனி, (தலைவர், இலங்கை அகதிகள் ஐக்கிய முன்னணி)

இந்தப்பட்டியலில் வரும் முதல் 9 சாட்சியாளர்களும் அதிகாரிகள். பிரச்சினைக்கு தீர்வு காண உதவுவோர். இறுதியாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை அகதிகள் ஐக்கிய முன்னணியின் தலைவர் திரு.எஸ்.ஆர்.அந்தனி, நாடற்ற இந்திய தமிழன். அவர், தன் முயற்சியினால் இலங்கைப் பாராளுமன்ற குழு அறையிலே தனது மக்களின் அவலத்தை எடுத்துச் சொல்லிய வரலாற்றுத் தலைவன்.

---

# திருக்கோவில் ஆலயத்தில் சாதனையாளர் பாராட்டுவிழா!



வரலாற்றுப் பிரசித்திபெற்ற திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுதசுவாமி ஆலய ஆடி அமாவாசை தீர்த்தோற்சவத்தையொட்டிய வருடாந்த சாதனையாளர் பாராட்டுவிழா வெள்ளிக்கிழமை நள்ளிரவு 11-12 மணியளவில் ஆலயபரிபாலன சபைத்தலைவர் சுந்தரலிங்கம் சுரேஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கதிர்காமத்தம்பி விமலநாதன், விசேட அதிதியாக திறைசேரி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி மூத்ததம்பி கோபாலரெத்தினம், சிறப்பதிதியாக திருக்கோவில் பிரதேசச்செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

திருக்கோவில் வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளிலிருந்து கடந்தாண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை க.பொத. சா.த. மற்றும் க.பொத. உயர்தரப்பரீட்சையில் சாதனை படைத்த 19 மாணவர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

மேலும் ஆலய வளர்ச்சியில் பங்கேற்ற அதிகாரிகள் முதல் திருப்பணிச்சபை பிரதிநிதிகள் 16 பேர் வரை கௌரவிக்கப்படவுள்ளனர் என ஆலயபரிபாலனசபைச் செயலாளர் அ.செல்வராஜா தெரிவித்தார்.

தரம் 5 புலமைச் சாதனையாளர்கள் 3 பேர்.

---

ரவீந்திரன் கீனசயன் - 184 புள்ளிகள் - குமர வித்.. திருக்கோவில்.
கனகநாயகம் பவனிதா -183 புள்ளிகள் -திருவள்ளுவர் வித்..அ.பற்று
இலங்கராசா சுபிலாஸ் - 181புள்ளிகள்- சரஸ்வதி வித். தம்பிலுவில்

க.பொ.த(சா.த.) 9ஏ சாதனையாளர்கள் 11பேர்.

---

சிறிபிரபாகரன் இந்துஜா – திருநாவுக்கரசு வித்.. ஆலை.வேம்பு
புவனேந்திரராஜா அட்சனா –தம்பிலுவில் ம.ம.வித். தம்பிலுவில்
செல்வரெத்தினம் தேவஜோதி;- இ.கி.மிசன் ம.வித்.. அ.பற்று.
கணேசமூர்த்தி ஜுனதா- தம்பிலுவில் ம.ம.வித்.. தம்பிலுவில்
கமலேந்திரன் சஞ்ஜீவிகா - இ.கி.மிசன் ம.வித்.. அ.பற்று.
ஜெகநாதன் மதுஜா- பொத்துவில் மெ.மி.த.க.பா.. பொத்துவில்
சந்திரகுமார் சனுஜிகா- தம்பிலுவில் ம.ம.வித்.. தம்பிலுவில்
மதியழகன் சரனிகரன் - இராமகிருஸ்ணா தே.பா. அ.பற்று.
புவனேந்திரன் டிலானி- இ.கி.மிசன் ம.வித்.. அ.பற்று.
ராஜேஸ்வரன் கர்சிகா- தம்பிலுவில் ம.ம.வித்.. தம்பிலுவில்
ஜெயக்குமார் சுவஸ்ரிகா-இ.கி.மிசன் ம.வித்.. அ.பற்று.

க.பொ.த. (உயர்தரம்) சாதனையாளர்கள் 05பேர்.

---

ரவிச்சந்திரன் றக்சனா-சட்டம்– தம்பிலுவில் ம.ம.வித். தம்பிலுவில்
சண்முகம் நோர்ஜினி-வர்த்தகம்-இராமகிருஸ்ணா தே.பா..அ.பற்று.
அசோகன் தனுசாபவன்-பொறியியல்-இராமகிருஸ்ணா தே.பா.அ.பற்று.
திருஞானசீலன்சதீஸ்பிரநாத்-பொறியியல்-திருக்கோவில் மெ.மி.த.க.பா.
கமலநாதன் கேமபிரதீப்-மருத்துவம்-இராமகிருஸ்ணா தே.பா..அ.பற்று.

ஆலயபிரதமகுரு சிவஸ்ரீ மகேஸ்வரக குருக்களின் ஆசியுரையுடன் ஆரம்பமாகும் இந்நிகழ்வு கலைநிகழ்ச்சிகள் சகிதம் 3 கட்டங்களாக பாராட்டுவிழா நடைபெறும். இறுதியில் ஆலயச்செயலாளர் அ.செல்வராஜா நன்றியுரை நிகழ்த்துவார்.

(காரைதீவு வி.ரி.சகாதேவராஜா)

# கரும்பு உடலுக்குள்ளா எல்.எம்.ஜி ரவைகள்?

*03.08.1990 அன்று காத்தான்குடி மீரா பள்ளிவாயலில் விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்ட 103 ஷஹீதுகளில் எனது உதிரத்தின் உரிமையாளரான தந்தைக்காய் சிந்திய கண்ணீர் இது ...எழுத்துக்களாக.(கவிதையல்ல..)*

எண்ட வாப்பா!!!

உன் ஆயுளை எனக்குத் தந்துவிட்டு சின்ன வயதிலேயே நீங்கள் சீவியத்தை முடித்தது இன்னமும் முள்ளுக்குமேலேதான் படுப்பது மாதிரி இருக்கிறது..

என்னுடைய உயர்வின் ஒரு துளியைத்தானும் நீங்கள் ரசிக்காமல் ஓய்வெடுத்துக்கொண்டதை ஒத்துக்க மறுக்கிறது இந்தப் பிஞ்சு ஆத்மா.

உம்மா என்னை மடியிலேதான் சுமந்தா.. நீங்களோ தோளிலல்லவா சுமந்தீர்கள்.. நீங்கள் பார்க்காத உலகத்தைக்கூட நான் பார்க்கவேண்டுமென்றா?

வாப்பா இந்த வார்த்தைக்குள் என் வாழ்க்கை ஒழிந்து கிடக்கிறது. ஜீவியம் வறுமையால் கோலம் போட்டுக் கிடந்த பொழுதுகளிலும் நீங்கள் பென்னம்பெரிய பணக்காரப் பிள்ளைளைப் போலத்தானே என்னை பார்த்துக்கொண்டீர்கள். முள்ளை நீங்கள் கடித்துத்தின்று சதையை என் வாய்க்குள் தீத்தியது திரும்பிப்பார்க்கையில் தெரிகிறது.

என்னை இந்தப் பூமி நிமிர்ந்து பார்க்க வேண்டும் என்பதற்காக நீங்கள் குனிந்து கொண்டு பூமியைப் புரட்டினீர்கள் கமக்காரனாக..

துப்பாக்கிகள் சத்தம் போட்டால் நீங்கள் முதலில் செய்யும் முயற்சி வாசற்கதவை சாத்துவதுதான், என்னை வெளியில் போகவிடாமல். ஆனால் பயந்தொதுங்கிய நீங்கள் பலியாகினீர்கள்...

எனக்குள்ளே இருபத்தெட்டாண்டுகளாக தொடர்ந்து வரும் கேள்வி ஏன் வாப்பா புலிகள் உங்களைச் சுட்டார்கள்? நீங்கள் ஜிஹாதா? அல்லது இராணுவமா?



இல்லாவிட்டால் காட்டிக்கொடுத்த ஒட்டுக்குழுவா? ஒன்றுமில்லை என்றால் ஏன் வாப்பா அகவையில் அரைச்சதைத்தைக் கூடத்தொடாத உங்கள் மெல்லிய மூச்சை ரவைகளைக்கொண்டு கடுமைப்படுத்தி களைந்தெடுத்தார்கள்? பூச்சியைக்கூட நசுக்கக்கூடாதென பூமாதிரி புத்திசொல்லும், எலியை நஞ்சு வைத்துக்கொல்வதையும் நாசகாரச் செயலாக எண்ணும் உங்கள் உடம்பிற்குள்ளா எல்.எம்.ஜீ ரவைகள்? இரும்பு எப்படி இந்த கரும்பு உடலை சல்லடையாக்கியிருக்கும்?

வாப்பா!

ஓ.எல்.எழுதிவிட்டு வந்த எனது வயைதைக்கூடப் பார்க்காமல் அத்தனை ஆத்மாக்களின் முன்னாலும் முத்தம் தந்தீர்கள்...உங்களின் என்மீதான பிள்ளைப்பாசத்தின் உச்சம் அது...

நீங்கள் பாமரனாயிருந்து என்னை படித்தவனாய் மாற்ற உங்கள் தோள்கள் சுமந்த கனத்தை நினைக்க மனசு கோடிக்கணக்கான கிலோக்களைச் சுமக்கிறது...

எனது உயிர் என்னிடமுள்ளதை உறுதிப்படுத்திய பின்னர்தானே கலிமாச் சொன்னதாக உங்கள் மூச்சின் கடைசி நிமிடங்களைச் சுவாசித்த சீனிவாப்பா சொன்னார். நீங்கள் நிம்மதியாகாத் தூங்குங்கள் என்னை எல்லைக்காவலனாய் விட்டுவிட்டுத்தான் அல்லாஹ் உங்களை அழைத்திருக்கிறான். என்னையும் உயிரோடு புதைக்கப் பார்த்தார்கள் புலிகள், நானோ முறுக்கேறிய இளமையைச் சுமந்திருந்ததால் அணிந்திருந்த சாரத்தை அவர்களிடம்

**ரீ.எல்.ஜவ்பர்கான்**

பறிகொடுத்து பாய்ந்தோட அல்லாஹ் பாதை காட்டினான். இருவரும் ஷஹீதானால் குடும்பம் தெருவரும் என்பதால் றப்பு என்னைத் தப்பிக்க வைத்தான்..

உங்களோடு ஒரே கபுறுக்குள் தூங்குகின்ற 103 ஷஹீதுகளிடமும் சொல்லுங்கள்... நாளையும் ஷஹீதுகள் வருவார்கள் ஏனெனில் ஈமானியம் இன்னும் நெருக்கப்பட்டுக் கொண்டுதானிருக்கிறது என்று..

**அஸ்ஸலாமு அலைக்கும்**

---

## சிறுகதை:

## பெத்தாவின் எந்திரன் அக்காக்கள்

இது வடிவேல் நடித்த எம்டன் மகன் கதைபோல்தான்.. என்றாலும் என் குடும்பத்தில் நடந்த உண்மை கதை .

அதுவரையில் எங்கள் வீட்டில் எனக்கு தெரிந்து எந்த மரணமுமே நிகழ்ந்ததில்லை. என்வீட்டில் யாராவது உறவினர்கள் சாகவேண்டுமென்று நான் ஆசைப்பட்டதற்கான காரணம் அதுமட்டுமல்ல பக்கத்து வீட்டு சினேகிதன் யுவராசாவும்தான்.

நான்காம் வகுப்பு படித்துக்கொண்டிருந்த காலங்களில் யுவராசாவுடன்தான் கூட்டு . யுவராசா வீட்டு திண்ணையில் படுத்துக்கொண்டிருந்த அவனின் அண்ணாவி அப்பச்சி திடீரென காலமாக அழுகை சத்தம் கேட்டு ஓடிய அம்மாவுக்கு பின்னால் நானும் ஓடினேன் . யுவராசாவை கட்டியணைத்து எண்ட மனே உண்ட அப்பச்சி போயிற்றாரேடா .. இனி ஆரோடடா நீ தனகி விளையாடுவாயென்று சொல்லி யுவராசாவின் தாயார் அழுது கொண்டிருக்க யுவராசா என்னை பெருமையாக பார்த்தான். மூன்று நாட்கள் விளையாடவும் வரவில்லை அவன்.

அப்பச்சி செத்த ... நான் விளையாட வரல்ல என்று அவன் சொன்னபோது தான் பார்ப்பம்டா எங்கட பெத்தாவும் சாவாதானே அப்ப நீயும் விளையாட கூப்பிடுவதானே .. பார்ப்பம் .. பார்ப்பம் என்றுவிட்டேன். அன்றிலிருந்து எங்கள் வீட்டு பெரிய பெத்தா எப்ப சாகுவா என்பதே என் ஏக்கமெல்லாம்.

எங்கள் பெத்தாவின் அக்காதான் பெரியபெத்தா. பெத்தாவுக்கே எண்பது வயதென்றால் அவவின் அக்காவின் வயது நூறை நெருங்கியிருக்கும்போல ..

பெரிய பெத்தாவுக்கு லவ் பிரேக்காம்... கடைசிவரை கல்யாணமே செய்துகொள்ளவில்லை அவ. தமக்கை யாரையோ காதலித்ததாமென்றறிந்த நாளிலிருந்து எங்கள் பெத்தா தமைக்கையுடன் பேசுவதே இல்லையாம். என்றாலும் அண்ணாவி அப்பச்சிபோல படுத்த பாயாக கிடக்கும் பெரியபெத்தாவின் கடமையையெல்லாம் பெத்தாவே கவனித்துக்கொள்கிறா. இந்தப் பெரிய பெத்தாவை நம்பித்தான் நான் யுவராசாவிடம்

**விமல் குழந்தைவேலு**

சவால் விட்டிருந்தேன் .

பள்ளிக்கூடம் போய் வகுப்பிலிருக்கும் போதிலெல்லாம் எனக்கு பெரிய பெத்தாவின் நினைவாகவே இருக்கும். பள்ளிகூடம் விட்டு நான் போகும் வரையில் பெத்தா செத்துவிட கூடாதென்ற நினைப்பே எனக்கு. பெரிய பெத்தா சாவதும் நான் நடுவில் குழந்தை நட்சத்திரம் போல் நிற்க சுற்றி இருப்பவர்கள் என்னை கட்டி அழுவதும் அதை யுவராசா பார்த்துக்கொண்டு நிற்பதும் போன்றதுமான காட்சி எனக்குள் அடிக்கடி வந்து போகும்.

ஒருநாள் அம்மாவிடம் ... அம்மா பெத்தா எப்பம்ம்மா சாவா எனக்கேட்க ஏண்டா மனே... பெத்தா நம்மள உட்டுட்டு போயிரமாட்டாடா நீ யோசியாத என்று அம்மா சொன்னபோது, எனக்குள் நான் ஏங்குவதை அம்மாவிடம் எப்படி எடுத்து சொல்லியிருக்கமுடியும்.

எங்கள் பெத்தாவுக்கோ தமக்கையின் ஈமைக் கிரியைகளை தானே செய்யவேண்டுமென்ற கடமையுணர்வில் குறுக்கும் நெடுக்குமாக நடந்துகொண்டே இருப்பா. அவவின் இடுப்பில் ஒரு வெள்ளைதுணி நாடா செருகியபடியே இருக்கும்.

பெரிய பெத்தாவின் நிலமை சீரியஸென அவவை பார்க்க வருபவர்களின் பேச்சிலிருந்து தெரிந்தது.

பள்ளிக்கூடம் விட்டுவந்த நாளொன்றில் சின்னக்கா சொன்னா.

”தம்பியே பெரிய பெத்தா செத்து புழைச்சி எழும்பியிருக்காடா .. கண்முழியெல்லாம் மேலேற நாங்க தொண்டைக்கு தண்ணியும் ஊத்துனம் .. போகல்ல .. தப்பிற்றாடா பெத்தா ”

தமக்கை இதற்கு மேலும் கிடந்து அழுந்தாமல் போய்விடவேண்டும்.. தான் வழியனுப்பி வைக்கவேண்டுமென்பதே பெத்தாவின் அங்கலாய்ப்பு. அது பார்க்க வருபவர்களிடம் அவ சொல்லும் பதில்களில் விளங்கும்.

பார்க்க வருபவர்கள் ஒவ்வொருவரினதும் பேச்சும் அதற்கான பெத்தாவின் பதிலும் கீழுள்ளபடியே இருக்கும்.

”செண்ட நாள் செல்லாது இன்னும் ரெண்டொரு நாள்தான் ”

”ம்க்கும்.. அவள் கட்டிக்கொண்டு வந்த அரிசி முடியுறமாதிரியோ இரிக்கி .. உங்கட கதையும் நீங்களும்.”

”நெஞ்சாங்கூட்டுல நிக்கிற துடிப்பு தொண்டைக்கு வந்தா அடங்கிடும்”

”எங்கடி அடங்குற சித்திரபுத்திரனுக்கிட்ட இருந்த இவள்ற ஓலைய மட்டும் காக்காய் கோண்டோடிட்டாம்டி.. நீங்க வேற.”

”சீவன் எதையோ நினைச்சி ஏங்கி ஈறலுல கிடந்து அல்லாடுது”

”ஓமோம்.. கல்யாணம் ஒண்டு கட்டி நாலு புள்ள பெறோணுமெண்டு ஏங்குது... இஞ்சால வாங்கடி உட்டா அவளும் ஒழும்பியிருந்து கதைச்சிருக்க தொடங்கிடுவாள் .”

இத்தனையும் கேட்டுக்கொண்டு அசைவற்று கிடக்கும் பெரியபெத்தாவின் கடைக்கண் வழியே நீர் வடியும்.

பெரிய பெத்தா சாகாத போதும் வீடு சாவீடு போலவே தான் இருந்தது. பந்தல்போட்டு.. பக்கத்து வீடுகளில் வாங்கிய பாய்கள் விரித்து.... எந்த நிமிடத்திலும் எதுவும் நடக்கலாமென்பது போல...

ஒரு விடியா பொழுது நேரத்தில் பெத்தா அவசரமாகவும் வித்தியாசமாகவும் எல்லோரையும் கூப்பிட நாங்கள் ஓடினோம்... சுற்றி நின்றோம் ... அம்மா, அப்பா சிவாஜி, பத்மினி போலவும் அண்ணா, அக்கா, அண்ணி, அத்தான்மார்கள் எல்லோரும் முத்துராமன் ஜெய்சங்கர் ஜெயசித்ரா லட்சுமி நிர்மலா போலவும் பக்கத்து வீட்டார் துணை நடிக, நடிகையர் போலவும் இவர்களுக்கு நடுவில் குழந்தை நட்சத்திரமாக நானும் போலவுமே எனது கற்பனை ஓடியது .

தண்ணி ஊத்துறாக்கள் ஊத்துங்க என்றார் ஒருபெரியவர் ... ஊற்றினார்கள் . ம்.. அடங்கிற்று என்றார் அதே பெரியவர்.

கண் இமைகளை மூட செய்தார்கள் இடுப்பில் செருகி இருந்த வெள்ளை துணிநாடாவ எடுத்து தமக்கையின் கால் பெருவிரல்கள்

தொடர்ச்சி... (பக்கம் -23 )

# உறக்கம் வராத சுடலைமாடன் கதை-3

## மலையக மக்களின் வழிபாடுகளில் ஒன்று

*நான் என் பேச்சைத் தொடர்ந்தேன்,*

அன்று நான் வாசித்த அந்தச் சுடலை மாடன் வில்லுப்பாட்டை இன்று நிகழ்த்துகலையாகவும்.சடங்காகவும் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தமை நான் பெற்ற பாக்கியம். இச் சந்தர்ப்பத்தை எனது மாணவன் ராஜீவும், நண்பர் ராஜகோபாலும் எனக்கு ஏற்படுத்தித் தந்திருக்காவிட்டால் என் வாழ்நாளில் இந்த அரிய வாய்ப்பை இழந்திருப்பேன். மக்களே இவ்வகையில் நீங்கள் 3000 வருடங்களுக்கு முன்னர் தமிழர் மத்தியில் இருந்த ஒரு வணக்க முறையினை இன்றளவும் பேணும்






பெருமையைக் கொண்டிருக்கிறீர்கள். அதற்கு தமிழ்ப் பண்பாடு பேசுவோர் உங்களுக்கு மிகுந்த நன்றி செலுத்த வேண்டும். உங்களுக்கு இது ஒரு சடங்கு. நம்பிக்கையோடு செய்யப்படும் சடங்கு. நம்பிக்கையே இங்கு பிரதானம். இதில் நம்பிக்கையின்றிப் பார்ப்போருக்கு, இது ஒரு கண்காட்சி அல்லது ஆற்றுகை. என்னைப் பொறுத்தவரை உங்கள் ஆற்றுகை என்னை இதில் ஓர் தீவிர ரசிகராக அல்லது பங்காளராக ஆக்கியது

வில்லுப்பாட்டுப் பாடிய அனைவரும் அதில் தோய்ந்து மிகுந்த ஈடுபாட்டுடன் பாடினர். அவர்களின் உடுக்கைகளின் ஒலியும், வில்லில் கட்டிய மணியின் ஒலியும், குடம் எழுப்பிய ஒலியும், பாடிய ஒவ்வொருவரின் லயம் தவறாத பெருத்த குரல் ஒலிகளும் ஒன்றாக இணைந்து என்னை உருவேற்றின. இத்தகைய திறன் மிகுந்த கலைஞர்களுக்கு என் மனமார்ந்த பாராட்டுக்கள். மலைக்குள் மறைந்து கிடக்கும் மாபெரும் கலைஞர்கள் இவர்கள். ஏன் இவர்கள் இதுகாறும் வெளிக்கொணரப்படவில்லை?, இந்தச்சடங்கு ஏன் வெளியுலகுக்குப் பிரபல்யப்படுத்தப்படவில்லை? என்ற கேள்விகள் என்னுள்ளத்தில் எழுந்த வண்ணம் இருந்தன.

இவர்களைப் பற்றி அறிந்த இங்குள்ள மாணவர்கள் யாரையாவது வைத்து இச்சடங்கு பற்றிய ஓர் ஆய்வை மேற் கொள்ளவைத்து, அதனை நூலுருவாகக் கொணரும் முயற்சியை நான் நிச்சயம் செய்வேன். இச்சமயம் எனது சிறிய ஆலோசனையொன்றையும் மிகுந்த தயக்கத்தோடு உங்கள் முன் வைக்கின்றேன். இது கட்டளையல்ல.,உங்கள் மீது அன்பும் பரிவும் கொண்ட நெருக்கமான ஒரு நண்பனின் வேண்டுகோள் என நீங்கள் எடுத்துக்கொள்ளலாம். ஏற்பது விடுவது உங்களைப் பொறுத்தது. சுடலை மாடசாமி உங்களின் குல தெய்வம்.உங்களைக் காக்கும் தெய்வம்.



ஆரம்பகாலத்தில் சுடலையில் பிணத்தைக் கிழித்து குடலை மாலையாகப் போட்டபடி சுடலை மாடன் வந்தபோது, நீங்கள் இந்தக்கோலம் கண்டு



குழந்தைகளும்,கர்ப்பிணிப் பெண்களும் தாக்கமடைகிறார்கள் என்று வேண்ட, அவர் பிணத்தின் குடலை மாலையாகப் போடுவதற்குப் பதிலாக கோழியின் குடலைப் போட ஒப்புக்கொண்டதாக இங்கு ஒரு பெரியவர் என்னிடம் கூறினார். பக்தர்கள் சொன்னால் சுவாமிகள் கேட்பர். பக்தி எனும் வலைக்குள் கட்டுப்படாத சாமிகளே இல்லை. அன்பின் சக்தி அத்தகையது. அவரிடம் நீங்கள் "சுவாமி காலம் மாறி வருகிறது. கோழியைக் கிழித்துக் குடலை மாலையாகப் போடுவதைக் குழந்தைகள் பார்க்கிறார்கள், கோழிக்குப்பதில் பூக்களைக் குடல்கள் போல கட்டி வைக்கிறோம். அவற்றை மாலையாக அணிந்து, உள்ளுறுப்புகளாக நினைத்துச் சாப்பிடுங்கள்" என வேண்டுகோள் விடுங்கள். உங்களைக் காப்பாற்றும் அச்சாமி அவசியம் உங்கள் வேண்டுகோளை ஏற்றுக்கொள்வார்.

எங்களூரிலும் நரபலிக்குப் பதிலாகப் பூசணிக்காய் வெட்டி அதன் மீது குங்குமம் தடவும் பழக்கமுண்டு. உயிர்ப்பலிக்குப் பதிலாக மடைப்பலி கொடுக்கும் வழக்கமுண்டு. உங்கள் அனைவருக்கும் மிக்க நன்றி,' என்று கூறி பேச்சை முடித்தேன். அவர்களின் பலத்த கைதட்டல் என் கருத்துகளை அவர்கள் உள்வாங்கியுள்ளனர் என்ற அபிப்பிராயத்தையே எனக்குத் தந்தது. பூசை புனஸ்காரம் முடிய அருகில் இருந்த ஒரு வீட்டுக்கு அழைதுச் சென்றனர். அங்கு மாலை தேனீர் அருந்திவிட்டு, மாணவர்களுடன் விடுதிக்குப் பயணமானேன். அன்றிரவு எனக்குத் தங்க இன்னொரு விடுதி ஒழுங்கு செய்திருந்தனர். அது ஒரு அழகான விடுதி. விடுதியிற் சிரம பரிகாரங்கள் முடித்தபின், சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தில் மானிடவியல், சமூகவியலில் இணைப்பேராசிரியராகக் கடமையாற்றும் என் மகன் சித்தார்த்தனுக்குப் போன் பண்ணி எனது அன்றைய அனுபவங்கள் அனைத்தையும் பகிர்ந்து கொண்டேன். போனில் எனது உரை ஒரு நீண்ட உரையாக இருந்தது. அரைமணி நேரம் நான் அவனுடன் தொடர்ச்சியாகப் பேசியிருப்பேன். அவனிடம் சொல்ல என்னிடம் நிறைய விடயங்கள் இருந்தன. எல்லாவற்றையும் அமைதியாக உள்வாங்கிக் கொண்ட அந்த மானிடவியலானான என் மகன், ஒரு கேள்வியை என் முன் வைத்தான். மிக முக்கியமான கேள்வி அது. "அப்பா அவர்களின் நம்பிக்கையில் கைவைக்க, அவர்களுக்குப் புத்திமதி கூற நீங்கள் யார்?" "உங்கள் அறிவை அவர்கள் மீது திணிக்கிறீர்களா?" அவனது அந்தக் கேள்வி ஒரு தடவை என்னை அதிர வைத்தது. "மகனே நானும் அவர்களில் ஒருவன்"எனப் பதில் தந்தேன். அதனை மறுத்து அவன் தன் வாதங்களை முன் வைத்தான் மானிடவியலில் முறையான பயிற்சி பெற்ற அவனின் வாதங்கள் என்னைப் பல திசைகளில் சிந்திக்க வைத்தன. அவனுக்கும் எனக்குமிடையே ஒரு நீண்ட ஆய்வறிவு உரையாடலாக அது நீண்டது. ஒரு மணி நேரத்துக்கு மேல் நாங்கள் இருவரும் உரையாடியிருப்போம். அவன் கருத்துக்கு நான் வசப்படவில்லையாயினும், தெளிந்த ஓடையில் ஒரு சிறிய கல்லை எறிந்தால் அது பல சிறிய தொடர் அலைகளை எழுப்பிச் செல்வதுபோல என்னுள்ளும் பல அதிர்வலைகளை ஏற்படுத்திவிட்டது. அந்த அதிர்வலைகளுடன் உறங்கச் சென்றேன்.



இன்னும் உறக்கம் வரவில்லை

(முடிவு பெற்றது)

# நற்பிட்டிமுனை பாசம்! நிந்தவூர் நேசம்! அக்கரைப்பற்று ஆசம்!



மட்டக்களப்புக்கு வந்தால் பாயோடு ஒட்டவைத்து விடுவார்கள் என்ற கருத்து இலங்கையின் வெளிமாகாணங்களில் உண்டு. உண்மையில் இங்கே சாப்பிட பாயில் உட்கார்ந்தால் உபசரித்து உபசரித்து எழ விடமாட்டார்கள், நமக்கும் பாயில் ஒட்டிவிட்ட பிரமை உண்டாகிவிடும். அதை, கிழக்கின் தனித்துவங்களுள் ஒன்றான மாந்திரீகத்தோடு இணைத்து சொல்லப்படும் நகையாடல் தான் பாயோடு ஒட்டும் கதை. "ஒருக்கா வந்தால் ஆயுசுக்கும் சோறு போடுறீங்கடா, இனி இங்காலைப்பக்கம் இவன் வரவே கூடாது எண்டு பிளான் பண்ணித்தானே இப்பிடித் தாறீங்கள்?", "அடேய் பெற்றி அம்பாரைக்கு ட்ரிப் அடிக்கிறண்டா வெறுவயித்தோட போங்கோ! ஒருநாள் ருவர் போனா கிடைக்கிற சாப்பாட்டுக்கே ஒரு கிளமை ரொய்லெற்றில சீவியம் நடத்தோணும்" இதெல்லாம் தீவளாவிய நண்பர் வட்டாரங்களில் கிழக்குத் தொடர்பான நகைச்சுவை உரையாடல்களில் வழக்கமானவை.

பொதுவாகவே இலங்கையின் விருந்தோம்பல் உலகப் புகழ்பெற்றது. இலங்கையின் எந்தப்பகுதிக்கு சுற்றுலா சென்றாலும், அங்கேகூட உணவு விடயத்தில் இதே கவனிப்புத் தான் கிடைக்கிறது. அப்படி இருக்க, குறித்த இடத்தில் மாத்திரமே விருந்தோம்பல் அதிகம் என்று சொல்வது சரியா? மட்டக்களப்பு விருந்தோம்பலுக்குப் புகழ்பெற்றது என்பது ஏன் ஒருவேளை மிகைபடக் கூறலாக இருக்கக்கூடாது?



ஒருவேளை ஒட்டுமொத்தமாக இலங்கைத் தமிழரை ஒப்பிட்டு இப்படிச் சொல்கிறார்களா? இயல்பாகவே முஸ்லீம்கள் மத்தியிலும் விருந்தோம்பல் தனிச்சிறப்புப் பெறுவது என்றாலும், மட்டு – அம்பாறை முஸ்லீம்களின் விருந்துபசாரம் கூட குறிப்பிட்டு சிலாகிக்கப்படுகிறதே! உண்மையிலேயே மட்டக்களப்பின் விருந்தோம்பல் தனித்துவமானது தானா?

இருநூறு ஆண்டுகளுக்கு முன்பேயே, இந்தக் கேள்விக்கு ஆம் என்று விடையளித்து சான்றிதழ் அளித்துள்ளார் ஒருவர். அதுவும் ஒரு ஐரோப்பியர். "சூதுவாது அறியாத இந்த மாவட்ட மக்களை நான் என்றென்றும் அன்போடு நினைவுகூர்வேன்" என்ற அவரது நாட்குறிப்பு வரியில் அத்தனை நெகிழ்ச்சியும் பாசமும் இழையோடுகிறது. அவர் மருத்துவர் தோமஸ் அந்தோனி ரீடர். 1801ஆம் ஆண்டு பிரித்தானிய இலங்கையின் 51ஆவது இராணுவப்படையின் மருத்துவராகவும் இலங்கை வைத்தியசாலைகளின் மேற்பார்வையாளராகவும் கடமையாற்றியவர். மட்டக்களப்பிலிருந்து தென்காலிக்கு (தங்காலை) அவர் மேற்கொண்ட பயணம் தொடர்பான நாட்குறிப்பேட்டிலேயே மட்டக்களப்பின் விருந்தோம்பலை விதந்து கூறியிருக்கிறார் அவர்.

1801 யூலை 10ஆம் திகதி, மாலை ஆறரை மணியளவில் புளியந்தீவிலிருந்து படகொன்றில் கிளம்புகிறார் அவர். படகில் விசேடமான பந்தல் அமைக்கப்பட்டு அதன் கீழ் நிறுத்தப்பட்ட பல்லக்கில், நாப்பட்டிமுனைக்குச் சென்று சேர்கிறார். அங்குள்ள மக்கள் தன் மீது அதிக பாசம் செலுத்தியதையும், கைமாறு கருதாமல் தனக்கும் தன் சேவகர்களுக்கு பரிசில்கள் பல வழங்கியதையும் அவர் வியப்போடு குறிப்பிட்டுள்ளார். "இந்தப் பிரயாணத்தில் நான் வேறெங்கும் பார்த்த மக்களை விட இங்குள்ள மக்களின் முகத்தில் தான் அதிக மகிழ்ச்சி தாண்டவமாடுகிறது" என்றும் சொல்கிறார் அவர். (இதைப் படிக்கும் நீங்கள் நற்பிட்டிமுனை என்றால், அல்லது நற்பிட்டிமுனையில் சொந்தக்காரர்கள் இருந்தால், வெள்ளைக்காரனை பொறாமைப்பட வைத்த உங்கள் தாத்தா – பாட்டியை நினைத்து ஒருதடவை பெருமையாக கொலரைத் தூக்கிக்கொள்ளலாம்!)

அடுத்தநாள் பின்னேரம் மூன்றரை

## மயிலாடும் மண்ணில் விருந்தோம்பும் வண்ணம்!

## - தோமஸ் அந்தோனி ரீடரின் நாட்குறிப்பிலிருந்து

மணியளவில் நாப்பட்டிமுனையிலிருந்து புறப்பட்ட ரீடர், மூன்று மணிநேரப் பல்லக்குப் பிரயாணத்தில் வம்மிமடுவை வந்தடைகிறார். வம்மிமடுவின் ஒருபுறம் பரந்த நெல்வயல்களாகவும், மறுபுறம் அடர்ந்த காடாகவும் விளங்குவதையும் அங்கு கூட்டம் கூட்டமாக ஆபத்தான யானைகள் வாழ்வதையும் வம்மிமடுக் கிராமத்தலைவர் கூறி, இரவில் பயணிக்கவேண்டாம் என்று அவரைத் தடுக்கிறார். இனி ரீடரின் வரிகளை நேரடியாகவே வாசிப்போம்.

"யூலை 12ஆம் திகதி, காலை ஆறு மணியளவில் சூரியன் உதிக்கையில் வம்மிமடுவை விட்டுக் கிளம்பிய நான், அதற்கும் கருங்கொட்டித்தீவுக்கும் இடைப்பட்ட பகுதி, வர்ணனைக்கு அப்பாற்பட்ட பேரழகுடன் திகழ்வதைக் கண்டேன். புளோரன்ஸின் கபினோ பகுதியை எனக்கு அது ஞாபகமூட்டியது. எண்ணிலடங்கா பெசண்ட் பறவைகளை அங்கு மட்டும் தான் காணமுடியும். இங்கோ நிறைய மயில்களும் அழகழகான பறவைகளும். நான் துப்பாக்கியுடன் அரைமணி நேரம் அலைந்து திரிந்து இரண்டைச் சுட்டேன். அதில் ஒன்றின் வால் ஒன்றரை யார் நீளமானது. ஒரு ஐம்பது மயிலை நான் இலகுவாக சுட்டுக்கொன்றிருக்கலாம். ஆனால் எனக்குக் கவலையாக இருந்தது. இவை பெறுமதி வாய்ந்தவை....

மட்டக்களப்புக்கும் இந்த இடத்திற்கும் இடைப்பட்ட காட்சிக்கு, இலங்கையின் வேறெந்த பாகத்தையும் ஒப்பிடமுடியாது.

**மைங்கணான் மகிழறிவன்**

இங்குள்ள கிராமங்கள் தூய்மையாகக் காணப்படுகின்றன. மக்கள் நிம்மதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்கிறார்கள். ஒரு வெள்ளைக்காரன் இவ்வீதி வழியாகச் சென்றதை இதற்குமுன் கண்டதில்லை என்று அவர்கள் என்னிடம் சொன்னார்கள். ஒன்பதரை மணியளவில் தாரை தப்பட்டை முதலான பலவற்றுடன் வந்து கிராமத் தலைவர் என்னை வரவேற்றார். 50 யார் தொலைவுக்கு வெண்ணிறத் துணிகள் அலங்கரிக்கப்பட்டு, நான் நடப்பதற்காக வெண்சீலை விரிக்கப்பட்டிருந்தது. நல்ல கோழியிறைச்சியும் பாலும் பழமும் இன்னும் நிறைய உணவும் எனக்கு வழங்கப்பட்டது. அருமையான சாப்பாடு! இதே விருந்தோம்பல் பண்புடனே நான் மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் உபசரிக்கப்பட்டேன். சூதுவாது அறியாத இந்த மக்களை நான் என்றென்றும் நட்போடு நினைவில் வைத்திருப்பேன்."

இங்கு வம்மிமடு என்று சொல்லப்படும் ஊர் வேறெதுவும் அல்ல; இன்றைய நிந்தவூர் தான் அது. நிந்தவூரின் அருகே இன்றும் நீடிக்கும் மருத நிலத்துக்கு நீண்டகால பாரம்பரியம் உண்டு என்பதை ரீடரின் வம்மிமடு வயல்வெளி தொடர்பான இந்த வரிகள் சொல்லாமல் சொல்கின்றன.

இறுதியாக ரீடர் சொல்லும் இடம் கருங்கொட்டித்தீவு. அதாவது அக்கரைப்பற்று. இன்றைக்கும் கிழக்கிலங்கையின் மிக அழகான காட்சிப் புலங்களில் ஒன்று, நிந்தவூரிலிருந்து அக்கரைப்பற்று வரை, நீடிக்கும் வயல்நிலங்கள். அவை இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் முல்லையும் மருதமும் கைகோர்த்த எழில்பொங்கும் நிலமாகத் திகழ்ந்ததையும், "இலங்கையில் வேறெங்கும் கண்டதில்லை" என்று ஒரு வெள்ளையனை வாய்பிளக்க வைக்கும் வண்ணம், கண்ணுக்கு விருந்தளிக்கும்படி விளங்கியதையும் நம் ரீடரின் வரிகளில் அறிகிறோம். பறவைகளைக் கண்டதுமே துப்பாக்கியைத் தூக்கிச் சென்ற ஐரோப்பிய களியாட்டப் புத்தியும், மயிலின் தோகையையும் அழகையும் கண்டதுமே "மேலும் மயில்களைக் கொல்வதற்கு வருத்தமாக இருக்கிறது" என்று கசியும் போது வெளிப்படும் சீவகாருணியமும், அந்த மனிதருக்கு ஒரு "சல்யூட்" போடலாம் என்று தோன்றவைக்கிறது.

அவர் முன்பொருமுறை கண்ட இத்தாலியின் புளோரன்ஸ் மாநிலமும் பெசண்ட் பறவைகளும் இங்குள்ள நிலத்தையும் மயில்களையும் கண்டபோது அவருக்கு நினைவில் தோன்றியிருக்கின்றன. நம் மனதில் ஆழமாகப் பதிந்த பழைய காட்சியொன்றை நினைவுகூரத் தூண்டும் நிலம், எப்போதும் மனதுக்கினியதாகவே இருக்கும். அப்படியென்றால், ரீடருக்குத் தன் பிறந்தகத்தை - ஐரோப்பாவை நினைவூட்டிய இந்த மயிலாடும் மண், எத்தனை அழகாக விளங்கியிருந்திருக்கும்?

நற்பிட்டிமுனை மக்களின் பாசம், இரவில் பயணிக்காதீர்கள் என்று சொன்ன வம்மிமடு தலைவரின் அக்கறை, கூரைமுடி, நிலவிரிப்பு, பறைமேள மரியாதைகளுடன் வரவேற்று வயிறுமுட்ட சாப்பாடு போட்ட கருங்கொட்டித்தீவுத் தலைவரின் விருந்தோம்பல். அத்தனையிலும் கவிழ்ந்துவிட்டார் ரீடர். ஊர் பேர் தெரியாதவனை, அதிலும் முதன்முதலாக நம்மைச் சந்திப்பவனை "உங்களை என்றென்றும் அன்போடு நினைவுகூர்வேன்" என்று சொல்லவைப்பது ஒன்றும் அத்தனை எளிமையான காரியம் அல்ல. அதைச் செய்து காட்டியிருக்கிறார்கள் நம் தாத்தா பாட்டிகள். மயிலாடிய அழகுப்பூமி இது, எங்கிருந்தோ கடல் கடந்து வந்தவனை அன்பால் கட்டிப்போட்ட நேசம் வாழ்ந்த தேசம் இது. என்ன தவம் செய்தோம் இந்த மண்ணில் பிறப்பதற்கு!

# மீன்பாடும் தேனாட்டில் பயணியின் பார்வையில்...

## புகலிடத்திலும் அயராது இயங்கும் 'பாடும்மீன்' சு.ஸ்ரீகந்தராசா





பாடும்மீன் சு. ஸ்ரீகந்தராசா

உள்ளார்ந்த ஆற்றல் மிக்கவர்கள் எங்கிருந்தாலும் இயங்கிக்கொண்டிருப்பார்கள். அவர்கள் தாயகத்தை விட்டு ஆபிரிக்காவுக்கு சென்றாலும் அவுஸ்திரேலியாவுக்குச் சென்றாலும், தாம் ஆழ்ந்து நேசித்த பணிகளை தொடருவார்கள்.

அவ்வாறு ஏறக்குறைய மூன்று தசாப்த காலமாக அவுஸ்திரேலியாவில் வாழ்ந்தவாறு கலை, இலக்கியம் உட்பட வானொலி ஊடகம், இதழியல், சமூக அமைப்புகள் தொடர்பான பணிகளில் இயங்கிவருபவர் கிழக்கிலங்கையின் மீன்பாடும் தேனாட்டின் பிரதிநிதியாக இருப்பவர்தான் சட்டத்தரணி " பாடும்மீன்" சு.ஸ்ரீகந்தராசா.

பாடும்மீன் என்ற சொற்பதம் எமது தமிழ்சமூகத்தின் அழிக்கமுடியாத ஓர் அடையாளம். தண்ணீரில் மீன் அழுதால், அதன் கண்ணீரை யார் அறிவார்? என்று ஒரு பாடல் வரி இருக்கிறது. அதுபோன்று மீன்பாடுமா..? எனக்கேட்பார்கள். "ஆம், பாடும்" என்று நிரூபித்திருக்கிறார்கள்.

மட்டக்களப்பு கல்லடி பாலத்திலிருந்து முழுமதி நாட்களில் செவிமடுத்தால் பாலத்தின் கீழே ஓடும் வாவியிலிருந்து எழும் ஓசையை கேட்கமுடியும் என்று அதனை ஒலிப்பதிவுசெய்து இணையத்தில் பதிவேற்றியுள்ளனர்.

ஏறக்குறைய ஆறு தசாப்தங்களுக்கு முன்னரே, கத்தோலிக்க மதகுருவான அருட்தந்தை லாங் அடிகளார் அந்த ஒலியை பதிவுசெய்து இலங்கை வானொலியில் ஒலிபரப்பினார் என்ற செய்தியிருக்கிறது.

இந்த ஒலி, இலக்கியங்களில் " நீரர மகளீர் இசை" என்றும் வர்ணிக்கப்படுகிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த பாடும் மீன் பெயரில் இலக்கிய இதழ்கள், விளையாட்டுக் கழகங்கள், சமூக அமைப்புகள் இருக்கும் அதேசமயம் அந்தப்பெயரையே தனது பொது வாழ்வின் முதல் எழுத்துக்களாக்கி இயங்கி வருபவர்தான் எம்மத்தியிலிருக்கும் " பாடும் மீன்" சு.ஸ்ரீகந்தராசா.

இலங்கையில் தமது பாடசாலைப் பருவத்தின் இளம்பராயத்திலேயே இலக்கிய எழுத்துப்பணியை ஆரம்பித்திருக்கும் இவர், கடந்த அரைநூற்றாண்டு காலமாக (1968 -2018) தொடர்ச்சியாக தங்கு தடையின்றி எழுத்தூழியத்தில் ஈடுபட்டுவருபவர்.

களுவாஞ்சிக்குடியில் சுப்பையாபிள்ளை - சின்னம்மா தம்பதியரின் ஏகபுத்திரனான ஸ்ரீகந்தராசா, தனது கல்வியை பட்டிருப்பு மத்திய மகாவித்தியாலயம், மட்டக்களப்பு இந்துக்கல்லூரி ஆகியவற்றில் தொடர்ந்த பின்னர் கொழும்பு பல்கலைக்கழகத்திலும் அதன்பிறகு இலங்கை சட்டக்கல்லூரியிலும் இணைந்து சட்டத்தரணியானவர்.

இவர் கல்வி கற்ற கல்லூரியில் வெளியான உயிர்ப்பு என்ற கையெழுத்து இதழின் ஆசிரியராக இவர் இயங்கியபோது இவரது வயது 14 என்பது வியப்பானது!

சிறுவயதுமுதலே பேச்சாற்றல், நடிப்பாற்றல், எழுத்தாற்றல், முதலான ஆளுமைப்பண்புகளுடன் வளர்ந்திருக்கும் பாடும்மீன் ஸ்ரீகந்தராசாவுக்கு முதலில் களம் வழங்கி எழுத்தாளன் என்ற அடையாளத்தை உருவாக்கியது சிந்தாமணி வார இதழ்.

கொழும்பு எம்.டீ. குணசேனா நிறுவனம் அக்காலப்பகுதியில் தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் பல பத்திரிகைகளை வெளியிட்டது. அங்கிருந்துதான் தினபதி நாளேடு, சிந்தாமணி வார இதழ், மற்றும் மாலைத்தினசரி தந்தி, ராதா, சுந்தரி முதலான இதழ்கள் வெளிவந்தன.

இலங்கை பத்திரிகை உலக ஜாம்பவான் என வர்ணிக்கப்படும் எஸ்.டி. சிவநாயகம் ஆசிரியராக பணியாற்றிய பத்திரிகைகள்தான் தினபதியும் சிந்தாமணியும்.

கிழக்கிலங்கையிலிருந்து எழுதத்தொடங்கிய பாடும்மீன் சு.ஸ்ரீகந்தராசாவுக்கு தென்னிலங்கையிலும் எழுத்துப்பணியை தொடருவதற்கு களம் அமைத்துக்கொடுத்தது



சிந்தாமணி. அத்துடன், தந்தை செல்வநாயகம் அவர்கள் நடத்திய சுதந்திரன் பத்திரிகையிலும் ஊடகவியலாளராக பணியாற்றியிருக்கிறார்.

தொழில் ரீதியாக தொடக்கத்தில் அரசாங்க எழுதுவினைஞர் சேவையில் இணைந்திருந்தாலும், பின்னர் சட்டத்தரணியானதும் கிழக்கிலங்கை நீதிமன்றங்களில் தனது பணியை தொடர்ந்தார். கலை, இலக்கிய, ஊடகத்துறையில் கவிதை, சிறுகதை, விமர்சனம், பத்தி எழுத்துக்கள், ஆய்வு, நாடகம், வில்லிசை முதலான அனைத்து துறைகளிலும் அகலக்கால் பதித்து பல்துறை விற்பன்னராக விளங்கியிருக்கும் பாடும் மீன் ஸ்ரீகந்தராசா, மேடை நாடகங்களிலும் நடித்து புகழ்பெற்றிருப்பவர். கவிதை இயற்றுவதில் மட்டுமல்ல மெல்லிசைப்பாடல்கள் புனைவதிலும் ஆற்றல் மிக்கவராகத் திகழ்ந்திருப்பவர்.

தனது 15 வயது பாடசாலைப் பருவத்திலேயே நாடகம் எழுதி இயக்கி மேடையேற்றி அனுபவம் பெற்றவர். தான் பிறந்து தவழ்ந்து வளர்ந்த களுவாஞ்சிக்குடியில் ஒரு நூலகம் இல்லாத குறையைபோக்குவதற்காக தனது நண்பர்களுடன் இணைந்து பொதுமக்களின் ஆதரவுடன் நூலகம் அமைத்தமை, இளைஞர்களை இணைத்து இளம் நாடக

**முருகபூபதி – அவுஸ்திரேலியா**

மன்றம் அமைத்து கிராமங்கள்தோறும் நாடகங்களை அரங்காற்றுகை செய்தமை, வில்லுப்பாட்டுக்களை இயற்றி அவற்றையும் பொதுமேடைகளில் அரங்கேற்றியமை, மட்டக்களப்பின் நாட்டார் பாடல்களுக்கு நாடகவடிவம் வழங்கி அவற்றையும் மக்களிடம் அரங்கங்கள் வாயிலாக எடுத்துச்சென்றமை, உட்பட பல்வேறு கலை, இலக்கிய பணிகளில் தீவிரமாக செயற்பட்டிருக்கும் இவர், கடல் சூழந்த கண்டம் அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்த பின்னரும் அயராமல் இயங்கிவருகிறார்.

இந்தப்பதிவின் தொடக்கத்தில் குறிப்பிட்டிருந்தவாறு தனது உள்ளார்ந்த ஆற்றல்களை புலம் பெயர்ந்தபின்னரும் வற்றிப்போகச்செய்யாமல் இவர் வெளிப்படுத்தி வந்திருப்பதை அருகிருந்து பார்த்துவந்திருப்பதனாலும், இவருடன் இணைந்து சில பொதுப்பணிகளில் ஈடுபட்டதனாலும் இவர் பற்றி மேலும் அறிந்துகொள்ள முடிந்திருக்கிறது.

அவுஸ்திரேலியா விக்ரோரியா மாநிலத்தில் முன்னர் இயங்கிய தமிழ் அகதிகள் கழகம், நீண்ட காலமாக இயங்கிவரும் ஈழத்தமிழ்ச்சங்கம், கடந்த 2001 ஆம் ஆண்டுமுதல் தமிழ் எழுத்தாளர் விழா இயக்கத்தை முன்னெடுத்துவரும் அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கம் ஆகியன வற்றிலும் தலைவராக




பணியாற்றியிருக்கும் பாடும்மீன் ஸ்ரீகந்தராசா, விக்ரோரியா மாநிலத்தில் தமிழ் ஆர்வலர் மருத்துவர் பொன். சத்தியநாதன் நடத்திய தமிழ் உலகம் பத்திரிகையின் ஆசிரியராகவும் பணியாற்றியிருப்பவர்.

அத்துடன் அவுஸ்திரேலியாவில் ஒலிக்கும் பல வானொலிகளிலும் இவரது உரைகள் தொடர்ச்சியாக இடம்பெற்றுவருகின்றன. குறிப்பாக பழந்தமிழ் இலக்கியம், தமிழ்த் திரையிசையையும் அதற்கு உயிர்ப்பளித்த கவிஞர்களின் பாடல் வரிகளையும் இணைத்து பல ஒலிச்சித்திரங்களை வழங்கியிருக்கிறார்.

இவ்வாறு பல ஆற்றல்களை தனது வசம் வைத்திருக்கும் இவரிடம் நாடகம் எழுதும் இயக்கும் வல்லமையும் இருப்பதனால், இவரை எங்கள் அவுஸ்திரேலியாவின் பல்கலை வேந்தன் என்றும் அடையாளப்படுத்தியிருக்கிறோம்.

மூத்த எழுத்தாளர் எஸ்.பொன்னுத்துரையின் பிரபல நாடகமான "வலை" இவரது இயக்கத்தில் மெல்பனில் மேடையேற்றப்பட்டதை பார்த்து வியந்திருக்கின்றேன். அதனை இவர் நெறிப்படுத்தியிருந்த பாங்கும் ஒலி, ஒளி அரங்க நிர்மாணம் என்பனவும் மறக்கமுடியாத நிகழ்வாக மனதில் நிலைத்திருக்கிறது.

தனது பணிகளுக்காக இலங்கையிலும் அவுஸ்திரேலியாவிலும் பல்வேறு விருதுகளையும் பெற்றிருக்கும் பாடும்மீன் ஸ்ரீகந்தராசா அவர்களின் மணிவிழாக்காலத்தில், இலங்கையில் வெளிவரும் ஞானம் மாத இதழ் அட்டைப்பட அதிதியாக பாராட்டி இவரது சேவைகளை பதிவுசெய்து கௌரவித்திருக்கிறது.

எம்மத்தியில் ஸ்ரீகந்தராசா என்ற பெயரில் நாமறிந்த பலர் இருக்கலாம். ஆனால்," பாடும்மீன் " என்றும் குறிப்பிட்டால்தான் அது இவரைத்தான் அடையாளப்படுத்துகிறது என்று புரிந்துகொள்ளும் நிலையில்தான் நாம் இருக்கின்றோம்.

இவர் எழுதியிருக்கும் நூல்கள்: சந்ததிச் சுவடுகள், மனதைக்கவரும் மட்டக்களப்பு நாட்டுப்பாடல்கள், தமிழினமே தாயகமே, தமிழின் பெருமையும் தமிழரின் உரிமையும், ஓர் ஆஸ்திரேலிய ஈழத்தமிழரின் இந்தியப்பயணம், Sankam Period and Sankam Literature ( சங்ககாலமும், சங்க இலக்கியங்களும் - ஆங்கில மொழிபெயர்ப்பு)

நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்னும் உரைச்சித்திர இறுவட்டையும் வெளியிட்டுள்ளார்.

பாடும்மீன் ஸ்ரீகந்தராசா மேலும் மேலும் பல சாதனைகளை நிகழ்த்தவேண்டும் என வாழ்த்துகின்றோம். கிழக்கிலங்கை எழுத்தூழியக்காரர்களின் வரிசையில் இவரது பெயர் முக்கியத்துவம் வாய்ந்தது.

(தொடரும்)

# வடபுலத்து பெண்ணின் பார்வையில் மட்டக்களப்பார்...

## மட்டுநகர் மண்ணைத்தொட்டு 24

தமிழ்க்கவி

சாரதா நல்ல வடிவான பிள்ளை. மா நிறம்தான் ஆனா குறுகுறுத்த பார்வையும் குருவிக்குஞ்சுபோல சின்ன வாயும், எடுப்பான மூக்கும் அவள் வடிவுதான் எண்டு சொல்லக்காணும். பரட்டைத்தலைதான் சுருள்சுருளான தலைமயிர் கட்டுக்க நில்லாது. எப்பவும் அவளின்ர நெத்தியிலும் கன்னத்திலும் பறந்துகொண்டிருக்கும். அதுகும் ஒருவடிவுதான்.

அவள் மட்டக்களப்பால வந்த நேரம் எதோ நாலெழுத்து படிச்சவளா யிருந்தாள் எண்டதோட "இஞ்சவந்துதான் தான் கார், வசு, உந்தமாதிரி மோட்டச் சயிக்கிலுகளயெல்லாம் பாக்கிறன். எங்கட இயக்கத்துக்கு காடு மட்டுந்தான் தெரியுமிண்டு நெச்சன்"; எண்டாள்; அவளின்ர கதையெல்லாம் வெகுளித்தன மாத்தான் இருக்கும். அவள இஞ்சால வெளியீட்டுப்பிரிவுக்க அனுப்பினாள் மகளிர் பொறுப்பாளர். ஏதெண்டாலும் எழுதிக்கிழுதி முன்னுக்கு வந்திடுவாள் எண்டு நெச்சாளோ என்னவோ? என்னண்டா எப்பவும் புத்தகமும் கையுமாத் திரிஞ்சாள்; அதால அவளுக்கு அந்த இடம் சரியா இருக்குமிண்டு அவா நெச்சிருக்கலாம்.

ஆனா வெளியீட்டுப்பிரிவில மேதாவியளே இருக்கிறதால அவளுக்கு எடுபிடி வேலையளக் குடுத்து வச்சிருந்தினம். கிச்சினில போய் சாப்பாடு எடுக்கிறது, மற்ற முகாங்களுக்கு புத்தகம் குடுக்கிறது, வேலைக்கு ஆள்பிடிக்கிறது, முத்தம் வீடுவாசல் கூட்டுறது எண்டு போகுது. அப்பிடித்தான் எங்கட நூலக முகாமுக்கு ஒருநாள் ஏதோ கடிதங்குடுக்க வந்தாள். வந்தவள் புத்தக அடுக்குகளைப்பாத்து ஏங்கிப்போனாள்.

“ அம்மா எனக்கும் புத்தகம் தாங்க வாசிச்சிட்டு கவனமா கொண்டந்து தாறன்“ என்று என்னட்ட கெஞ்சினாள்.

“சரி... இயக்கம் படிக்கவிரும்பிறவைய தடுக்கப்படாது எண்டுதானே சொல்லியிருக்கு“ எண்டநினைப்பில “அன்னை வயல்“ “செர்யூசா“ “இவான்“ போல நல்ல மொழிபெயர்ப்பு நாவலா ரெண்டு மூண்ட எடுத்திக் குடுத்தன். அவள் என்னண்டா எந்திரனில வந்த சிற்றி மாதிரி அப்பிடியும் இப்பிடியும் திருப்பிப்பாத்திட்டு என்னட்டயே தந்திட்டாள். பிறகு, நாங்கள் கழிச்சு வைச்ச புத்தகக்குவியல கிழறினாள். அதெல்லாம் ரமணிச்சந்திரன், அனுராதா,



கணேஸ்வசந்த் போல எழுத்தாளர்கள் எழுதினது. நாங்கள் அதெல்லாம் எங்கட நூலகத்தில போடமாட்டம். ரெண்டுபுத்தகத்தை உருவி எடுத்தாளா...பாத்தன்...எண்டாலும் நான் பேசல்ல.

அப்ப பாத்து எங்கட முகாம் பொறுப்பாளர் வந்திட்டாள்.

“ஆர் ஆள், எண்டவள், அவளெடுத்த புத்தககங்கள வாங்கிப்பாத்திட்டு, இந்தப்புத்தகங்கள் குடுக்கிறேல்ல பொறுப்பாளறற்ற கடிதங் கொண்டுவந்த நீரோ?அதில்லாட்டி புத்தகம் எடுக்கேலாது“ எண்டு புடுங்கி வச்சிட்டாள். அவள் கலங்கேல்ல விறைப்பா வெளிக்கிட்டு போயிட்டாள்.

ஆனா எப்பிடியோ அவள் ஆற்ற காலக் கையப்பிடிச்சோ கோண்டாவில் நூலகத்தில புத்தகமெடுத்துப் படிக்கத் தொடங்கிட்டாள். இப்பிடி அவள் படிச்ச ஏதேர் ஒரு புத்தகம் பிடிபட அவளுக்கு பணிஸ்மெண்ற போட்டாள்; பொறுப்பாளர்.கோண்டாவில்லயிருந்து ஒரு கடிதங்கொண்டே கொடியாமம் வேசில குடுத்து அங்க உள்ள பொறுப்பாளரிட்ட ஒப்பம் வாங்கியரணும். எப்பிடி நடந்துபோய் வரவேணும்.

ம்...மட்டக்களப்பாளுக்கு நடக்கச் சொல்லிக்குடுக்கினம். அவளுக்கொரு கஸ்டம் இருந்துதுதான் அது என்னண்டா வழி தெரியாத கஸ்டந்தான். முதல் அவள் யாழ்ப்பாணத்தெருக்களுக்க கொஞ்சம் சுத்தியலைஞ்சிட்டாள். நல்ல வேளையா ஒரு போராளியக்கண்டு வழி கேட்டதால அவன் கொணந்து கண்டிரோட்டில விட்டான். அவனும் அதால போக இருந்ததால கைதடி வரைக்கும் வந்திட்டு வழி காட்டிட்டுப்போனான். அவள்நேரத்தோட போனாலும், கொடியாமம் போட்டடியில நிண்டு தத்தாளிப்பட்டு போனவந்த சனத்தை கேட்டு முகாமைப்பிடிச்சு கையெழுத்த வாங்கிமுடிய ராவாகிட்டுது. மறுநாள் திரும்பிவந்து கடிதத்தை குடுத்தாள். அதுக்கும் பிறகு ரெண்டு மூண்டுதரம் அவளுக்கு வழிகாட்டின பெடியனக்கண்டாள்; ஒரு சிநேகிதந்தான் வேறயில்ல. ஆனா இவள் அந்த பெடியனோட கதைச்சதை ஆரோ வந்து பொறுப்பாளரிட்ட அண்டிப்போட்டினம். அதுக்கும் பணிஸ்மெண்டுதான். ஆனா ஒண்டுமில்லாத அந்தப் பெடியனில ஏதோ வந்திட்டுது. அதை கண்டுபிடிச்ச உடனை அவளை களமுனைக்கு முன்பொயின்றுக்கு சென்றிக்கு அனுப்பிட்டாளவை. அவனும் விசயந்தெரியாம அவளைத்தேட ஒரு நல்ல சீவன் விசயத்தை சொல்லிப்போட்டுது.

இடையில முகமாலைச் சண்டைவந்துது. போராளியள் வீரச்சாவு. ஆனா அவள் ஆறுமாசத்தில பத்திரமா திரும்பி வந்திட்டாள். வந்த உடன முதல் காரியமா அவனும் அவளும் செய்த வேலை கலியாணக்குழுவுக்கு தாங்கள் ஒருத்தரை ஒருத்தர் விரும்பிறதை அறிவிச்சதுதான். அவளுக்கு சேவைக்காலம் முடிஞ்சிது அதால கலியாணம் முடிய விலகல் கடிதங் குடுத்திட்டு குடும்பத்தை பாக்கப்போனாள். இப்பவும் அண்மையில அவளை யாழ்ப்பாணத்தில கண்டன். புருசன் வெளியில போயிற்றார். நானும் போயிருவன் எண்டாள். எங்கிருந்தாலும் வாழ்க.

# கருணாநிதி ஒரு சகாப்தம்

தொடர்ச்சி...

கட்டமைத்ததாக – அதில் உயிர்வாழ்வதாகவே இருந்திருக்கிறது. இதனால் அது எப்போதும் உட்சுருங்கியதாகவே இருந்துள்ளது. இன்றைய நிலையும் அதுவே.

ஆனால் கருணாநிதியின் திராவிட இயக்க அரசியலில் முற்போக்கான கூறுகளே அடிப்படையாக இருந்தன. அது சமூக நீதி , மாநிலத்தின் உரிமைகள், பால்சமத்துவம், மத மூட நம்பிக்கைகள் தொடர்பான கரிசனை, மொழிவளர்ச்சி போன்றவற்றை வலுவாகக் கொண்டது.

திராவிட இயக்கப்பாரம்பரியத்தை – அந்தச் சிந்தனையை வலுப்படுத்துவதற்குரிய அரசியல் அறிவுப் பண்பாட்டை உருவாக்கியதில் பெரியார், அண்ணாத்துரை, கருணாநிதி ஆகியோருக்குப் பெரும் பங்குண்டு. அவர்கள் அதைச் செய்தே தமது அரசியலை முன்னெடுத்தனர். இன்றைய தமிழகத்தின் அடையாளம் என்பது அவர்கள் உருவாக்கியதே. இதற்காக அவர்கள் வரலாற்றையும் பண்பாட்டையும் சமூகவியலையும் படித்து தமக்கான அரசியல் சிந்தனையையும் செயற்பாட்டு வடிவத்தையும் உருவாக்கிக் கொண்டனர். பெரியாரும் அண்ணாத்துரையும் கருணாநிதியும் இதற்காக எழுதிய பக்கங்கள் ஏராளம். படித்தது ஏராளம். இந்தளவுக்கு ஈழ அரசியலில் எவருமே செய்யவில்லை. உருப்படியாக இரண்டு புத்தகங்களைக் கூட இலங்கைத்தமிழ் அரசியல் வாதிகள் எழுதியிருக்க மாட்டார்கள். மட்டுமல்ல, அரசியலுக்கு அப்பால் அவர்கள் நாடகத்துறையிலும் சினிமாவிலும் ஊடகத்திலும் இலக்கியத்திலும் மொழி மற்றும் பண்பாட்டுத்துறையிலும் பெரும் ஆளுமைகளாக இருந்தனர்.

சமூக ஏற்றத்தாழ்வுக்கு எதிரான நிலைப்பாடு, பகுத்தறிவு போன்றவற்றைத் தன்னுடைய அரசியலில் உள்ளடக்கமாகக் கொண்ட தி.மு.க இடதுசாரிகளை ஒரு போதுமே எதிரிகளாகப் பார்த்ததில்லை.

ஆனால், ஈழத்தில் இதற்கு எதிர்மாறாகவே நிலைமை இன்னும் இருக்கிறது. மூட நம்பிக்கைகள் பற்றி வாயே திறக்காத நிலை. சமூக மாற்றம் பற்றியோ அதற்கான கலைவடிவங்களைப் பற்றியோ இவர்கள் பொருட்படுத்துவதே இல்லை.

தி.மு.க பட்டிதொட்டி எங்கும் இயக்கத்தை கட்டியது. இவர்கள் பம்பல், கும்பல் என்ற அளவில் கதையளக்கும் அரசியலை முன்னெடுத்தனர்.

தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் தலைவர் சுகு சிறிதரன் குறிப்பிடுவதைப்போல தி.முகவினர், பொது உடைமை வாதிகளுடன் பல சந்தர்ப்பங்களில் இணைந்து செயற்பட்டார்கள். இவர்கள் (ஈழ அரசியல் தலைமைகள்) தீண்டாமை பாராட்டினார்கள். அவர்கள் தமிழக மக்களுக்கென சாதித்திருக்கிறார்கள். இங்கு தொடர் வாய்ச்சவாடல் மாத்திரமே. இவர்கள் நாவலர், இராமனாதன் பாரம்பரியம் என்ற பாரம்பரியத்தினராகவும் இன்னும் சிலர் பிரேமாநந்தாவின் சீடப்பிள்ளைகள் என்பதிலும் பெருமை கொள்பவர்கள். அவர்கள் பெரியாரின் வாரிசுகள் என்பதில் பெருமிதம் கொள்பவர்கள்.

எனவே இத்தகைய அரசியல் வேறுபாடுகளே கருணாநிதியின் மரணத்தின்போதும் பிரதிபலித்துள்ளன. தவறாகக் கணக்கைச் செய்தால் தவறாகவே விடையும் கிடைக்கும். ஆனால், இதைக் கடந்தே வரலாறு நிற்கும்.

கருணாநிதி வாழும் சகாப்தம் என்பது வரலாற்றின் தரிசனமாகும்.

## கவிதை

### நின்றாலும் நடக்கின்றோர்

இத்தனை பூக்களையும்
இந்த மரம் வைத்திருந்ததை
யாரிடமும் சொல்லவில்லையே

மனிதனென்றால் சொல்லியிருப்பான்
பெருமை பேசியிருப்பான்

வாசத்தால் என்னைத் தூக்கி எழுப்புகின்ற
பூமரத்திற்கு
பூக்கள்தான் தும்பிக்கை
ஆயிரம் தும்பிக்கைகளை தனக்குள்
ஒளித்துவைத்திருந்து
காலையில்
நீட்டிக் கொண்டிருக்கும் மரமே

உன் பலத்தை மெச்சுகிறேன்
உன் பக்குவத்தை
மதிக்கிறேன்

எனக்கு இல்லையே இப்படி ஒரு
தும்பிக்கை
எனக்கு இல்லையே இப்படி ஒரு பக்குவம்

உன்னை நாடி நாடி வருகின்ற
வண்ணாத்திகளை
நீ விரும்பி ஏற்கின்றாய்
உன் அழகுத் தும்பிக்கைகளில்
மேலும் வர்ணங்கள் குத்தியதைப்போன்று
அவை உன் பூக்களில் குந்தி இருப்பது
எனக்கு இன்னும் அழகாகத் தெரிகிறது

என்னில் ஒரு பூச்சி குந்தவில்லை

என் கண்ணைக்கூட ஒரு குளமாக
நினைத்து
ஓர் ஆமை வரவில்லை

இவைகளின் பார்வையில் நான்
மரக்கட்டையா
ஒரு சிறு துளிர் என்னில்
தெரியவில்லையா

ஏன் இறுகினேன் பூமரமே உன்னைப்போல்
பல கிளைகள் விரிக்காமல்
பல பிரிவினைகள் வந்து சுருங்கிச்
சிறுத்தேனா
என் பூவெல்லாம் கொட்டிற்றா

நான் தளைக்க என்று
ஒரு மழை இனிப் பெய்யாதா
என் மழை கல்லாகி
உடைத்து அதை
எனக்கு சிறைச்சாலை கட்டித்தான்
அதற்குள் என்னை நான் தூ
க்கிவைத்தேனா

நான் இருப்பது
ஒரு சிறைச்சாலைக்குள்ளேயா

பூமரமே உன் தும்பிக்கைகளால்
என் சிறையை உடைத்துவிடு
நான் வெளியே வரவேண்டும்
உன்னைப்போல ஒரு பூமரமாக
நிற்கவேண்டும்
பூமரங்கள் நின்றாலும் நடக்கின்றோர்தானே

--- சோலைக்கிளி ---

## சிறுகதை: அம்மாவைத்தேடி ஒரு மகளின் பயணம்

2009 அன்றைய தினமும் படு பயங்கரமாகவே விடிந்தது. வெட்டவெளியில் நெருக்கம் நெருக்கமான கொட்டகைகளில், எப்போது ஷெல் வந்து விழும் என்ற அச்சத்தில் நிலத்தோடு நிலமாக கிடந்தார்கள் முள்ளிவாய்க்காலில் மிஞ்சிக்கிடந்தவர்கள்.

இராசம்மா முந்தநாள்தான் ஷெல் விழுந்து முழங்காலுக்கு கீழே துண்டாகியிருந்தது.

ஒரு பெரிய மரத்தின் கீழே துணிகளை விரித்து, ஒரு தற்காலிக மருத்துவமனை அமைத்திருந்தார்கள். கால் துண்டான இடத்தில் ஒரு பென்டேஜ் மட்டுமே சுற்றப்பட்டிருந்தது. நிறைய இரத்தம் வெளியேறியிருந்தது. இராசம்மா இழந்த இரத்தத்துக்கு, எப்படியும் மூன்று பைன்ட் இரத்தமாவது இன்னேரம் ஏற்றியிருக்கவேணும். அந்த மரத்தின் கீழ் துணியில் படுத்திருக்கும் இராசம்மாவுக்கு இரத்தம் ஏற்ற எங்கே போவார்கள்?

அவர்களிடம் மிஞ்சியிருந்த சில சேலைன் போத்தல்களில் ஒன்றில் அரைவாசியை இராசம்மாவுக்கும், அரைவாசியை பக்கத்தில் படுத்திருந்த கனகாம்பிகைக்கும் கொடுப்பதன முடிவெடுக்கப்பட்டது.

கால் துண்டான வலிக்கு ஓபியைட் வலி நிவாரணிகள் கூட போதுமானதாக இருக்காது, ஆனால் இராசம்மாவுக்கு ஒரு பனடோல் குளிசையே கிடைத்தது.
அந்தச் சூழலில் பனடோல் கூட தேவையானதாக் இருக்கவில்லை. உடம்பின் ரணத்தைவிட மனதின் ரணமே வாட்டிக்கொண்டிருந்தது.

தலைமாட்டில் குந்தியிருந்த புஷ்பாவை நிமிர்ந்து பார்த்தாள். புஷ்பாவின் மடியில் மூன்று வயது மகள் சோர்வாக அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள். சுற்றிவரக் கேட்கும் துப்பாக்கிச் சத்தத்துக்கும், ஷெல் விழும் சத்தத்துக்கும் பழக்கப்பட்டுப்போயிருந்ததால் எந்த அச்சமும் இல்லாமல் தூங்கிக் கொண்டிருந்தது அந்தக் குழந்தை.

இராசம்மா குடும்பத்தில் மிஞ்சி இருப்பவர்கள் மகள் புஷ்பாவும் பேத்தியும்தான்.

கணவன், இரண்டு மகன், புஷ்பாவின் கணவன் என எல்லோரையும் ஏற்கனவே வரிசையாக காவு கொண்டிருந்தது யுத்தம்.

” நீ வெளிக்கிடு பிள்ள, சனமெல்லாம் ஆமியின்ட பகுதிக்குப் போகுது, சனத்தோடு சனமா நீயும் போய் ஏதாவது ஒரு அகதி முகாமில இரு, நான் தப்பிப் பிழைச்சா உன்னை வந்து சந்திக்கிறன்”

”எப்படியம்மா? உங்களை இந்த நிலமையில் விட்டுட்டு...?”

”உனக்கென்ன விசரா பிள்ள? என்னோட இருந்து உன்னால என்ன செய்ய ஏலும்? சனமெல்லாம் அங்கால போன பிறகு நீ மட்டும் இங்க இருந்தா ஆமிக்காரன் எப்படியும் சந்தேகப்படுவான்....போயிரம்மா...”

புஷ்பாவுக்கும் இராசம்மா சொல்லுவது சரியாகத்தான் பட்டது. ஆமிக்காரன் வந்தா வயசான நோயாளியான இராசம்மா மீது சந்தேகம் வராது, ஆனா தன்மேல நிச்சயம் சந்தேகம் வரும்.

சனத்தோடு சனமா ஆமியின்ட பகுதிக்குப் போறதெண்டு முடிவெடுத்தாள்.

”சரிம்மா நான் வெளிக்கிடுறன், உனக்கும் ஒண்டும் நடக்காது, உன்னையும் ஆமி எப்படியும் ஒரு ஆஸ்பத்திரியில சேர்க்கும்தானே, அங்க வந்து பார்க்கிறன்...இந்தா இந்த பிஸ்கட்டை வைத்துச் சாப்பிட்டுக்கொள்” தன்னிடம் கடைசியாக மிஞ்சியிருந்த பாதி மெலிபன் பிஸ்கட் பக்கெட்டையும் இராசம்மாவிடம் கொடுத்தாள்.

”ஒருக்கா அவளைக் கிட்ட கொண்டுவா பிள்ள”

உறங்கிகொண்டிருந்த பேத்தியை இராசம்மாவின் முகத்துக்குப் பக்கத்தில் கொண்டுபோக, அவள் கன்னத்தில் ஆசையாக ஒரு முத்தத்தைக் கொடுத்தாள் இராசம்மா.

கழுத்தில் தொங்கிக்கொண்டிருக்கும் சின்ன துணிப்பையோடு கையில் குழந்தையோடும் தூரத்தில் போய் மறைந்த புஷ்பாவைப் பார்த்துக்கொண்டே படுத்திருந்தாள் இராசம்மா.

தூரத்தில் இன்னும் துப்பாக்கி வெடிக்கும் சத்தம் கேட்டுக்கொண்டே இருந்தது.

..............................................................

2026

நோர்வேயின் வடக்கே இருக்கும் ஒரு அமைதியான ஊரில் தன் ஓய்வுக்காலத்தைக் கடத்திக்கொண்டிருந்தார்கள் ஒஸ்கோவிச்சும் மனைவியும். கொஞ்ச நாளாகவே அவர்களின் ஒரே மகள் ஜேனின் நடவடிக்கை சரியில்லை என்று தெரிந்தது. ஒழுங்காக பேசுவதில்லை, நேரத்துக்குச் சாப்பிடுவதில்லை. அவளுக்குள் ஏதோ பிரச்சினை உறுத்திக்கொண்டிருக்கின்றது என்று புரிந்தது. என்னவாக இருக்கும் ஒஸ்கோவிச்சுக்கும் கவலை தொற்றிக்கொன்டது.

அன்று ஜேனே தொடங்கினாள்.

”அம்மா, அப்பா இதை உங்ககிட்ட பேசாமல் விடுவோம் என்றுதான் யோசிச்சன், ஆனா முடியல...?

” சொல்லு... என்னவாக இருந்தாலும் சொல்லு டியர்”

” நீங்க அப்பா அம்மாவா எனக்கு எந்தக் குறையும் வைக்கல ஆனா....”

”ஆனா....”

” நான் பள்ளியில படிக்கும் காலத்திலிருந்தே எல்லாப் பிள்ளைகளும் என்னைப்பார்த்தால் நோர்வே பிள்ளைமாதிரி இல்ல, நான் வேறு எங்கேயோ பிறந்தவள் மாதிரி இருக்கிறதா சொல்லுவாங்க... இப்போதும் எல்லோரும் என்னைப்பார்க்க ஒரு ஏசியன் மாதிரி இருக்கிறதா சொல்றாங்க...ஏன் நான் மட்டும் இப்படி?”

ஒஸ்கோவிச்சுக்கும் மனைவிக்கும் இதைக்கேட்டு பெரிய ஆச்சரியம் இல்லை, எப்படியும் மகள் இதை ஒரு நாள் கேட்பாள் என்று எதிர்பார்த்தேயிருந்தார்கள். இருந்தாலும் ஒஸ்கோவிச்சின் மனைவியின் கண்ணோரத்தில் மெல்லியதாய் எட்டிப்பார்த்த கண்ணீர் பெற்றால் மட்டும்தான் பிள்ளையில்லை என்று சொல்லிக்கொண்டிருந்தது.

” அதுவந்து ... நானும் உங்க அம்மாவும் கல்யாணம் முடிச்சு பதினைஞ்சு வருசம் பிள்ளை இல்லாம இருந்தோம். எல்லா



சிவச்சந்திரன் சிவஞானம்

ட்ரீட்மென்டும் எடுத்தும் சரிவரல்ல, டெஸ்ட் டியூப் குழந்தைக்குக்கூட முயற்சி செய்தோம் சரி வரல.... அப்போதுதான் எனக்கு நான் வேலை செய்த ஒரு என்.ஜி.ஓ என்னை சிறிலங்கா அனுப்பியது”

ஒச்கோவிச்சின் குரல் விம்மியது, கொஞ்சம் இடை நிறுத்தியவர்,
”அங்கே ஒரு அனாதை இல்லத்தில்தான் உன்னைத் தத்தெடுத்தோம்.”

”அப்போ என் உண்மையான அப்பா அம்மா சிறிலங்காவில் இருக்காங்களா?”

”தெரியாது, யுத்தம் நடந்த பகுதியில் இருந்து மீட்டதாக இராணுவம் தான் உன்னை அந்த அனாதை இல்லத்தில் சேர்த்திருந்தது. உன்னைச் சேர்த்து ஆறு மாசம் ஆகியும் யாரும் வரவில்லை என்றுதான் எங்களுக்குத் தத்துக்கொடுத்தாங்க
உன் அம்மா அப்பா பற்றி எதுவும் தெரியாது....”

தன் அறைக்குச் சென்று ஒரு பைலை எடுத்துவந்தார் ஒஸ்கோவிச்.

”இந்தாருக்கு ஜேன், உன்னை சட்ட ரீதியாக நாங்க தத்தெடுத்த எல்லா டீட்டையிலும் .”

வாங்கிப்பார்த்தாள். வவுனியா ”அன்னை இல்லம்” என்ற அனாதை இல்லத்தில் இருந்து ஒஸ்கோவிச் தம்பதிகளுக்குத் தத்துக்கொடுப்பதாக நீதிமன்ற உத்தரவு இருந்தது.

வேறு எந்த விபரமும் இருக்கவில்லை.

”அப்போ.. என் உண்மையான பெயர் ஜேன் இல்லையா? எப்படியும் நான் பிறந்த உடனேயே எனக்கு ஒரு பெயர் வைத்து இருப்பாங்கதானே? அந்தப் பெயர் என்ன? என்ட உண்மையான அம்மா அப்பா யார்? எனக்கு சகோதரங்கள் இருக்கா?”

ஜேனின் மனதில் கேள்விகள் ஒன்றன் பின் ஒன்றாக எழுந்துகொண்டிருந்தன. ”ஜேன் நீ விரும்பினா ஒரு தரம் சிறிலங்கா போய் நீ பிறந்த இடத்தைப் பார்த்துக்கொண்டு வருவோம், ஏலுமென்டா உன்ட அம்மா அப்பாவையும் தேடிப்பார்ப்பம்” சொன்ன ஒஸ்கோவிச்சை ஆச்சரியம் கலந்த சந்தோஷத்துடன் நிமிர்ந்து பார்த்தாள் ஜேன்.

இப்போது மூன்றுபேரின் கண்களின் ஓரத்திலும் கண்ணீர்த்துளி ஒட்டிக்கொண்டிருந்தது.

..............................................................

விசா எடுத்து வெளிக்கிட சரியாக ஒரு மாதம் எடுத்தது.

கூட வந்த மொழிபெயர்ப்பாளர் மனோகரின் உதவியுடன் வவுனியாவில் அன்னை இல்லம் இருந்த விலாசத்தைக்கண்டு பிடித்துவிட்டார்கள். ஆனால் இப்போ அங்கே ஒரு சாப்பாட்டுக்கடைதான் இருந்தது.
விசாரித்துப் பார்த்ததில் அன்னை இல்லத்தை மூடிய பின்பு உரிமையாளர் அந்த வீட்டை விற்றுவிட்டார் என்று தெரிந்தது. வாங்கியவர் அதைச் சாப்பாட்டுக்கடையாக மாற்றி இருந்தார். அவரே அன்னை இல்ல உரிமையாளர் லிங்கநாதனின் விலாசத்தையும் கொடுத்தார். நல்ல வேளை லிங்கநாதன் இன்னும் வவுனியாவிலதான் இருந்தார்.

லிங்கநாதன் வீடு.

லிங்கநாதனுக்கு வயசாகி இருந்தது. வீல் செயாரில்தான் இருந்தார். பார்க்க படித்தவர்போல இருந்தார். ஆங்கிலமும் சரளமாகப் பேசினார்.

”நாங்க நோர்வேயில் இருந்து வாறம்”

ஆச்சரியமாகப் பார்த்தார் லிங்கநாதன்.

”இது எங்க மகள், உங்க இல்லத்தில் இருந்துதான் 2009 ஆம் ஆண்டு தத்தெடுத்தோம்”

லிங்கநாதனுக்கு இப்போது ஒஸ்கோவிச்சை ஞாபகம் வந்தது. அப்போதுதான் வந்தவர்களை இருக்கச் சொல்லாமல் கதைத்துக்கொண்டு இருக்கோம் என்றும் ஞாபகம் வந்தது.

”இருங்க இருங்க...ஞாபகம் இருக்கு. இப்போ முன்புபோல உதவிகள் இல்ல, எனக்கும் ஸ்ரோக் வந்து நடக்கேலாம போச்சு. அதுதான் அந்த இல்லத்தை மூடிட்டன். என் இல்லத்தில் இருந்து போன பிள்ளை இப்படி வளர்ந்து நல்லா இருக்கிறத பார்க்க சந்தோஷமா இருக்கு...இப்ப என்ன விடயமா வந்தீங்க?”

” எங்க பிள்ளையின் அம்மா அப்பா சொந்தக்காரங்க பற்றி ஏதாவது தகவல் இருக்கா?“

”அம்மா அப்பா இல்லாத பிள்ளை என்பதாலதான் தத்துக்கொடுத்திருப்போம், சொந்தக்காரங்க பற்றி எனக்கு ஞாபகம் இல்ல, எதுக்கும் என்ட இல்லம் பற்றிய பைல்ஸ் எல்லாம் பின்பக்கம் ஒரு அறையில வைத்திருக்கன், அதில ஏதாவது இருக்கா என்டு பார்ப்போம்”

”இந்தாருக்கு பாருங்க....”

தொடர்ச்சி... (பக்கம் -23 )

# கட்டிளமைப் பருவ உளநலம்

## நித்திரை

டாக்டர். பி. யூடி ரமேஸ் ஜெயக்குமார்
உளநல மருத்துவர்
வாழைச்சேனை மருத்துவமனை




கட்டிளமை பருவமும் நித்திரையும் :

---

நித்திரை மூளைக்கு ஓர் உணவாகும். மனித செயற்பாடுகள், மூளையின் வினைத் திறனான செயற்பாடுகளிற்கு நித்திரை மிக இன்னியமையாதது. நித்திரையை இழத்தல் அல்லது தவிர்த்தல் என்பது மிக ஆபத்தான ஒன்றாகும். நித்திரையை ஒழுங்காக செயற்படுத்தாத விடலைப் பருவத்தினரின் கல்விச் செயற்பாடுகளின் அடைவுமட்டம் மற்றும் சமூக செயற்பாடுகள் என்பன பாதிக்கப்படும். சராசரியாக ஒரு விடலைப்பருவ மாணவன் 8 மணித்தியாலங்கள் தூங்க வேண்டும். இருந்தபோதும் போட்டிமிக்க இலவச பல்கலைக்கழக கல்வியைப் பெறுவதற்கு கூடுதலாக உழைக்கவேண்டும். அவ்வாறெனில் சராசரியாக 6 மணிநேர இரவுத் தூக்கமும் 45 நிமிடங்களிற்கு மேற்படாத பகல் தூக்கமும் இன்றியமையாதது. இது செயலிழந்த கைபேசி பற்றரியை மீளாக்கம் (புதுப்பித்தல்) செய்வதற்கு ஒப்பாகும். ஒரு வருடத்தில் நடக்கின்ற வீதி விபத்துகளில் 100 000 ற்கு மேற்பட்ட விபத்துகள், சாரதிகளின் குறைந்தளவிலான தூக்கத்தினால் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது. குறைந்த தூக்கம், அசதி, சரியாக சமிக்சைகளை அவதானிக்க முடியாமை, அதிக வேகம் இவை கடைசியில் விபத்தாக அமைகின்றன.

இறுதியில் உயிரிழப்பு, அவய இழப்பு, பாரிய காயங்கள் சாரதிக்கு மட்டுமல்லாது அவரை நம்பி பயணிக்கின்ற பயணிகளுக்கும் ஏற்படுகின்றது. குறைந்த நித்திரையால் ஏற்படுகின்ற வாகன விபத்துகளிற்கு எவ்விதத்திலும் குறையில்லாமல் பாதிப்புகள் விடலைப்பருவ வயதினருக்கும் ஏற்படுகின்றது. அதிக நேரம் கைபேசியுடன், சமூக வலைத்தளங்கள், தொலைக்காட்சி, நண்பர்களுடன் பயனற்ற முறையில் இரவில் அலைந்து திரிவது, மற்றும் சில சமயங்களில் பிழையான கற்றல் முறைகளால் அவர்கள் பயனுடைய இரவு தூக்கத்தை இழக்கின்றனர். உணவு, குடிநீர், சுவாசம் போன்ற உடலிற்கு அத்தியாவசியமான தேவைகள் போன்று நித்திரையும் மிகப் பயனுடையது. நெருக்கீடுகள், நெருக்கீடுகள்சார்ந்த பிரச்சினைகளிற்கும் தூக்கத்திற்கும் இடையில் மிகக் கூடிய தொடர்புள்ளது.

சாதாரணமாக உடல் நோய்களான தடுமல், சளி, காய்ச்சல் போன்றன தொடங்கி உடற்காயங்கள், சத்திர சிகிச்சை வரை நித்திரை பாதிக்கப்படுகின்றது. உளநல கோளாறுகளின் மிக முக்கிய அறிகுறியே தூக்க பாதிப்பாகும். இங்கு நித்திரையை ஒழுங்காக்குவதற்கு என்றே மாத்திரைகள் பாவிக்கப்படுகின்றன.



சாதாரண நித்திரை

---

எமது சாதாரண தூக்கமானது இரண்டு சக்கரங்களாக நடக்கின்றது. வேகமான கண்ணசைவுள்ள தூக்கம் (Rapid Eye Movement Sleep -REM) வேகமற்ற கண்ணசைவுள்ள தூக்கம் (Non Rapid Eye Movement Sleep – NonREM). இதில் NonREM தூக்கம் 80 நிமிடங்களாகவும், REM தூக்கம் 10 நிமிடங்கள் என மாறி மாறி நிகழும். Non REM தூக்கத்தை நான்கு வகைகளாகப்பிரிக்கலாம்.

நிலை 1. ஆரம்பநிலை தூக்கமாகும். இது ஆழமற்ற மேலெழுந்த தூக்கமாகும்.

நிலை 2. தூக்கத்தின் 45 – 50வீதம் இன்னிலையாகும்.

நிலை 3. ஆழமான தூக்கமாகும் இதில் டெல்ரா அலைகளின் மிக மத்திமமான செயற்பாடுகள் காணப்படும்.



நிலை 4. மிகஆழமான தூக்கம் இங்கு டெல்ரா அலைகளின் மிகத்தீவிரமான செயற்பாடுகளை அவதானிக்கலாம்.

REM தூக்கமானது எமது இரவு தூக்கத்தின் கடைசி மூன்றில் ஒரு பங்கு நேரமாக அமையும். இங்கு கண்கள் இயல்பான அசைவுகளை காட்டுவதோடு பல்வேறு விதமான கனவுகளும் வந்து போகும். இதயதுடிப்பு, குருதியமுக்கம், சுவாச சக்கரங்கள், கூட்டுத்தசைகள் என்பன மிகக்குறைவான வேகத்தில் இயங்கும். ஆண்களில் ஆண்குறி விறைப்பேறுதல், சொப்பனக்கனவு, விந்துபாய வெளியேற்றம் என்பனவும் இந்நேரத்தில் எற்படலாம்.

நித்திரையின்மை. (Insomnia)

---

மிகப்பொதுவான பிரச்சினை நித்திரை பிரச்சினை ஆகும். படுக்கையறையில் நித்திரைக்குச் சென்றாலும் நேரத்திற்கு நித்திரை வராதது, நீண்டநேர நித்திரையின்மை, நேரத்திற்கு கண்விழித்தல் என்பன காணப்படலாம். கட்டிளமைப்பருவ நெருக்கீடுகள், அவை ஏற்படுத்துகின்ற தாக்கங்களால் நித்திரையின்மை ஏற்படலாம். அத்துடன் அறளைபெயர்தல், மனச்சோர்வு, இருதயக்கோளாறு போதைப்பொருட்பாவனை, உழைப்பின்மை, பதகளிப்பு கோளாறுகளிலும் நித்திரையின்மை காணப்படலாம். உடல் நோய்களான காய்ச்சல், சளி, காயங்கள், சத்திரசிக்ச்சை, அதனால் ஏற்படும் வலி போன்றவற்றாலும் நித்திரை பாதிப்பு ஏற்படலாம்.

போதிய தூக்கமின்மையால் ஏற்படும் பாதிப்புகள்

---

செவிமடுத்தல், கிரகித்தல், மூளைகளில் பதிவு செய்தல், மீள் கொணர்தல் போன்ற இலக்கையடைவதற்கான அனைத்து கற்றல் செயற்பாடுகளும் பாதிக்கப்படும். பரீட்சைப் பெறுபேறுகள் எதிர்பார்த்தது போன்று அமையாது. பெற்றோர், பிள்ளைகள் மீது வைத்த நம்பிக்கை, முதலீடு, எதிர்பார்ப்பு போன்ற மனக்கோட்டைகள் மண்கோட்டையானால், அதுவே பிள்ளைகள் மீதான வெறுப்பாகும். பெற்றோரின் வெறுப்பு, சமூக நகைப்பு, எதிர்பார்ப்பு நிகழாமை என்பன மாணவர்களை விரக்திக்கு கொண்டு செல்ல, அதுவே, தற்கொலை முயற்சி மற்றும் தற்கொலையாக முடிகின்றது. தோல் வியாதிகள், முகப்பரு, மாதவிடாய் ஒழுங்கீனம், உளநலக் கோளாறுகள் என்பவற்றுடன் தூக்க பாதிப்பு மிகப் பெரிய தொடர்புபட்டுள்ளது. அதிக கோபம், மன உளைச்சல், எரிச்சல், அழுதல் என்பவற்றிற்கு காரணமாக இனங்காணப்பட்டுள்ளது. 33வீதம்- , 75வீதம் விடலைப் பருவத்தினரில் நித்திரைப் பிரச்சினை உண்டு என்பது எம்பிரீசன் மற்றும் கூக்கி இன் ஆய்வுகளில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

தூக்கமின்மைக்கான முகாமைத்துவம்

---

தூக்கமின்மையுடன் தொடர்பாக எவ்வித பிரச்சினைகளும் இனங் காணப்படாதபோது தூக்கத்தை ஒழுங்கு படுத்தவதற்கான முகாமைத்துவம் இன்றி அமையாதது. இரவில் படுக்கைக்கு போகும் நேரம், விழித்துக்கொள்ளும் நேரங்களை மிகச்சரியாக, தொடர்ச்சியாக கடைப்பிடித்தால், நாளாந்தம் கிரமமாக உடற்பயிற்சி செய்தால், பகல் பொழுதில் பிரகாசமான சூரியஒளியை அனுபவித்தல், இரவில் அதிக பிரகாசமான ஒளியைப் பார்ப்பதை தவிர்த்தல், படுக்கைக்கு போவதற்கு மூன்றுமணி நேரத்திற்கு முன்னதாக கடினமான உணவுகளையும், அதிகம் நீர் அருந்துவதையும் தவிர்த்தல். இரவு வேளைகளைத் தவிர்த்து பகல் வேலைகளில் தொழிலில் ஈடுபடுதல். படுக்கை அறை அதிக பொருட்கள் அற்ற, குளிர்மையான வர்ணப்பூச்சு, காற்றோட்டம், மெல்லிய வெளிச்சம் உடையதாக இருத்தல், மது, புகை, உற்சாக பானங்களை தவிர்த்தல், படுக்கைக்கு போவதற்கு முன் தியானம், மூச்சுப்பயிற்சி, சாந்தியாசனம் போன்றவற்றை செய்தல். படுக்கை அறையில் தொலைக்காட்சி பார்த்தல், வாசித்தல், இலத்திரனியல் பொருட்களை பார்த்தல் போன்றவற்றை தவிர்த்து, நித்திரையை விரைவாக கொண்டவருவதற்கான முயற்சியை தொடர்சியாக செய்யவேண்டும். மறுதலையாக தூக்கமாத்திரைகளுக்கு அடிமைப்படும் நிலைமை மிகமோசமான எதிர்விளைவுகளை ஏற்படுத்தும்.

## கவிதை

### மாங்காய்

நான் உயரத்தில் இருக்கின்ற மாங்காய்
சின்னப் பையனே
நீ கல் எறிகின்றாய்

என்னை உசுப்ப
உனக்கு முடியுமா
நாக்குழிப்புழுவே
பச்சைக் கிளிக்கூட்டம் என்னை
வாழ்த்திப் பாடும்
நீ மூத்திரத்தில் விளைந்த
நாக்குழி
என்னைப்போல் உயரத்தில் இருப்போரில்
உனக்கு ஒரு வயிற்றெரிச்சல்
உன் கை உயருமா
எனக்கு நீ கல் எறிய
ஆசையைப் பார் உனது அவதியைப்
பார்
உன் கனவிலும் எனக்கு நீ கல்லே
எறிகிறாய்
பட்டதா
உன் கை போதுமா
நாக்குழிப்புழு எறிந்து
இந்த மாங்காய் ஆடுமா

வளைத்திருந்து கிளிக்கூட்டம் பாட
தென்றலில் ஆடுகிறேன்
என் மனத்தில்
பூங்காற்று வந்து
என்னைத் தொட்டு முகர்கிறது

இரவுகளில் நிலவுபட்டு
நான் மாமரத்தில் வாழுவது
கவிஞனுக்குக் கிடைக்கின்ற அந்தஸ்து
கவிஞனும்
நிலா தனது தோளில்பட
உயரத்தில் இருக்கிறவன்

கவிஞனுக்கும் இப்படித்தான்
எத்தனைபேர் கல் எறிவார்
மண்புழுக்கள் அவனிடத்தில்
எடுபடுமா
அவனும் உயரத்தில் இருக்கின்ற
மாங்காய்

நானும் ஒரு கவிஞன்
கவிஞனும் என்னைப்போல்
ஒரு மாங்காய்
காயாகிக்
கனிந்து
பழுத்து மணக்கிறவன்
நீ எறியும் கல்லுக்கு சிறு சருகும்
உதிராது
சின்னப் பையனே
மூத்திரத்தில் விளைந்த மண்புழுவே

என்று மாங்காய் சொல்லிற்று
முத்து முத்தாய்
கொத்துக் கொத்தாய்

--- சோலைக்கிளி ---

தொடர்ச்சி...

தரணிபோற்றத் தமிழ் வளர்ப்போம்!

# திருக்குறள் இன்பம் - 3

எப்படியெல்லாமோ முயன்றான். இறுதியில் அவளின் கடைக்கண் பார்வை அவனுக்குக் கிடைத்து விட்டது. அது காதலாக வளர்ந்து, ஒருவரை ஒருவர் காணாமல் இருக்க முடியாத நிலைக்குக் கொண்டுவந்துவிட்டது. அவளின் அருகே இல்லாதபோது அவளது நினைப்பு அவனது உடலைச் சூடேற்றும். தேகம் எங்கும் கொதிப்பதுபோல வெப்பம் அவனை வாட்டும். உடனே எழுந்து அவளைக் காணச்செல்வான். அவளின் வீட்டை நெருங்க, நெருங்க அவன் நெஞ்சின் படபடப்பு அதிகரிக்கும். அவளின் இல்லம் சென்று அவளைக் கண்டதும் படபடப்பு அடங்கிவிடும். உடல்வெப்பம் தணிந்து போகும். அவளருகே செல்லச் செல்ல இதமான குளிர் அவனது இதயத்தையும் வருடும். அவளோடு பேசிக் களித்திருந்துவிட்டு, தன் வீடு செல்வதற்காக அவளைப் பிரியும் போது, உடல் வெப்பத்தை உணரும். தூரம் செல்லச் செல்ல வெப்பம் கூடிக்கொண்டு வரும். தன் வீடு சென்றதும், அது தணலாகச் சுடத் தொடங்கும். தாங்க முடியாமல் உள்ளம் தவிக்கும். ஏதாவது போலிக் காரணத்தைச் சொல்லிக்கொண்டு அவன் மீண்டும் அவளிடம் வருவான். அவளருகே வந்ததும் வெப்பம் குறையும், தண்ணென்ற குளிர்வாடை வீசும். சிறிது நேரம் அவளுடன் இருந்துவிட்டு, அவளை விட்டு அகலத் தொடங்கியதும், இதயத்தில் வெப்பம் ஏறத் தொடங்கும். மீண்டும் அவளிடம் வருவான். இப்படியே தன் வீட்டுக்கும் அவளின் வீட்டுக்கும் அவன் வருவதும் போவதுமாக அலைவதைப் பார்த்தவர்கள் பரிகசித்தார்கள். அவளின் தோழிகளும் அவனைப் பார்த்து நகைத்தார்கள். அவர்களிடம் அவனுக்குக் கோபம் வருகிறது. என்றாலும் அடக்கிக்கொண்டு அவர்களிடம் பேசுகிறான். " இங்கே பாருங்கள்! நெருப்பு என்றால் அருகில் சென்றால் சுடும், அகன்றுவிட்டால் சுடாது. ஆனால், இவளோ வித்தியாசமாக இருக்கிறாளே! அவளை விட்டுச் சென்றால் சுடுகிறாள். கிட்டச் சென்றால் குளிர்கிறாள். இப்படிப்பட்ட நெருப்பை அவள் எங்கிருந்து பெற்றுக்கொண்டாள்? சொல்லுங்களேன்!" என்று ஓர் அப்பாவிபோலக் கேட்கிறான். காதல் வயப்பட்ட ஓர் இளைஞனின் இதயத்து உணர்வுகளை இந்தக் குறளில் வள்ளுவர் கூறியிருக்கும் விதம் எவ்வளவு உண்மையானது என்பதைக் காதலித்தவர்கள் எண்ணிஎண்ணி வியந்து மகிழ்வார்கள்.

நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்
தீயாண்டுப் பெற்றாள் இவள் (1104)

தூரச் சென்றால் சென்றால் சுட்டெரிப்பதும், அருகே சென்றால் குளிர்ச்சியாக இருப்பதுமான வித்தியாசமான தீயை இவள் எங்கிருந்து பெற்றுக்கோண்டாள்? (என்று தெரியவில்லையே) என்பது குறளின் நேரடிக்கருத் தாகும்.

(தொடரும்)

தொடர்ச்சி...

## நடந்தாய் வாழி களனி கங்கை .....

### ஆமர் வீதியில் மேதினமன்று கொல்லப்பட்ட ரணசிங்க பிரேமதாச

பிரேமதாச உட்பட 17 பேரின் உயிரையும் போக்கினான்.

அந்த இடத்தில் நினைவுத்தூபி அமைந்துள்ளது. தலைநகரின் பிறிதோர் இடத்தில் அவருடைய முழுஉருவ வெண்கலச்சிலை நிர்மாணிக்கப்பட்டு வருடந்தோறும் அஞ்சலி செலுத்தப்படுகிறது.

களனி கங்கை தீரத்தில் நடந்திருக்கும் அரசியல் கொலைகள் அதிகம். கிராண்ட்பாஸ் அருகில் பாலத்துறை என்ற இடத்திலும் ஒரு தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் முன்னாள் காணி, நீர்ப்பாசன மகாவலி அபிவிருத்தி அமைச்சர் காமினி
திஸாநாயக்க, கொலன்னாவ நாடாளுமன்ற உறுப்பினர் வீரசிங்க மல்லிமாராச்சி உட்பட பலர் தற்கொலைக்குண்டுதாரியினால் கொல்லப்பட்டனர்.

ஓடும் கங்கை மனித உடலங்களையும் தன்னோடு அழைத்துச்சென்றிருக்கிறது. அதன் தீரங்களில் நடந்த பல கொலைச்சம்பவங்களில், அரசியல் தலைவர்கள், பாதாள உலகத்தலைவர்கள், சாதாரண பொதுமக்கள், சமூகவிரோதிகள், தண்டனை பெற்ற குற்றவாளிகள் பலரும் பலியாகினர்.

நடந்து செல்லும் களனி கங்கையின் வரலாறும் இத்தகைய துன்பியல்களையும் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

(தொடரும்)

தொடர்ச்சி...

## பெத்தாவின் எந்திரன் அக்காக்கள்

இரண்டையும் கட்டத்தொடங்கினா பெத்தா.. இன்னும் ஓரிரு செக்கனில் எல்லோரும் அழுவார்கள் ... என்னையும் கட்டி அணைத்து . யுவராசாவும் தாயுடன் வருவான் ..

பெருவிரல்களை கட்டிக்கொண்டிருந்தபோது ஏதோ ஒரு அசைவில் பெரிய பெத்தாவின் கால் பெருவிரல்கள் விலத்த பெத்தா சொல்கிறா

"டீயே சும்மா கிட.. இன்னும் வாழத்தானோகா பார்க்கிறாய் நீ..?"
அழ காத்துநின்ற எல்லோருமே சிரித்து விட்டார்கள். நானும் தான்.
பெரிய பெத்தாவின் உடலை கொண்டுபோக தூக்கியபோது அழுதார்கள். பெத்தாவை தவிர்த்து. பெத்தா ஒரு சொட்டு கண்ணீர் கூட விடவில்லை அன்றிரவு வாசலில் சீட்டு விளையாடிக்கொண்டிருந்த போது வீட்டுக்குள்ளிருந்து பெத்தா அழும் சத்தம் கேட்டு எல்லோரும் ஓடினோம். "எண்ட அக்கேய் ... நீ போயிற்றியே அக்கேய்.. எனக்கினி ஆரக்கேய் இருக்கா..."

குத்து விளக்கடியின் நீர்ச்செம்பை பார்த்தபடியே அழுதுகொண்டிருந்த பெத்தா மீண்டும் பெரும் குரலெடுத்து அழுதா.

"எண்ட அக்கேய்.. இவ்வளவு தண்ணிவிடாயோடையோ அக்கேய் நீ திரியுறாய்.. இஞ்சபாருங்கப்பா எண்ட அக்கைய்ட தண்ணிவிடாய...

நிறைந்த தண்ணீர் செம்பின் வாயிலிருந்து பல்லி ஒன்று இறங்கிபோனது. நான் சுவரை நோக்கினேன் எந்திரன் ரஜனிகள் போல சுவரெல்லாம் பெத்தாவின் அக்காக்கள்.

தொடர்ச்சி...

## சிறுகதை:

## அம்மாவைத்தேடி ஒரு மகளின் பயணம்

முகப்பிலேயே மிஸ்டர் அன்ட் மிஸிஸ் ஒஸ்கோவிச் என எழுதி இருந்தது.

உள்ளே ஒஸ்கோவிசின் படமும், ஜேனின் குழைந்தைப் பருவப் படமும் இருந்தது.

எல்லாம் தமிழிலேயே இருந்ததால் லிங்கநாதனே வாசித்துச் சொன்னார்.

"ஆமிதான் கொண்டுவந்து சேர்த்து இருக்காங்க. இறுதி யுத்தம் நடந்த் இடத்தில்தான் கன்டெடுத்ததா சொல்லி இருக்காங்க. வேறு எந்த தகவலும் இல்ல. நாங்களும் எல்லா அகதி முகாமிலும் இந்தப் பிள்ளையின் போட்டோவை ஆறுமாசம் நோட்டிஸ் ஒட்டி வைத்தும் யாரும் வராததால்தான் தத்துக்கொடுத்தோம்.

இந்தப்போட்டோவைப் பார்த்ததும்தான் ஞாபகம் வருது....

இவள் அப்போவே சுட்டி. ஆமி கொண்டுவரும்போதே நெற்றியில ஒரு பெரிய கறுப்புக் கலர் பொட்டும் கன்னத்தில் சின்ன பொட்டோடும்தான் இருந்தாள், அப்போ என் இல்லத்தில் பிள்ளைகளைப்பார்த்துக்கொண்ட ஆயாவும் அப்படியே ஒவ்வொரு நாளும் இவளுக்குப் பொட்டு வைத்துவிடுவா."

ஜேன் போட்டோவை வாங்கிப்பார்த்தான். தலைமயிரை வாரி இழுத்து பெரிய பொட்டு நெற்றியிலும் கன்னத்திலும் இருந்தது. அப்படி அவள் இருந்திருப்பாள் என்று கற்பனைகூட செய்ததில்லை. அவன் பார்த்த அவளது சின்ன வயதுப்போட்டோ எல்லாம் ஸ்டைலாக ஜீன்ஸ் டீ சேர்ட், சோர்ட் ஸ்கேர்ட் என போட்டிருந்த போட்டோதான்.

நீண்ட நேரமாக போட்டோவையே பார்த்துக்கொண்டிருந்தாள்...

"ஒன்னும் யோசிக்காதீங்க மெடம், போட்டோ இருக்குத்தானே, பேப்பரில விளம்பரம் போட்டு கண்டு பிடிச்சிடலாம் " அங்கே நிலவிய மௌனத்தை உடைத்தான் மனோகர்.

"இந்த போட்டோவை நான் எடுத்துக்கலாமா மிஸ்டர் லிங்கநாதன்"

"ஓம் " தலையாட்டினார் லிங்கநாதன்.

"தாங் யூ"

"நேரம் இரவு எட்டு மணியாகி இருந்தது. நாளைக்கே விளம்பரம் போட்டு விடுவோம் மெடம்." மூவரையும் ஹொட்டலுக்கு அழைத்துப்போனான் மனோகர்.

அடுத்த நாள் காலை அறைக்கு வெளியே இருந்த கதிரையில் இருந்து டீ குடித்துக்கொண்டிருந்தாள் ஜேன். மேசையில் இருந்த தமிழ்ப் பேப்பரின் முன்பக்கத்தில் இருந்த போட்டோவைப்பார்த்தாள்.
ஆச்சரியம் .....

தன் பொக்கட்டில் இருந்த போட்டோவை எடுத்துப் பார்த்தாள். அதே முகம் !

"மனோகர் மிஸ்டர் மனோகர் " சத்தம் கேட்டு பயந்துபோய் ஓடிவந்தான் மனோகர்
"என்ன மெடம் என்ன பிரச்சினை?"

"இங்க பார் என்ட சின்ன வயசு போட்டோ பேப்பரில ..இது என்ன நியூஸ்?"

முன்பக்கத்தில் ஒரு வயதான பெண் கையில் வைத்திருந்த இரன்டு போட்டோக்களில் ஒன்று ஜேனினுடையது.

"இது காணாமல் போனவங்களைக் கண்டுபிடித்துத் தரச் சொல்லி நடக்கும் உண்ணாவிரதத்தில எடுத்த போட்டோ மெடம் வாங்க உடனே அங்கே போவோம் "

சரியாக ஒன்றரை மணி பயனத்தில் கிளிநொச்சியில் உண்ணாவிரதம் நடந்த இடத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

முன் வரிசையிலே சோர்வாக உட்காந்துகொண்டிருந்தாள் இராசம்மா.

கையில் இரண்டு போட்டோ வைத்திருந்தாள். ஒன்று ஜேனின் பொட்டு வைத்த சின்ன வயதுப் போட்டோ மற்றது புஷ்பாவினுடையது.

"பாட்டி உங்க போரட்டம் வீணாகல உங்க பேத்தி உங்களைத்தேடி வந்திருக்கா." நடந்ததையெல்லாம் சொல்லி மனோகர் முடிக்க நிமிர்ந்துபார்த்தாள். கொஞ்சநேரம் பேச்சு வரவில்லை.
"என்ட பேத்தியா இது? ஐயோ சாமி என்ட பேத்தியைக் கண்ணுல காட்டிற்றாய் முறிகண்டியானே ...." ஒற்றைக்காலுடன் எழும்பிக் கட்டிப்பிடிக்க முடியவில்லை .

"உங்க அம்மம்மா மெடம்" ஜேனிடம் சொன்னான் மனோகர் .

"கிரான்ட்மா ...."குனிந்து கைகளைப் பற்றிக்கொண்டவள் அப்படியே இராசம்மாவைக் கட்டிப்பிடித்தாள்.

"அம்மம்மா ...என்ட அம்மா,அப்பா...?"மனோகர் மொழி பெயர்த்தான்.

உன்ட அப்பன் அப்போவே ஷெல் அடிச்சுத் செத்துப்போயிட்டான், இந்தா போட்டோவில என்ட மகள் புஷ்பா... இதுதான் உன்ட அம்மா, கடைசியா முல்ளிவாய்க்காலிலதான் உங்க ரெண்டுபேரையும் பார்த்தன், அதுக்குப்பிறகு இப்படித்தான் போட்டோவோட வீதி வீதியா தேடிக்கொண்டிருக்கன் நித்திலா"
இதையும் மனோகர் மொழி பெயர்த்தான்.

நித்திலா, ஜேனுக்கு அம்மா புஷ்பா வைத்த பெயர்.

இரசம்மாவிடம் தன் அம்மாவின் போட்டோவை வாங்கிப் பார்த்த ஜேன் கொஞ்சநேரம் எதுவும் பேசவில்லை. அதை தன் நெஞ்சோடு அழுத்தியவாறு அம்மா அம்மா என்று முணுமுணுத்தாள். அப்படியே இரசம்மாவுக்குப் பக்கத்திலேயே அமர்ந்துகொண்டாள்.

ஒஸ்கோவிச் தன் மனைவியின் கைகளை இறுகப்பற்றிக்கொண்டார்.

அவர்கள் இருந்த பந்தலின் மேலே எழுதியிருந்தது.

"காணாமல்போன எங்கள் உறவுகள் எங்கே? எங்கள் உறவுகளைத் திருப்பித்தா அரசே! அதுவரை எங்கள் போராட்டம் தொடரும் !"







Printed and Published by Arangam News (Pvt)Ltd No 227 Bar Road Batticaloa